# உதயன்

பக்கங்கள் 26

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 101 வள்ளுவர் ஆண்டு 2044 மாசி 23 வியாழக்கிழமை (07/03/2013) UTHAYAN - A Lively National Tamil Daily


## காணாமற்போனவர்களின் உறவுகள் திரண்டு

# வவுனியா செயலகம் முன் நேற்று முற்றுகைப் போர்

### ஏ-9 வீதியை மூடி ஆர்ப்பாட்டம்; உறவுகளைத் தருமாறு வானதிரக் கோஷம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கில் காணாமற்போனவர்களின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட உறவுகள் வவுனியா மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றுப் பெரும் போராட்டம் நடத்தினர்.

கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொள்ள வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற இந்த மக்களை பொலிஸார் வவுனியாவில் வேண்டுமென்றே தடுத்து நிறுத்தியதால், ஆத்திரமுற்ற அவர்கள் வவுனியா மாவட்ட செயலகம் முன்பாக ஏ-9 வீதியை மறித்துப் போராட்டத்தில் குதித்தனர்.

அதன் காரணமாக ஏ-9 வீதியூடான போக்குவரத்து ஒரு மணி நேரத்துக்கும் மேலாகத் தடைப்பட்டது.

மக்கள் போராட்டத்துக்கு மதிப்பளித்த வவுனியா மாவட்டச் செயலக அதிகாரிகள், காணாமற்போனோரின் உறவுகளின் மனுவை வந்து பெற்றுக் கொண்டனர்.

காணாமற் போனோரின் உறவுகளால் கொழும்பில் நேற்று புதன்கிழமை கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

பார்க்க பக்கம் 04



தமது உறவுகளைத் தேடி வவுனியாவில் நேற்றுப் போராட்டம் நடத்திய தாய்மா[illegible] நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனிடம் தமது பிள்ளைகளை மீட்டுத் தரக் கோரிக் கதறுகின்றனர்.

### தடைகளையும் தாண்டி கொழும்பில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

வடக்கு, கிழக்கில் காணாமல்போனவர்களின் உறவினர்கள் மற்றும் தடுப்பிலுள்ளவர்களின் உறவினர்கள் நூற்றுக்கணக்கானோர் ஒன்று திரண்டு திட்டமிட்டபடி கொழும்பில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

இந்தப் போராட்டத்தில் சில வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டு மக்களின் குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் உறவினர்களினால் இந்தக் கவனவீர்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

பார்க்க பக்கம் 04

## அமெரிக்கா கடும் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 7

காணாமல் போனவர்களின் நூற்றுக்கணக்கான குடும்ப அங்கத்தவர்கள் வடக்கிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்தபோது அதிகாரிகளால் வவுனியாவில் வைத்து தடுக்கப்பட்ட சம்பவம் குறித்து அமெரிக்கத் தூதரகம் கவனம் செலுத்தியுள்ளது.

இதுதொடர்பில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இந்தக் குடும்ப அங்கத்தவர்கள் காணாமற் போன தமது அன்புக்குரியவர்கள் தொடர்பான தகவல்களைக் கோரி நிற்பவர்களாவர்.

பார்க்க பக்கம் 04

## விடாப்பிடி வேண்டாம்

### இலங்கைக்கு இந்தியா ஆலோசனை

புதுடில்லி, மார்ச் 7

இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வரும் நிலையில், இந்த விவகாரத்தில் பிடிவாதம் பிடிக்காமல், மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும் என்று, இலங்கையிடம் இந்தியா கூறியுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு

பார்க்க பக்கம் 04

### உள்ளே....


சனல்–4 தொலைக் காட்சிக்கு கருணாநிதி பாராட்டு 8

வெனிசுவேலா அதிபர் சாவு 9

நகர்ந்தது தாழமுக்கம்; மழை குறையும் 15

மலிங்க மீது விசாரணை 23


## அமெ. பிரேரணை 21 இல் விவாதம்

ஜெனிவா, மார்ச் 7

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் பிரேரணை எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஏலீன் சம்பர்லேன் டொனஹோ இந்தப் பிரேரணையை 14 ஆம் திகதி சபையில் முன்வைப்பாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக கடந்த வாரம் மேற்படி பிரேரணையின் நகல் பிரதிகளை ஜெனிவாவில் வைத்து இராஜதந்திரிகளுக்கு அமெரிக்கா வழங்கியிருந்தது. அந்த நகலின் சில முக்கியமான யோசனைகளும் சேர்க்கப்படவேண்டுமென அமெரிக்காவிடம் லத்தீன் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் சுட்டிக் காட்டியிருந்தன.

இதனால் புதிய திருத்தங்களுடன் மேலும் பல முக்

பார்க்க பக்கம் 04

## ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு தமிழர் படுகொலை விவகாரம்

### நவிப்பிள்ளையிடம் புலம்பெயர் தமிழர்கள் கோரிக்கை

ஜெனிவா, மார்ச் 7

இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 22 ஆவது கூட்டத்தொடரில் கண்டனத் தீர்மானமொன்று கொண்டு வரப்படவுள்ளது.

இந்நிலையில், இலங்கைத் தமிழர் இனப்படுகொலை விவகாரத்துக்கு நீதி வேண்டி பாதுகாப்புச் சபைக்கு அறிவித்து, சர்வதேச ஆணைக்குழு ஒன்றை நியமிக்க ஆவன செய்யுமாறு மனித உரிமைகள் ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளையைக் கோரும் மனு ஒன்று புலம்பெயர் தமிழர்களால் சுவிஸ் தமிழர் நிலையத்தினூடாக கையளிக்கப்பட்டது. கடந்த திங்கட்

பார்க்க பக்கம் 04



## 'மிஹின் லங்கா' அலுவலகம் மதுரையில் அடித்து உடைப்பு

மதுரை, மார்ச் 7

தமிழகம் எங்கும் இலங்கை அரசு மீதான எதிர்ப்புப் போராட்டங்கள் வலுவடைந்து வருகின்றன. ஜெனிவாவில் இலங்கை அரசு மீது அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்கவேண்டும் எனக் கோரியும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைப் போர்க் குற்றவாளியாக அறிவிக்குமாறு கோரியும் பரவலாகப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மதுரையிலும் இலங்கை அரசுக்கு எதிரான போராட்டங்கள் தற்போது வலுவடைந்து வரும் நிலையில், இலங்கை விமான நிறுவனமான 'மிஹின்லங்கா' அலுவலகத்தை நாம் தமிழர் கட்சியை சேர்ந்

பார்க்க பக்கம் 04


அரிய வாய்ப்பு

கனடாவில் படிக்க, உழைக்க விசா ஆலோசனை

4 மாதத்தில் செல்ல விசா ஆலோசனை

திசைகாட்டி (பிறைவேற்) லிமி

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090

7 நாள்களும்

காலை 8.30 - மாலை 6.30 வரை


## சிப்பாய்க்கு சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 7

சிப்பாயைச் சுட்டுக் கொலை செய்த குற்றச்சாட்டில் சக சிப்பாய்க்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், கொலையல்லாத மரணத்தை விளைவித்ததாக

பார்க்க பக்கம் 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க் குற்ற சுயாதீன விசாரணையை இலங்கை மீது உடன் ஆரம்பியுங்கள்

## காணாமற்போனோரின் உறவுகள் ஐ.நாவுக்குக் கடிதம்

வவுனியா, மார்ச்.07
எங்களுடைய பிள்ளைகள் மற்றும் உறவுகள் எங்களுக்கு வேண்டும். இலங்கை அரசின் மீது போர்க்குற்ற சுயாதீன விசாரணைகளை உடன் ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் உட்படப் பதினொரு கோரிக்கைகள் அடங்கிய மனு ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகளுக்கும், இலங்கை அரசுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண காணாமல்போன உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தினால், வவுனியா மாவட்ட மேலதிக அரச அதிபரூடாக இந்த மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காணாமல்போனோரின் உறவுகளினால் வவுனியாவில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவிலேயே மேற்படி மனு கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இன முரண்பாடுகள் முனைப்புப் பெற்ற காலம் முதல் இன்றுவரை எமது உறவுகள் பல்லாயிரக்கணக்கானோர் இராணுவத்தினராலும், பொலிஸாரினாலும், அரசின் புலனாய்வுப் பிரிவினராலும், ஆயுதம் தரித்த முகமூடி நபர்களாலும் காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டிலிருக்கும் போது இராணுவத்தினரால் வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்லப்பட்டும், வீதியில் சென்று கொண்டிருக்கும் போது வெள்ளைவான்களில் கடத்திச் செல்லப்பட்டும், காணாமல் போகச் செய்யப்பட்டனர் எங்கள் உறவுகள்.

இறுதிப்போரின் போது எங்கள் கண் முன்னாலேயே எங்களிடமிருந்து பிரித்துச் செல்லப்பட்டும், படையினரிடம் சரணடைந்தும் காணாமல் போயுள்ளனர். இறுதிப் போரில் ஒரு இலட்சத்துக்கு அதிகமானோர் காணாமல் போயுள்ளனர், அவர்களின் நிலை இதுவரை தெரியாது.

பொலிஸார், மனித உரிமை அமைப்புக்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு என்று எல்லா அமைப்புக்களிடமும் முறைப்பாடு செய்து விட்டோம். சிறைச்சாலைகள், தடுப்பு முகாம்களிலும் சென்று பார்த்துவிட்டோம். எங்கள் பிள்ளைகளைக் காண்பிக்கின்றோம் என்று சொன்ன பணப் பேராசை கொண்ட துரோகிகளிடமும் இலட்சக்கணக்கில் பணத்தைப் பறிகொடுத்து விட்டோம்.

கணவன்மாரை, பிள்ளைகளை இழந்த நாங்கள் பல்வேறு இம்சைகளுக்கும், பாலியல் வன்புணர்வுகளுக்கும் உள்ளாக்கப்பட்டு வருகின்றோம். குடும்பத்துக்கு தலைமை தாங்குபவர்களை இழந்து ஒரு நேர உணவுக்கே அவதிப்படுகின்றோம். எங்கள் பிள்ளைகளுடைய வயிற்றுப் பசியைப் போக்க கூலி வேலை செய்கின்றோம்.

எங்களது உறவுகள் என்றாவது ஒரு நாள் வருவார்கள் என்ற ஏக்கத்தோடு எதிர்பார்த்தும் பயனின்றி நாள்கள் கடந்து கொண்டேயிருக்கின்றன.

பாதிக்கப்பட்ட நாங்கள் ஒன்று சேர்ந்து இலங்கை அரசிடமும், உலக நாடுகளிடமும், ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் பங்கெடுத்திருக்கின்ற நாடுகளிடமும் எங்களின் கோரிக்கைகளை முன் வைக்கின்றோம்.

★ நாங்கள் இந்த நாட்டில் சுய நிர்ணய உரிமையோடு, சம உரிமை கொண்ட மக்களாக வாழ வழி செய்தல்

★காணாமல் போயுள்ள உறவுகளை அரசு தேடிக் கண்டு பிடித்துத் தர வேண்டும். தடுத்து வைத்திருந்தால் விரைவாக விசாரணை செய்து விடுதலை செய்ய வேண்டும்.

★உலக நாடுகளும், ஐ.நா. சபையும் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

★ எங்களை நாளாந்தம் சந்தேகக் கண் கொண்டு பார்க்கின்ற இராணுவமும் உளவுப் படைகளும் விலக வேண்டும்.

★தடுப்பு முகாம்களிலிருந்து விடுதலை செய்கின்ற எமது பிள்ளைகள் மீண்டும் விசாரணை என்ற பெயரில் கைது செய்யப்படுவதையோ, துன்புறுத்தப்படுவதையோ நிறுத்த வேண்டும்.

★இனியும் காணாமல் போகச் செய்தல், சட்டத்துக்குப் புறம்பான கைதுகள், தடுத்து வைத்திருத்தல் நிறுத்தப்பட வேண்டும்.

★இறந்தவர்களுக்குப் பொது மயானம் அல்லது நினைவுத் தூபி அமைத்து அஞ்சலி செலுத்தி ஆறுதல் அடைய வழி சமைக்க வேண்டும்.

★பெண்கள் தலைமை தாங்குகின்ற குடும்பங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த உதவிகள் செய்யப்பட வேண்டும்.

★இலங்கை அரசின் மீதான போர்க்குற்ற சுயாதீன விசாரணையை மேற்குலகம் உடன் ஆரம்பிக்க வேண்டும்.

★தமிழ் மக்களாகிய எங்களுடைய பாதுகாப்பையும், சுதந்திரத்தையும், உரிமைகளையும் மேற்குலகமும், இந்தியாவும் உறுதிப்படுத்த வேண்டும்.

இறுதியாக, எங்களுடைய பிள்ளைகள் மற்றும் உறவுகள் எங்களுக்கு வேண்டும் என்றுள்ளது.

(த-5)

## இந்திய நாடாளுமன்றத்தில் இன்று ஈழத் தமிழர் விவாதம்

### நெருக்கடியில் மத்திய அரசு

புதுடில்லி, மார்ச்.07
தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் வற்புறுத்தல் காரணமாக, இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை விவாதம் நடைபெறுகிறது.

இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை சபைக் கூட்டத்தில் அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகளும், தமிழ் அமைப்புகளும் வற்புறுத்தி வருகின்றன.

ஆனால் இந்தியா இந்த விடயத்தில் தொடர்ந்து மௌனமாக இருந்து வருகிறது. இதனால் தமிழகத்தில் தங்களுக்கு இருக்கும் ஆதரவுத் தளம் காணாமல் போய்விடும் என தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் இடையே அச்சம் பரவியுள்ளது.

இந்நிலையில் தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தியை சந்தித்து, இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.

மேலும் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விவகாரத்தில் மத்திய அரசை நெருக்க நேற்று முன் தினம் கறுப்புச் சட்டை அணிந்து நாடாளுமன்ற வளாகத்தில் திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதையடுத்து இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து நாடாளுமன்றத்தில் இன்று குறுகிய விவாதம் நடத்த மத்திய அரசு முன் வந்துள்ளது.

ஒரு வாரத்துக்கு முன்பு மாநிலங்களவையில் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து விவாதம் நடைபெற்றது. அதேபோல் இப்போது மக்களவையிலும் விவாதம் நடைபெற இருக்கிறது. (த)

## மத்தளவில் அமெ. விமானம்

அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையத் திறப்பு விழாவன்று அமெரிக்காவில் இருந்து புறப்படும் சிறப்பு வாடகை விமானம் ஒன்றை அங்கு தரையிறக்குவதற்கு இலங்கை அரசு கடும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இந்த விமான நிலையத் திறப்பு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மத்தள விமான நிலையத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

அந்த நேரத்தில், அமெரிக்காவில் இருந்து வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானம் ஒன்றை அங்கு தரையிறக்குவதற்கு, வோசிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவரும், ஜனாதிபதியின் உறவினருமான ஜாலிய விக்கிரமசூரிய நடவடிக்கை எடுத்து வருகிறார். (த)

## ஐ.நாவுக்கும் கூட்டமைப்புக்கும் எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்.07
ஐ.நாவுக்கு எதிராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவும் கொழும்பு விகாரமாதேவி பூங்கா முன்றலில் சிங்களக் கடும் போக்காளர்களால் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் காணாமல்போனோரின் உறவுகள் அங்கு கவனவீர்ப்புப் போராட்டம் நடத்திய பின்னர் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் காணாமற்போனோரின் உறவுகள் கொழும்பில் நடத்திய கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்குபற்றவிருந்த வடக்கு மக்களைப் பொலிஸார் வவுனியாவில் தடுத்து வைத்திருந்தனர். இதனால் வடக்கு மக்கள் கலந்து கொள்ளாத போதும் ஏனைய மாகாணங்களிலிருந்து வந்தவர்கள் கொழும்பில் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தி முடித்துக் கலைந்து சென்ற பின்னர் அங்கு வந்த சிங்களக் கடும்போக்கு அமைப்பைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடத்தத் தொடங்கினர்.

சிங்களத்திலும், தமிழிலும் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கிப் பிடித்தவாறு அவர்கள் போராட்டம் நடத்தினர்.

ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராகவும் கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

''சுரேஷ் பிரேமச்சந்திரனே! போர்க் காலங்களில் யாழ்ப்பாணத்தில் உங்களால் நடத்தப்பட்ட சித்திரவதை முகாம்களில் கொலையானவர்கள் யார்? இது குறித்து ஐ.நா. விசாரணை நடத்துமா?'', ''புலிகளால் கடத்தப்பட்ட எமது உறவுகளை மீட்டுத்தா'', ''ஜெனிவா சென்ற கூட்டமைப்பு உறுப்பினர்களைக் கைது செய்'' போன்ற கோஷங்களை எழுப்பியும், பதாகைகளைத் தாங்கியும் அவர்கள் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தின் முடிவில் கொழும்பிலுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தில் மனு கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. (த-5)

## வாசகங்களைப் பொறுத்தே அமெ. பிரேரணைக்கு ஆதரவு

### இந்தியப் பிரதமர் தெரிவிப்பு

இந்தியா, மார்ச் 7
இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணையில் குறிப்பிடப்படும் வாசகங்களை ஆராய்ந்த பின்பே அதை ஆதரிப்பதா? இல்லையா? என்ற முடிவுக்குத் தாம் வர முடியுமென இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்துள்ளார்.

நேற்று இந்திய நாடாளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்க நகலினை ஆராய்ந்த பின்பே எமது இறுதி முடிவைக் கூறமுடியும்.

இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசு மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகிறது.

இதேவேளை, இலங்கை அரசமைப்பினை 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அந்த நாட்டு அரசை வலியுறுத்துவோம்.

அதுமட்டுமல்லாமல் இலங்கையில் நடைபெற்றுவரும் மறுவாழ்வுப் பணிகளில் இலங்கை அரசுடன் இணைந்து நாம் செயற்படுவோம் - என்றார். (உ-16)

## 'பிள்ளையை மீட்டுத் தாருங்கள்' கொழும்பில் தாய்மார் உருக்கம்

''ஐயோ... எனது பிள்ளை மணிவண்ணனை என்னிடம் மீட்டுத் தாருங்கள். உங்களுக்குப் புண்ணியமாப் போகும். எனது பிள்ளை உயிருடன்தான் இருக்கிறான் என்று பூஸா, வவுனியா முகாம்களிலிருந்து கடிதங்கள் வந்தன. ஆனால், கடத்தப்பட்டு 7 வருடங்களாகியும் என் பிள்ளை திரும்பி வரவேயில்லை. என் பிள்ளையை எப்படியாவது மீட்டுத் தாருங்கள். என் பிள்ளையைத் தவிர எனக்கு வேறு யாருமில்லை......''

- இவ்வாறு கொழும்பு ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்வதற்காக வந்த கடத்தப்பட்ட மகனின் தாயொருவர் கண்ணீர் மல்க அங்கு வந்திருந்த அரசியல் வாதிகள் மற்றும் மதத் தலைவர்களின் கால்களில் விழுந்து கதறியழுது புலம்பினார்.

தனது மகனைப் பிரிந்து நரக வேதனை அனுபவித்துக் கொண்டிருக்கும் தாய், கதறியழுதபடி தனது துன்பத்தை எடுத்துரைத்தபோது அங்கு வந்திருந்த எதிர்க்கட்சி அரசியல்வாதிகள், மத குருமார், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் நிலைகுலைந்து போயினர். பின்னர் தங்களைச் சுதாகரித்துக்கொண்டு அழுது புலம்பிய தாயை ஆறுதல் படுத்தினர்.

''கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 12ஆம் திகதி கடத்தப்பட்ட எனது மகன் மாணிக்கம் ஈஸ்வரனை (வயது - 37) எப்படியாவது என்னிடம் மீட்டுத் தாருங்கள். என் மகன் வருவான் என்ற நம்பிக்கையில்தான் நான் இன்னமும் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறேன்'' என்று கண்ணீர் சிந்தியபடி தனது துயரத்தை அழுது புலம்பினார் காரைநகரைச் சேர்ந்த மற்றொரு தாயாரான மாணிக்கவாசகம் இராஜேஸ்வரி.

இதேவேளை,

''எனது மகன் லோகநாதன் பிரதீபன் (வயது - 25) கடத்தப்பட்டு 5 வருடங்களாகியும் இன்னமும் திரும்பிவரவேயில்லை. அவர் இப்போது எங்கிருக்கிறாரோ? என்ன செய்கிறாரோ? ஒன்றுமே தெரியவில்லை.

என்னென்ன துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறானோ தெரியவில்லை. அவனை எப்படியாவது என்னிடம் மீட்டுத் தாருங்கள்'' - என்று அங்கு வந்திருந்த மற்று மொரு தாயும் அழுது புலம்பியதை காணக்கூடியதாக இருந்தது.

## சந்தேகநபர்கள் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச்.07
மல்லாகத்தில் யுவதி ஒருவரை வன்புணர்வு செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இருவரை நிரபராதிகளாக இனங்கண்ட யாழ். மேல் நீதிமன்றம் அவர்களை விடுவித்தது.

2009 ஆம் ஆண்டு ஜூன் மாத காலப்பகுதியில் மல்லாகத்தைச் சேர்ந்த யுவதி ஒருவரைக் கடத்திச் சென்று வன்புணர்வு செய்ததாக பிரஸ்தாப யுவதி பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

மல்லாகம் கோட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை துஷியந்தன், சின்னராசா லிங்கேஸ்வரன் ஆகிய இருவரும் பொலிஸாரால் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

குற்றங்களும் நிரூபிக்கப்படாமையால் இருவரையும் விடுதலை செய்தது நீதிமன்று. (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் சுகாதாரப் பணிமனைக்கு

# நிரந்தரக் கட்டடம் அமைக்க ஒதுக்கிய நிதி திரும்பும் நிலை

## பொருத்தமான காணி இன்மையே காரணம்

*யாழ்ப்பாணம், மார்ச் 7*

*நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதும் கட்டடம் அமைப் பதற்கு காணி இதுவரை கிடைக்காமையால் அந்த நிதி திரும்பிச் செல்லும் நிலை தோன்றியுள்ளது என்று நல்லூர் பிரதேச சுகாதார வைத் திய அதிகாரி திருமதி.ரி.திரிபுவனசுந்தரி தெரிவித்துள்ளார்.*

நல்லூர் பிரதேசத்தில் பொருத்தமான காணியை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு தந்துதவி சேவையாற்ற ஒத்துழைக் குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜன வரி மாதத்தில் இருந்து கோப் பாய், நல்லூர் ஆகிய இரண்டு சுகாதார வைத்திய அதிகா ரிகள் பணிமனைகளும் தனித் தனியே பிரிந்து இயங்கி வரு கின்றன.

இதில் நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணி மனைக்கு நிரந்தரக் கட்டடம் இல்லாமையால், கொக்கு வில் பிரதேச சபை உப அலு வலகத்திலும் தற்போது கோண்டாவில் வைத்திய சாலையின் ஒரு சிறிய பகு தியிலும் நெருக்கடிக்கு மத் தியில் இயங்கி வருகின்றது.

நிரந்தர கட்டடம் அமைக்க வேண்டியதன் அவசியம் சுகா தார அமைச்சுக்கு தெரியப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கப்பட்டு நீண்ட காலமாகியும் , நல்லூர் பிர தேச எல்லைக்குள் காணி களைப் பெற முடியாத நிலை யில் அரியாலை பூம்புகாரில் அரச காணி ஒன்று இனங் காணப்பட்டுள்ளது.

நல்லூர் சுகாதார வைத் திய அதிகாரி பணிமனை, கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி மற்றும் நல் லூர் பிரதேசங்களை உள்ள டக்கி மக்களுக்கு சேவை யாற்றுகின்றது. புதிய பணி மனையைப் பூம்புகாரில் அமைக்கும் பட்சத்தில் மக் களுக்கு உரிய சேவைகளை வழங்குவதில் சிரமங்களை அனுபவிக்க நேரிடும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனவே நல்லூர் பிர தேசத்தில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை அமைப்பதற்கு காணி வழங்கி உதவுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-5)

## வேலணை சுகாதார பிரிவில் டெங்கு ஒழிப்புச் செயற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 7

வேலணை சுகாதார வைத் திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட பகுதியில் டெங்கு ஒழிப்பு செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் சகல பகுதிகளிலும் சுழற்சி முறையில் சிரமதான நிகழ் வுகள், டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்குகள் என்பன தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இந்தப் பிரதேசத்தில் பாட சாலைகள் மற்றும் பொது இடங்களில் இந்த விழிப் புணர்வு கருத்தரங்குகள் மற்றும் செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன.

அதனை விட பொது இடங் களில் அடர்ந்து வளர்ந்தி ருக்கும் பற்றைகள், செடிகள் என்பனவும் வெட்டி அழிக் கப்பட்டு வருகின்றன.

நுளம்பின் பெருக்கம் அதி கமாக காணப்படும் பிரதேசங் கள் இனங்காணப்பட்டு புகை அடிக்கும் பணிகளும் இடம் பெற்று வருகின்றன. (ம-17)

## கைதடி தபாலக பெட்டகம் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7


கைதடி தபாலகத்தில் இருந்து திருடர்களால் பணத் துடன் களவாடப்பட்ட இரும்பு பாதுகாப்பு பெட்டகம் மீட்கப் பட்டுள்ளது என்று தபாலக வட் டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு இந்த தபாலகத்தை திரு டர்கள் உடைத்து அங்கிருந்த இரும்பு பாதுகாப்பு பெட்ட கத்தைத் திருடிச் சென்றி ருந்தனர்.

இந்தப் பெட்டகம் பின் னர் சிறுப்பிட்டி வயல்வெளி பகுதிகளில் இருந்து பொலி ஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பெட்டகம் உடைக்கப்பட்டு அதில் இருந்த பணம் களவாடப் பட்ட நிலையில் காணப்பட் டுள்ளது. தற்போது இந்தத் தபாலகத் திருட்டுச் சம்பந் தமான விசாரணைகளை தபாலக அதிகாரிகள் மேற் கொண்டுள்ளனர்.(ம-17)

## வடிகால்களில் கழிவு நீர் தேங்குவதால் துர்நாற்றம்



கொழும்புத்துறை,மார்ச் 7

யாழ். கே.கே.எஸ் வீதி யின் இரு ஓரங்களிலும் புதி தாக அமைக்கப்பட்ட கழிவு நீர் வடிகால்களில் நீண்ட நாள் களாக நீர் தேங்கியபடி உள் ளது. இதனால் நுளம்பு பெரு கும் அபாயம் ஏற்பட்டுள் ளது என்று விசனம் தெரிவிக் கப்படுகிறது.

வீதி அகலிப்பு இடம் பெற்று "காப்பெற்" வீதி அமைக் கப்பட்ட போது அமைக்கப் பட்ட கழிவு நீர் கால்வாய்களின் நீர் வடிந்தோட முடியாது இடையில் தடைப்பட்டுள் ளது என்று அப்பகுதி வர்த் தகர்கள் தெரிவிக்கின்றனர்.

கால்வாயில் நீர் தேங்கி நிற்பதுடன் கழிவுப் பொருள் கள் சொப்பிங் பைகள் என்ப னவும் நிறைந்து துர்நாற்றம் வீசுகிறது. இதனால் அப்பகுதி வர்த்தகர்களும் பொதுமக்களும் பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நுளம்புக் கட்டுப்பாட்டு பரிசோதனைகளின் போது நீர் தேங்கி நிற்கும் சூழலை வைத்திருப்போர் மீது நடவ டிக்கை எடுக்கப்படுகிறது. இந்த நிலையில் நகர்ப் பகு தியில் இவ்வாறான நிலை காணப்படுகிறது என்று கூறப்பட்டது.

இந்த விடயம் குறித்து உரிய அதிகாரிகள் நடவ டிக்கை எடுக்க வேண்டும் என்று வர்த்தகர்கள் கேட் டுள்ளனர். (ம-135)

## கைகலப்பில் ஈடுபட்ட நபருக்கு சிறைத் தண்டனையும் அபராதமும்

யாழ்ப்பாணம், மார்ச் 7

கைகலப்பில் ஈடுபட்டு, கத்தியால் வெட்டியவருக்கு அபராதமும் சிறை தண்ட னையும் விதித்துத் தீர்ப்பளித் தது நீதிமன்று.

ஊர்காவற்துறை நீதிமன் றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலை யில் இந்த வழக்கு நேற்றுமுன் தினம் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

நாரந்தனையைச் சேர்ந்த சந்தேக நபர் பிறிதொரு தரப் புடன் கைகலப்பில் ஈடுபட்டு கத்தியால் வெட்டிக் காயப் படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பொலி ஸில் முறைப்பாடு செய்யப் பட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இது தொடர்பான விசாரணை யின் போது சந்தேக நபர் தன் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

இதனை அடுத்து அவ ருக்கு ஆயிரத்து 500 ரூபா அபராதம் செலுத்த வேண் டும் எனவும், தவறின் இரண்டு வார கால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என வும் நீதிமன்றம் உத்தர விட்டது.

இது தவிர 3 மாத கால சிறைத்தண்டனைக் கட்டா யம் அனுபவிக்க வேண்டும் என்றும், மேலும் 3 மாத கால சிறைத்தண்டனை விதித்து, அதனை ஐந்து வருடங் களுக்கு ஒத்தி வைத்துத் தீர்ப் பளித்தது நீதிம்ன்றம். ஐந்து வருட காலப்பகுதியினுள் குற்றவாளி மீண்டும் குற்றச் செயலில் ஈடுபடுவாராயின் ஒத்திவைத்த சிறைத் தண்ட னையை அவர் அனுபவிக்க வேண்டி ஏற்படும். (த-4)

## நிகழ்வுகள் இன்று

**சேவை நலன் பாராட்டு**

வடமராட்சி,மார்ச் 7

புலோலி தென்மேற்கு கிராம சேவகர் பிரிவில் பல வருடங்கள் கிராம சேவை யாளராகக் கடமையாற்றிய கிராம சேவையாளர் த. வதன ரூபனின் சேவை நலன் பாராட்டு விழா பிற்பகல் 3 மணிக்கு கந்தமுருகேசனார் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஒய்வு பெற்ற தபாலதிபர் செ. சந்திரலிங்கம் தலைமை யில் நடைபெறும் இந் நிகழ் வில் பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜகத் அபயக்கோன், பருத்தித் துறை பிரதேச சபைத் தலை வர் பூ. சஞ்சிவன், எதிர்க் கட்சித் தலைவர் ஐ. ஸ்ரீ ரங் கேஸ்வரன் ஆகியோர் வாழ்த் துரைகளை வழங்குவர்.

கந்தமுருகேசனார் சன சமூக நிலையம், முன் பள்ளி, சிவில் பாதுகாப்புக் குழு ஆகியன இந் நிகழ்வை ஏற் பாடு செய்துள்ளன. (ம-8)

**மகளிர்தின விழா**

கச்சாய் மாதர் கிராம அபி விருத்திச் சங்கத்தின் மகளிர் தினவிழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு கச்சாய் பொதுநோக்கு மண் டபத்தில் நடைபெறுமென சங்கத்தலைவி திருமதி சறோஜனிதேவி தெரிவித் துள்ளார். (ம-9)

## சட்ட விரோத மின்சாரம் பெற்றோர் சிக்கினர்

யாழ். நகர் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 13 பேரிடம் இருந்து 2 இலட் சத்து 34 ஆயிரத்து 431 ரூபா அபராதமாகப் பெறப்பட்டுள் ளது என்று சுன்னாகம் மின் பொறியியலாளர் எஸ். ஞான கணேசன் தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வந்த விசேட குழுவுடன், யாழ். மின் சார சபையினரும், பொலிஸாரும் இணைந்து சோதனை நடவடிக் கைகளை மேற்கொண்டனர்.

இவற்றில் வீட்டு மின் மாணியில் மோசடி செய்த 2 பேரும் சட்டவிரோதமாக, மின் கம்பங்களில் இருந்து மின்பெற்ற 11 பேரும் சிக்கினர்.

இதேவேளை முதலாம் திகதி கரவெட்டி பிரதேசத் தில் மின்மானியில் மோசடி செய்த ஒருவருக்கு எதிராக வழகக்கு தாக்கல் செய்யப்பட்டு அவரிடமிருந்து ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 989 ரூபா அபராதமாகப் பெறப்பட்டது.

2 ஆம் திகதி ஏழாலை பகு தியில் மின்மானியில் மோசடி செய்த ஒருவருக்கு எதிராக வழக் குத் தாக்கல் செய்யப்பட்டு அவ ரிடமிருந்து 45 ஆயிரத்து 54 ரூபா அபராதமாக பெறப்பட்டது.

சுழிபுரம் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற 4 பேரிடம் 28 ஆயிரத்து 460 ரூபாவும் வட்டுக்கோட்டை பகுதியில் 2 பேரிடமிருந்து 15 ஆயிரத்து 40 ரூபாவும் அபராதமாக பெறப்பட்டது.

3 ஆம் திகதி குப்பிளான் பகுதியில் சட்டவிரோதமாகு மின்சாரம் பெற்ற 3 பேரிடம் இருந்து 21 ஆயிரத்து 888 ரூபா அபராதமாக பெறப்பட்டது.

சட்டவிரோதமாக மின் சாரம் பெறுவோருக்கு எதி ராக மின்சாரசபை தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வரு கின்றமை குறிப்பிடத்தக் கது. (ம-13)

## பனம் பொருள் உற்பத்தி நெடுந்தீவில் பாதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

நெடுந்தீவில் இந்த முறை ஒடியல், புழுக் கொடியல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என்று பனம் பொருள் உற்பத் தியாளர்கள் தெரிவித்தனர்.

தற்போதும் பனங் கிழங் குகள் பிடுங்கப்பட்டு அவற்றை உரிய முறையில் சீவி எடுத்து வெயிலில் காய வைத்த நிலையில் திடீரெனப் பெய்த பலத்த மழையால் அனைத் தும் நனைந்து போயிருந்தன.

தொடர்ந்து பெய்த மழை காரணமாக அவற்றைக் காய வைக்க முடியாத நிலையில் பழுதடைந்து போய்விட்டன.

இந்த நிலையில் அவை பயன்படுத்த முடியாத நிலை யில் கைவிடப்பட்டுள்ளன. இதனால் பெரும் நஷ்டம் ஏற்பட் டுள்ளது என்று உற்பத்தியா ளர்கள் தெரிவித்தனர். (ம-7)

## மரக்கன்றுகளைப் பாதுகாக்கக் கூடுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 7

நெடுந்தீவுப் பிரதேச மக்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட பயன்தரும் மரங் கன்றுகளை பாதுகாப்பதற்கு பாதுகாப்பு கூடுகள் வழங்கப் படவுள்ளன.

சுமார் 150 இற்கும் மேற் பட்ட பயனாளிகளுக்கு இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

மா, தேசி, தோடை, நெல்லி போன்ற பயன் தரும் மரக் கன்றுகளை அண்மையில் விவசாயத் திணைக்களம் வழங்கியிருந்தது.

சுமார் எழுநூறு வரையி லான இந்தக் கன்றுகள் மக் களுக்கு பகிர்ந்து வழங்கப் பட்டன. இந்த மரக் கன்றுகளை பாதுகாப்பாக பேணி வளர்க்கும் முகமாக பாதுகாப்பு கூடுகள் வழங்கப் படவுள்ளன. (ம-17)

## வீதிகளுக்கு வெளிச்சம் இல்லை திருடர்களுக்குக் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். குடாநாட்டில் பெரும் பாலான வீதிகள் இரவில் இருளில் மூழ்கி விடுவ தைப் பயன்படுத்தி திருடர் கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

அநேகமான பிரதான வீதி கள் மற்றும் ஒழுங்கு வீதிகள் என்பவற்றுக்கு போதிய வீதி விளக்குகள் இல்லை.

இந்த நிலைமையைத் திருடர்கள் தமக்குச் சாதகமா கப் பயன்படுத்தி வருகின்ற னர். வீதிகள் அகலிக்கப்பட்டு காப்பெற் போடப்பட்டாலும் கூட, வீதி விளக்குகள் போட படாத நிலைமையே காணப் படுகிறது.

இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு வீதிக ளுக்கு மின்விளக்குகளைப் பொருத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மிஹின் லங்கா'...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
தவர்கள் நேற்றுக் காலை அடித்து நொருக்கியதுடன் இலங்கை அரசைக் கண்டித்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற சட்டத்தரணிகளின் ஆர்ப்பாட்டம், மறியல் போராட்டம் என்பவற்றைத் தொடர்ந்து சுப்பிரமணிய சுவாமியின் அலுவலகமும் தாக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றுக் காலையில் ஆதித்தமிழர் பேரவையைச் சேர்ந்தவர்கள் திடீரென ரயில் மறியல் போராட்டம் நடத்த முயன்றனர். ரயில் நிலையம் நோக்கி முன்னேறிய அவர்களைப் பொலிஸார் கைது செய்து, நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனைத் தொடர்ந்து, இலங்கை விமான நிறுவனமான 'மிஹின் லங்கா' நிறுவனத்தின் பயணச் சீட்டுப் பெறும் அலுவலகத்தை நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்தவர்கள் அடித்து நொருக்கினார்கள்.

கடந்த டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி முதல் மதுரையில் இருந்து கொழும்புக்கு நேரடி விமான சேவையை, 'மிஹின் லங்கா' நிறுவனம் ஆரம்பித்தது. இந்த நிறுவனத்தின் பயணச் சீட்டு அலுவலகம் மதுரை காளவாசல் பகுதியில் அமைந்துள்ளது. நேற்றுக் காலையில் நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த 30 பேர் திடீரென இந்த அலுவலகத்தை முற்றுகையிட்டு அடித்து நொருக்கினார்கள். கண்ணாடிக் கதவு, கணினி, மேசைகள், கதிரைகள் உள்ளிட்ட பொருள்கள் இதனால் சேதமடைந்தன.

அதைத் தொடர்ந்து காளவாசல் சமிக்ஞை அருகே வீதி மறியலும் நடந்தது. மறியலின் போது பஸ்கள் மீது சிலர் கற்களை வீசியதால் பரபரப்பு ஏற்பட்டது. தொடர்ந்து போராட்டங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தெரிவதால் அங்கு பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. (த)

## சிப்பாய்க்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இனங்கண்டு குற்றவாளிக்கு ஒத்திவைத்த சிறையும், நஷ்டஈடும் விதித்துத் தீர்ப்பளித்தது நீதிமன்றம்.

யாழ். மேல்நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் முன்னிலையில் இந்த வழக்கு தீர்ப்புக்காக நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

அளவெட்டியில் 2010 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் சந்தனலக்மால் ஜெயதிஸ்ஸ என்பவரை சுட்டுக்கொலை செய்த குற்றச்சாட்டில் அநுராதபுரத்தைச் சேர்ந்த நுவான் திசாநாயக்க என்பவரைத் தெல்லிப்பழைப் பொலிஸார் கைது செய்திருந்தனர்.

அவருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

அந்த வழக்கு சட்டமா அதிபர் திணைக்கள அறி வுறுத்தலின் பிரகாரம் யாழ்.மேல்நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்பட்டது.

விசாரணையின் பின்னர் கொலையல்லாத மரணம் விளைவித்ததாக இனங்கண்டு 2 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து 5 வருடத்துக்கு அது ஒத்திவைக்கப்பட் டது.

இதுதவிர பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு நஷ்ட ஈடாக குற்றவாளி ஒரு இலட்சம் ரூபா செலுத்த வேண்டும். செலுத்தத் தவறின் 6 மாதகால சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும்.

அத்துடன் 5 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தத்தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் மேல் நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

(த-4)

## அமெரிக்கா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இந்தப் பிரஜைகளின் சுதந்திர நடமாட்டத்திற்கு இடமளிக்குமாறு அமெரிக்கத் தூதரகம் இலங்கை அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளுகின்றது. கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான உரிமையானது பிரபஞ்சத்திற்கு உரித்துடையதென்பதுடன் அது இலங்கை சட்டத்தின் கீழ் பாதுகாக்கப் பட்டுள்ளது.

இத்தகைய அடிப்படைச் சுதந்திரங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை ஊடாக ஜெனிவாவில் கொண்டுவரப்படும் தீர்மானத்திற்கு ஐக்கிய அமெரிக்கா சர்வதேச பங்காளர்களுடன் ஆக்கபூர்வமான வகையில் பணியாற்றிவருகின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்றுவதன் மூலமாக தனது மக்களுக்கு வழங்கிய உறுதிமொழியை இலங்கை அரசு தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமென நாம் தொடர்ந்தும் வலியுறுத்துகின்றோம். ஆணைக்குழுவானது காணாமல்போனமை குறித்து விசாரணை நடத்துமாறும் காணாமல்போனமை மற்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடயத்தை கையாள பொறிமுறை ஒன்றை அமைக்குமாறும் பரிந்துரைத்துள்ளது.

கடந்த வருட ஐ.நா. தீர்மானம் முதற்கொண்டு இவ்விடயங்களில் பெரியளவில் முன்னேற்றம் காணப்படாமை மற்றும் அடிப்படை ஜனநாயக உரிமைகளின் முக்கிய விடயங்களில் பின்நோக்கிச் செல்கின்றமை தொடர்பில் ஐக்கிய அமெரிக்காவின் கரிசனை பெரிதும் அதிகரித்து வந்துள்ளது.

அனைத்து இலங்கையர்களும் சம அளவிலான உரிமைகளை அனுபவிக்கவும் சமகௌரவத்துடன் வாழவும் ஜனநாயகத்துடன் கூடிய பாதுகாப்பான மற்றும் சுபீட்சமான எதிர்காலத்தை பகிர்ந்துகொள்ள வேண்டும்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-சி)

## ஐ.நா....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கிழமை காலையில் ஜெனிவா சென்ற அமைப்பின் முக்கியஸ்தர்கள் தெற்காசியப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மனித உரிமைகள் அலுவலர் ஜெனிபர் கிராப்ட்டுடன் கலந்துரையாடிய பின்னர் இந்த மனுவைக் கையளித்தனர்.

இலங்கைத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகளைச் சுட்டிக் காட்டிய தூதுக்குழுவினர் பின்வரும் கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.

• இனப்படுகொலைத் தடுப்பு விவகாரத்துக்குப் பொறுப்பான விசேட தூதுவரால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையை வெளியிடுமாறு ஐ.நா. பொதுச் செயலாளரை வேண்டுவதுடன், தமிழ் இனப் படுகொலை விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு எடுத்துச் சென்று ஐ.நா. சாசனம் பிரிவு 99 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு இலங்கையில் நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலையை விசாரித்தல்.

• இனப் படுகொலை தொடர்பான பிரகடனத்தில் கைச்சாத்திட்டுள்ள நாடுகளிடம் பரப்புரை மேற்கொண்டு, 1948 டிசெம்பர் 9 ஆம் திகதி செய்து கொள்ளப்பட்ட இனப் படுகொலைக் குற்றங்களைத் தடுத்தலும் தண்டித்தலும் என்ற பிரகடனத்துக்கு அமைய சர்வதேச நீதிமன்றில் இலங்கை அரசுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறு கோருதல்.

• தலையீடு செய்வதற்கான விருப்பு (W2I) பாதுகாப்பதற்கான பொறுப்பு (R2P) ஆகிய கொள்கைகளின் அடிப்படையில் தற்காலிகத் தீர்வு ஒன்றை வழங்குவதற்கான செயற்பாட்டைத் துரிதப்படுத்துமாறு கொள்கை வகுப்பாளர்கள், செல்வாக்குமிக்க நாடுகளின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் இராஜ தந்திரி கள் இடையே பரப்புரைகளை மேற் கொள்ளுதல்.

• இனப் படுகொலைக்குப் பரிகார நடவடிக்கையாக, நூறு வீத சர்வதேச பாதுகாப்புச் செயன்முறையின் கீழ் தமிழர்கள் தமது கலாசார, பொருளாதார, சமூக அபிவிருத்திகளை அடைவதற்கு ஏதுவாக, சுதந்திர நாட்டையா அல்லது சுய ஆட்சியையா விரும்புகிறார்கள் என்பதைக் கண்டறியும் சர்வசன வாக்கெடுப்பை நடத்துதல்.

• அரசியல் தீர்வுக்குப் பிற்பாடு, எதிர்காலத்தில் மோதல்கள் எதுவுமின்றி தமிழ்த் தேசமும் சிங்களத் தேசமும் சகஜ வாழ்வு வாழ்வதை உறுதி செய்யும் வகையில் நேர்மையான நல்லிணக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

மேற்படி கோரிக்கைகளைச் சமர்ப்பித்து உரையாடிய தூதுக்குழுவில் அமைப்பில் தலைவர் புவனேந்திரன் மோகனராஜா, தியாகராஜா முரளி நடேசன், கனகசபை தேவகடாட்சம், அன்ரன் நிராஜ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். (த)

## அமெ.பிரேரணை...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கிய விடயங்களை உள்ளடக்கிய பிரேரணையாகவே இந்தப் பிரேரணை சபையில் முன்வைக்கப்படவுள்ளது என உயர்மட்ட இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இதற்கிடையில், அமெரிக்கா முன்வைக்கவுள்ள பிரேரணையில் கடுமையான பரிந்துரைகள் இடம்பெறுவதைத் தவிர்க்கச்செய்யும் இராஜதந்திர நடவடிக்கைகளை இலங்கை அரசும் மேற்கொண்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இதேவேளை, ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் அமெரிக்கா கொண்டுவரவுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணையை இந்தியா ஆதரித்து வாக்களிக்கும் என்று டில்லி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதற்கிடையே, இலங்கை விவகாரத்தில் இந்திய மத்திய அரசு கடுமையான அழுத்தங்களுக்குள் சிக்கியுள்ள நிலையில் இந்திய நாடாளுமன்றத்தில் இன்று இலங்கைத் தமிழர் விவகாரம் குறித்து குறுகிய நேர விவாதம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்த விவாதத்தின்போது, ஜெனிவா பிரேரணை குறித்த இந்தியா அரசின் நிலைப்பாடு வெளிப்படுத்தப்படலாம் என்றும் டில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.(த-சி)

## தடைகளையும்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
கொழும்பு மாநகர சபை முன்பாக, விஹாரமாதேவி பூங்காவின் முன்னால் காலை 9.30 மணிக்கு கவனவீர்ப்பை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்காக வடக்கிலிருந்து கலந்து கொள்ள முற்பட்ட ஆயிரக்கணக்கானோரை வவுனியா நகர சபை மைதானத்தில் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு தடுத்து நிறுத்தினர்.

இதனையடுத்து தடுத்து நிறுத்தப்பட்ட உறவுகள், வவுனியா நகர சபை மைதானத்தில் இரவிரவாக மெழுகுவர்த்தி ஏந்திக் கவன வீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

வட மாகாணத்திலிருந்து காணாமல் போனோரின் உறவுகள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொள்ளாத போதும், ஏனைய மாகாணங்களிலிருந்து வந்த நூற்றுக்கணக்கானோர் ஒன்று திரண்டு காலை 10.30 மணியளவில் கொழும்பில் கவனவீர்ப்புப் பேராட்டம் நடத்தினர்.

காணமல் போன தங்கள் பிள்ளைகளின் படத்தை கையில் ஏந்தியவாறு, தாய்மார் போராட்டத்தில் கலந்து கொண்டனர். '' பிள்ளைகள் எங்கே ?, அவர்களை விடுவியுங்கள் '' எங்கள் பிள்ளைகளை எங்களிடமே தாருங்கள்'' என்று கண்ணீர் மல்க அவர்கள் கோஷம் எழுப்பினர்.

இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் சில வெளிநாடுகளின் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டு, மக்களின் அவலத்தைக் கேட்டறிந்து கொண்டனர்.

மேலும், பொது எதிரணியிலுள்ள மனோ கணேசன், விக்கிரமபாகு கருணாரட்ண, சிறிதுங்க ஜெயசூர்யா, அசாத் அலி, அருட்தந்தை சக்திவேல், அருட்தந்தை செபமாலை ஆகியோரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

கவனவீர்ப்பின் முடிவில் கருத்துத் தெரிவித்த மனோகணேசன் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள வந்த உறவுகளை வவுனியாவில் தனது சர்வாதிகாரத்தைப் பயன்படுத்தி தடுத்து நிறுத்திய அரசு இந்த மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்றார்.

சிறிதுங்க ஜெயசூர்ய தெரிவிக்கையில், இராணுவ ஆட்சி இந்த நாட்டில் நிலவுகின்றது என்பதை மீண்டும் ஒரு முறை இந்த அரசு வெளிப்படுத்தியுள்ளது.

வவுனியாவில் மக்கள் தடுத்து நிறுத்தப்பட்ட சம்பவத்துக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் இடையில் தொடர்பு இருக்கின்றது. நாங்கள் இந்த மக்களை இங்கு அழைத்து வந்து மீண்டும் கவனவீர்ப்புப் பேராட்டத்தை நடத்துவோம். பொலிஸார், வவுனியாவில் மக்களைத் தடுத்து நிறுத்திய சம்பவம் தொடர்பில், பொலிஸ்மா அதிபரிடம் முறையிடப்பட்டுள்ளது என்று கூறினார். (த-5)

## விடாப்பிடி...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
வரவுள்ள பிரேரணை குறித்து, புதுடில்லியில் நாடாளுமன்றத்துக்கு வெளியே பேசிய இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்,

அமெரிக்காவோடு இணை ந்து, இலங்கை செயற் பட்டு அனைவரும் ஏற்கக் கூடிய ஒரு பிரேரணையைக் கொண்டு வர வேண்டும். இதன் பின்னர் இந்தியா ஒரு முடிவு எடுக்கும்.

இந்தக் கட்டத்தில் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படுமாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் கூறியுள்ளேன். அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பிரேரணை கொண்டு வர வேண்டும். இது மனிதாபிமான விவகாரம். இதில் ஒவ்வொருவரும் தனது நிலையில் விடாப்பிடியாக இருக்கவோ, ஈகோ பார்க்கவோ கூடாது.

இந்த விவகாரத்தில், பேச்சு நடத்த முடியுமானால், பேச்சுக்களை நடத்தி ஒருமித்த பிரேரணை கொண்டு வரப்பட வேண்டும். அவர்களுடன் நேரடியாகப் பேசி பொருத்தமான ஏற்றுக் கொள்ளத்தக்க வரைவு ஒன்றை உருவாக்குவது சாத்தியமே என்று தெரிவித்துள்ளார். (த)

## வவுனியா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...
இந்தப் போராட்டத்தில் பங்கெடுப்பதற்காக வன்னி, முல்லைத்தீவு ,வவுனியா மாவட்டங்களில் உள்ள காணாமற்போனோரின் உறவுகள் வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் ஒன்று கூடினர்.

அந்த மக்கள் 10 பஸ்களில் கொழும்பு நோக்கி புறப்பட தயாரான போது அங்கு வந்த பொலிஸார் மக்களைச் செல்ல விடாது தடுத்தனர்.

'சிங்களப் பகுதிகளில் பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவித்தே பொலிஸார் தடுத்தனர்.

மக்களின் பஸ்கள் அங்கிருந்து நகராதவாறு பெரும் எண்ணிக்கையான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டனர். பொலிஸாரின் இந்தச் செயலை அடுத்து மக்கள் பஸ்ஸில் இருந்து இறங்கி போராட்டம் நடத்தினர்.

கைகளில் மெழுகுவர்த்திகளை ஏந்தி நேற்று அதிகாலை வரை அவர்கள் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தினர். பின்னர் வவுனியா நகரசபை மைதானத்தில் எந்தவித வசதிகளும் இல்லாத நிலையில் மக்கள் அங்கு தங்கினர்.

மக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் தங்கியிருந்தனர்.

நேற்று நண்பகல் வரை காணாமற் போனோரின் உறவுகள் வவுனியா நகரசபை மைதானத்திலேயே தங்கியிருந்தனர். பின்னர் அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோர் மக்கள் மத்தியில் உரை நிகழ்த்தினர்.

காணாமற் போன தமது உறவுகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற வேட்கையில் அங்கிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு கோஷங்களை எழுப்பியவாறு ஏ-9 வீதியூடாக நகர்ந்தனர்.

போராட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலானோர் காணாமற் போன தமது உறவுகளின் படங்களைத் தாங்கிப் பிடித்தவாறு கண்ணீருடன் பேரணியாகச் சென்றனர். ''வடக்கின் வதைக் கூடம், ஹிட்லரின் வதைக் கூடம் தமிழனைக் [illegible] வதைக்கூடம் வேண்டாம்'', '' [illegible] எங்கே? அவரைப் பார்ப்பதற்கு அனுமதி தாருங்கள்'', ''தந்து விடு அரசே தந்துவிடு எங்கள் பிள்ளைகளை'', செல்லவிடு செல்லவிடுபிள்ளைகள் இருக்கும் இடத்துக்குச் செல்லவிடு '', ''இனியாவது எங்களை வாழவிடு'', மீறாதே மீறாதே மனித உரிமைகளை மீறாதே'',

''அபகரிக்காதே அபகரிக்காதே எங்கள் நிலங்களை அபகரிக்காதே'', வேண்டாம் வேண்டாம் வேறு இடம் வேண்டாம்'', கொல்லாதே கொல்லாதே கைதிகளைக் கொல்லாதே'','' செய்த குற்றம் என்னவோ கடத்திய காரணம் என்னவோ அவர்கள் எங்கே சொல்லிவிடு அரசே'' என்று வான் அதிரக் கோஷங்களை எழுப்பியவாறு சென்ற மக்களை பொலிஸார் வவுனியா மாவட்ட செயலக வளாகத்தின் முன்னால் தடுத்து நிறுத்தினர். இதனையடுத்து பொலிஸாருக்கும், பொது மக்களுக்கும் இடையில் கடும் முறுகல் ஏற்பட்டது.

மாவட்ட செயலகத்துக்குள் நுழைய மக்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதைத் தொடர்ந்து பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ,வவுனியா மாவட்ட அரச அதிபர் [illegible] பண்டாரவை நேரில் [illegible] மக்களின் உணர்வுரீதியான பாதிப்பை எடுத்துக் கூறினார். இருப்பினும் பெரும்பான்மையின அரச அதிபர் அதனைக் கருத்தில் எடுக்கவில்லை.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என்று ஆயிரக்கணக்கானோர் மாவட்டச் செயலகத்தை முற்றுகையிட்டு மாபெரும் போராட்டம் நடத்தினர். மக்களின் முற்றுகைப் போராட்டம் காரணமாக ஏ-9 வீதியூடான போக்குவரத்தும் சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக முடங்கியது.

மக்களின் முற்றுகைப் போராட்டம் தொடர்ந்தது. அரச அதிபர் வெளியில் வந்து மக்களின் மனுவைப் பெற்றுக் கொள்ளும் வரை போராட்டம் தொடரும் என்று மக்கள் விடாப்பிடியாக நின்றனர்.

மக்களின் போராட்டத்துக்கு இறுதியில் வவுனியா மாவட்டச் செயலகம் அடிபணிந்தது. மாவட்ட மேலதிக அரச அதிபர் மாவட்டச் செயலகத்தை விட்டு வெளியே வந்து போராட்டக்காரர்களிடமிருந்து மனுவைப் பெற்றுக் கொண்டார்.

அதன் பின்னர் மக்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். (மேலதிக புகைப்படங்களை 19ஆம் பக்கத்தில் பார்க்கலாம். விரிவாக புகைப்படத் தொகுப்பு மற்றும் காணொலிக் காட்சிகளை உதயன் இணையத்தளத்தில் (www.onlineuthayan.com) பார்வையிடலாம். (த-5-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# புயல் மையம் கொண்டால் அதிகாரத் திமிர் நிலைக்காதே...!

காணாமற் போனோரைத் தேடி அறியும் குழுவின் ஏற்பாட்டில் நேற்று கொழும்பு மாநகரசபை மண்டபத்துக்கு முன்பாக நடைபெற இருந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை, வவுனியாவில் பொலிஸாரின் பிலேச்சத்தனமான நடவடிக்கையால் ஒத்திவைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. கொழும்பு வருவதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, வவுனியாவில் தடுக்கப்பட்ட மக்கள் தமது கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று வவுனியாவில் நடத்தினர். பொலிஸ் அடக்குமுறைக்கு எதிரான தமது உணர்வுகளை வெளிக்காட்டினர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் பங்குபற்றலுடன் மிகவும் உணர்வுபூர்வமாக இப்போராட்டம் நடைபெற்றது.

இலங்கையில் காணாமற் போனவர்கள் எவருமே இல்லை என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த பின்னர், அது உண்மைக்குப் புறம்பானது என்பதனை அனைத்துலகத்துக்கு செயல் ரீதியாகத் தெரிவிக்க வேண்டிய தேவை இன்றியமையாததாகியது.

அதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணாமற் போனோர் தொடர்பான விடயத்தை அனைத்துலக நாடுகளின் கவனத்துக்குக் கொண்டுவரும் வகையில் கொழும்பு மாநகரசபை மண்டபத்துக்கு முன்னால் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த அகிம்சை முறையிலான போராட்டத்தில் கலந்துகொள்வதற்காக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த காணாமற் போனோரின் உறவுகள் நூற்றுக்கணக்கானோர் வவுனியா நகரசபை மைதானத்தில் ஒன்று கூடி பின்பு பஸ்களில் கொழும்பு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவர்களைத்தான் கொழும்பு செல்ல விடாது பொலிஸார் தடுத்தனர். அதனால் கொழும்பில் நேற்று நடைபெற இருந்த போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது. அதற்குப் பதிலாக வவுனியாவில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தமது நடவடிக்கைக்குப் பொலிஸார் பாதுகாப்பைக் காரணம் காட்டுகின்றனர். ஆனால், நேற்று கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டம் நடைபெறவிருந்த இடத்தில் கூடிய தென்னிலங்கை இனவாதிகள் விடுதலைப்புலிகளுக்கும் ஐ.நா.வுக்கும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஜெனிவா சென்ற தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கைதுசெய்யும்படி கோஷமிட்டனர். அரச உயர் மட்டத்தின் ஆசியுடன் அவர்கள் சுதந்திரமாக எந்தத் தடையும் தொந்தரவும் இன்றித் தமது ஆர்ப்பாட்டத்தை நடத்தி முடித்தனர்.

2009 மே மாதம் முடிவடைந்த இறுதிப் போரின் போது சரணடைந்து காணாமற்போனோர், போரின் போது காணாமற் போனோர் பல்லாயிரக்கணக்கானோர். சரணடைந்தோர் படையினரின் வாகனங்களில் ஏற்றிச்செல்லப்பட்டனர். ஆனால் அவர்கள் பற்றிய தகவல் எதுவும் பின்னர் இல்லை. கத்தோலிக்க மதகுருவான பிரான்ஸிஸ் ஜோஸப் அடிகளாரும் அவர்களில் ஒருவர்.

2009 போர் முடிவு வேளையில் 22 ஆயிரம் விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்று அரசு கூறுகிறது. பொதுமக்களின் உயிரிழப்பு குறித்து இதுவரை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை. ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனின் ஐ.நா. நிபுணர் குழு 40 ஆயிரம் பொதுமக்கள் இறந்திருக்கலாம் என்கிறது. ஆனால் 2008 ஒக்டோபருக்கும் 2009 மே மாதத்துக்கும் இடையில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் குறித்த தகவல் இல்லை என்கிறார் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோஸப்.

தமது உறவுகள் உயிருடன் இருக்கிறார்களா அல்லது இறந்துவிட்டார்களா என்பது பலருக்குத் தெரியாது. காணாமற்போனோர் ஒரு வருடத்தின் பின்பு இறந்தவர்களாகக் கருதப்பட்டு மரணச்சான்றிதழ் வழங்கப்படும் என்று அரசு அறிவித்து 2013 டிசம்பர் வரை அதற்கான காலக்கெடுவும் விதித்தது. ஆனால் இதுவரை 51 பேர் மட்டுமே யாழ்.மாவட்டத்தில் பதிவுசெய்துள்ளனர். காணாமற்போனோருக்கு மரணச் சான்றிதழ் வழங்குவதன் மூலம் காணாமற் போனோர் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்று அரசு கருதுவதாகத் தெரிகிறது.

இலங்கையில் பெரும்பாலானோர் காணாமற் போனது 2006 க்கும் 2009 க்கும் இடைப்பட்ட காலத்திலேயே என்கிறார் அரசசார்பற்ற நிறுவனமான சமூக செயற்பாடுகளுக்கான கிறிஸ்தவ கூட்டமைப்பைச் சேர்ந்த ருக்கி பெர்னாண்டோ. இவர்களில் பொதுமக்கள், ஊடகவியலாளர்கள், மனித உரிமைப் பாதுகாவலர்கள், மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டோர் என பல தரப்பினரும் அடங்குவர் என்றும் தெரிவிக்கிறார்.

மேலும் காணாமற் போனோர் தொடர்பான முறைப்பாடுகள், சாட்சியங்கள் இருந்தும் நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை; அக்கறை காட்டப்படுவதில்லை.

போர் முடிவுற்று தமிழ்ப் பிரதேசங்கள் முற்று முழுதாக அரச ஆயுதப் படைகளின் கட்டுப்பாட்டுக்கு வந்த பின்னர் வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும், போராளிகள், போராளிகளுக்கு உதவியவர்கள் என்ற 'சந்தேகத்தின் பேரில்' என்ற வார்த்தைகளுக்குள் உள்ளடக்கி ஆயிரம் ஆயிரம் இளைஞர்களும் ஏனையோரும் படையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் பின்னர் - பொதுப் போக்கில் - 'காணாமற் போனவர்கள்' என்ற சொல்லடுக்குடன் பட்டியலில் சேர்க்கப்பட்டு விட்டனர்.

அவ்வாறு சேர்க்கப்பட்டவர்கள் புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டதாகக் கூறப்படுவது காலப்போக்கில் அரச 'ஒழுக்கக் கோவையாக'' மாற்றப்பட்டது.

காணமற் போனோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டவர்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பதிவு செய்யுமாறு பகட்டுக்குக் காட்டப்பட்ட போதிலும் ஆயிரம் ஆயிரம் தமிழ் இளைஞர்கள் எங்குள்ளார்கள் என்பது குறித்து எவ்வளவு தகவல் தானும் இல்லை.

இந்த நிலையிலேயே காணமற் போனோர் தொடர்பான கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜனநாயக ரீதியிலான அந்தப் போராட்டத்தை தடுத்து நிறுத்துவதில் அரசும் அதன் அதிகாரிகளும் வெற்றி நிம்மதி கொள்ளலாம். ஆனால் அதன் பெறுபேறுகள் அரசின் அடக்கு முறையை, சட்டத்தை மூழ்கடிக்கும் போக்கை, ஜனநாயக உரிமைகளைக் காலால் மிதிக்கும் அதிகாரத் திமிரை அனைத்துலக மட்டத்தில் வெளிச்சம் போட்டுக் காட்டித் துலங்க வைத்துள்ளது. இதனைத் துன்பத்திலும் ஒரு வரப்பிரசாதமாகக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. எந்தத் தீமைக்குள்ளும் ஒரு நன்மை உண்டு. புயல் மையம் கொண்டால், மண்ணில் மழை வருவது நியதி. அது விரைந்து வரும் என்று எதிர்பார்க்கலாம்...

# சிறைச்சாலைகளில் ஊழியர்களுக்கான பற்றாக்குறையை நீக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 7

சிறைச்சாலைகளில் நிலவும் ஊழியர் பற்றாக் குறையைப் போக்குவதற்கு புதிதாக ஆயிரம் ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக தயாரிக்கப்பட்டுள்ள புதிய சேவை யாப்பு ஒன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் பீ.டபிள்யூ கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் திணைக்களம் தொடர்பாக இவ்விதமான புதிய சேவை ஒன்று 27 ஆண்டுகளுக்குப் பின்னரே தயாரிக்கப்படுகிறது.

அதற்கமைய திணைக்களத்துக்குத் தேவைப்படும் ஊழியர்கள் தொகை இறுதியாக 1986 ஆம் ஆண்டிலேயே கணிப்பிடப்பட்டது.

அந்தக் காலகட்டத்தில் சிறைச்சாலைகளில் தங்கவைக்கப்பட்டிருந்த கைதிகளின் எண்ணிக்கை 3 ஆயிரமாக இருந்துள்ளது. இன்று அந்த எண்ணிக்கை 27 ஆயிரம் வரையில் அதிகரித்துள்ளது.

சிறைச்சாலைகளில் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்வது தொடர்பாக இன்றைய அளவில் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்போர் 5 ஆயிரத்துக்கும் குறைவான ஊழியர்கள் தொகையினரே.

இந்தப் புதிய சேவைகள் யாப்பு நடைமுறையோடு சேர்த்துக் கொள்ளல், உள்வாங்கல், நியமனங்கள், பதவி உயர்வுகள், சம்பள அதிகரிப்புகளை வழங்குதல் உள்ளிட்ட ஆள்சேர்ப்பு ஒழுங்கு விதியுடன் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகள் சார்ந்த செயற்பாடுகளையும் செயற்றிறன் மிக்கதாக நடத்த முடியும் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

எவ்வாறான போதிலும் இன்று நிலவிவரும் சேவைகளின் அவசியப்பாடுகள் மீது புதிதாக 2 ஆயிரம் ஊழியர்கள் வரையில் சேர்த்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-22)

# சர்வதேச மகளிர் தினத்தில் கலை, கலாசார நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 7

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் கலை, கலாசார நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளன.

வடமாகாணத்தைச் சேர்ந்த 14 மகளிர் அபிவிருத்தி நிலையங்களை ஒன்றிணைத்து இந்த நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன.

பெண்களின் மாற்றத்துக்கான செயற்பாட்டு வலைப்பின்னல் அமைப்பின் தலைவர் சுகந்தி சிவகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மகளிர் அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகளின் சிறப்புரைகளும், பட்டிமன்றம் உட்பட கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

வடமாகாணத்தைச் சேர்ந்த 14 மகளிர் அமைப்புகள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில் பெண்களைக் கௌரவப்படுத்தக் கூடியதாக வாழ்த்துரைகள் வழங்கப்படுவதுடன், யாழ்.பல்கலைக் கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி கோசலை மதன் ''பெண்கள் தலைமைத்துவம்'' எனும் தலைப்பில் சட்டரீதியான ஆலோசனைகளை வழங்கவுள்ளார். (ம-14)

# ஏமாற்றத்தைத் தந்த 'திவிநெகும' விதைகள்

அச்சுவேலி,மார்ச் 7

''திவிநெகும'' திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்பட்ட விதைகளை நடுகைசெய்த யாழ். மாவட்ட விவசாயிகள் இலவுகாத்த கிளி போன்று ஏமாற்றம் அடைந்திருப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

விதை இனங்கள் உள்ளடங்கிய பொதிகள் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்தன. அதில் இருந்த பாவல் விதையை நட்டு அது பூத்து காய்க்கும் போது பலத்த ஏமாற்றத்துக்கு ஆளாகினர்.

பாவற்காய் கடும் பச்சை நிறம் கொண்ட குருத்திலைப் பாவற்காயாக உள்ளது. யாழ்ப்பாணத்தில் நடுகைசெய்யும் இனம் அல்ல அது.

புடோல் யாழ்ப்பாணத்து நீள இனம் அல்ல. கடும்பச்சை நிறம்கொண்ட சிறிய காய்களைக் கொண்டு குறிப்பிட்ட அளவில் காய்க்கின்றது. சிறகு அவரை பெரியளவில் படர்ந்துள்ள போதிலும் உரியமுறையில் காய்க்காமல் செழித்து வளர்ந்த நிலையில் உள்ளது.

இது தொடர்பாக விவசாயப் போதனாசிரியர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில்:-

''யாழ்ப்பாண விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட விதைகள் முளைதிறன் கொண்டதாக இருந்தன. ஆனால் அவை யாழ்.மாவட்டத்தில் நடுகை செய்யும் இனங்கள் அல்ல. அத்துடன் முளைத்து வளர்ந்தவையும் உரிய முறையில் விளைச்சல் தராதமைக்குக் காரணம் விதைகள் நடுகை செய்வதற்கு முன்னர் 40 தினங்களுக்கு குறையாமல் உறங்கு நிலையில் பாதுகாப்பாக இருக்கவேண்டும். அதற்கு முன்னர் நடுகை செய்தால் விளைச்சலை எதிர்பார்க்க முடியாது. இந்த விதைகள் தரமான இனங்கள் அல்ல அத்துடன் உறங்கு காலத்துக்கு உட்படாதவை.''- என்றார்.

விதைப் பொதிகளை மிக ஆர்வத்தோடு பெற்றுக் கொண்டவர்கள் புதிய இன விதைகளால் எதிர்பார்த்த வருமானம் பெறமுடியும் என்ற நம்பிக்கையோடு இருந்தனர்.

இந்த நிலையில் பெரும் ஏமாற்றமே கிடைத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-11)

# நாடகப் போட்டிகளுக்கு படைப்புகளை அனுப்பலாம்

தென்மராட்சி,மார்ச் 7

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு மற்றும் கலாசாரத் திணைக்களம் இலங்கைக் கலைக் கழகத்தின் அரச நாடகக் குழு ஆகியவை ஒன்றிணைந்து நாடகம், குறுநாடகம், சிறுவர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த ஆங்கில மொழி நாடகம் ஆகியவற்றை நடத்தவுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை அந்தந்த பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் பெற்று எதிர்வரும்31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடக சபையின் அனு மதி பெற்ற நாடகங்கள் 2012 ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலப் பகுதியில் மேடையேற்றப்பட்டிருத்தல் வேண்டும்.

சுயமான அதுவும் நிறைவான ஆற்றுகைகளே நாடகப் படைப்பாளர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. தயாரிப்பு விதிமுறைகளை தாண்டி சுய மற்றும் மொழி பெயர்ப்பு நாடகங்களை விண்ணப்பிக்க முடியும். பாடல் நாடகம், நாட்டிய நாடகம் போன்றவற்றை விண்ணப்பிக்க முடியாது.

பழைய நாடகங்கள் புதிதாக நாடக மேம்பாட்டுக்கு அனுகூலமாக அமையாது.

புதிய சுய ஆக்க ஆற்றுகைகளை மேன்மேலும் உருவாக்குவதே அரச நாடக விழாவின் முக்கிய நோக்கம். இதற்கு முன்னர் அரச நாடக விழாவில் விருது பெற்ற ஒரு நாடகத்தையோ அரச நாடக விழாவில் அரங்கேற்றப்பட்ட ஒரு நாடகத்தையோ இந்த வருட நாடக விழாவுக்கு முன்வைக்க முடியாது.

குறு நாடகங்கள் 30 நிமிடங்களுக்குள்ளும், நாடகங்கள் ஒரு மணித்தியாலம் தொடக்கம் இரண்டு மணித்தியால நேரத்துக்குள்ளும் அமைந்திருக்க வேண்டும்.

சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் சிறுவர் நாடகம், குறுநாடகம், நாடகம் போன்றவற்றுக்கு விருதுகளும் பணப்பரிசாக 25 ஆயிரம் ரூபா தொடக்கம் ஓர் இலட்சம் ரூபா வரையும் வழங்கப்படவுள்ளன. (ம-9)

# வீதி விளக்குகள் பொருத்தும் பணி மும்முரம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் தற்போது 250 வரையிலான வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

பிரதான வீதி மற்றும் மக்கள் அதிகமாக பாவனைக்கு பயன்படுத்தப்படும் வீதிகளுக்கு இந்த வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன என்று பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

பிரதேச சபையின் நிதி உதவியுடனும் மக்கள் அதிக பங்களிப்புடனும் இந்த வீதி விளக்குள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த வீதி விளக்குகள் தேவைப்படும் வீதிகளுக்கு அவற்றைப் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை திருநெல்வேலி சந்தைக்கு மேலதிகமாக மின்சார விளக்குள் பொருத்தப்பட்டுள்ளன.

சந்தையில் மேல்மாடி மற்றும் கீழ் மாடி தளம் என்பனவற்றில் மின் விளக்குகள் போதியதாகஇல்லை என்று தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து இவை பொருத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அதனைவிட சந்தையின் முன் பக்க சூழல் சந்தையை சுற்றியுள்ள பகுதி போன்றவற்றுக்கும் கூடுதல் மின் விளக்குகள் போடப்பட்டுள்ளன.

மழை காலங்களில் சந்தைக் கட்டடப் பகுதி பகலில் இருளில் சூழ்ந்து காணப்படுகிறது. இதுவே இந்த மின்விளக்குகள் பொருத்தக் காரணம் என்று நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

வலி. தெற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் இதுவரைக்கும் முன்னூறு வரையிலான வீதி விளக்குள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேச சபைக்கு உட்பட்ட ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் பத்து வீதி விளக்குகள் அடிப்படையில் முப்பது கிராம உத்தியோதர் பிரிவுகளிலும் முன்னூறு வரையிலான வீதி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன என்று பிரதேச சபையின் தலைவர் த. பிரகாஷ் தெரிவித்தார். (ம-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிடைக்கும் வளங்களைக் கொண்டு பொருளாதாரத்தை உயர்த்தலாம்

## கிளிநொச்சி அரச அதிபர் ஆலோசனை



கிளிநொச்சி,மார்ச் 7

கிடைக்கக் கூடிய வளங்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் கைத்தொழில் நடவடிக்கைகள் மூலமாகப் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன்.

முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பான ஒருநாள் கருத்தமர்வு ஒன்று நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச் சபை மண்டபத்தில் இலங்கை கைத்தொழில் அதிகார சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இதில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட மாவட்ட அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எமது மாவட்டத்தில் வசிக்கும் மக்கள் தம்மிடம் உள்ள வளங்களைக் கொண்டு மேற்கொள்ளக்கூடிய கைத்தொழில் நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்வதன் மூலமாக பொருளாதாரத்தை மேன்மையடையச் செய்ய முடியும். அவ்வாறு மக்களின் பொருளாதாரம் விருத்தியடையும் போது மாவட்டத்தின் பொருளாதாரமும் விருத்தியடையும். அத்துடன் பாரம்பரிய முறைகளில் மேற்கொள்ளப்படும் கைத்தொழில்களைத் தற்போதைய நவீன யுகத்துக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளையும் பெறவேண்டியுள்ளது.- என்றார். (க-6)

# கிளிநொச்சியில் காணாமல் போன சிறுவன் கண்டியில் கண்டுபிடிப்பு

கிளிநொச்சி,மார்ச் 7

கிளிநொச்சி, கோணாவில் கிராமத்தில் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்ட சிறுவன் கண்டியில் தங்கியுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

கிளிநொச்சி, கோணாவில் கிழக்கில் கடந்த ஜனவரி மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் சிறுவன் ஒருவன் காணாமல் போய்விட்டதாகக் கிளிநொச்சிப் பொலிஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்தச் சிறுவன் கண்டியில் உள்ள சிறுவர் இல்லமொன்றில் பொலிஸ் பாதுகாப்புடன் தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாக சிறுவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

மேலும் கண்டி நீதிமன்றத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி தம்மை முன்னிலையாகுமாறு அறிவித்தல் கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

13 வயதான யோசப் விதுசன் என்ற சிறுவனே வீட்டிலிருந்து வெளியில் சென்ற வேளையில் காணாமல் போனதாகக் கிளிநொச்சிப் பொலிஸில் கடந்த மாதம் 2 ஆம் திகதி சிறுவர் நன்னடத்தை அதிகாரிகளின் உதவியுடன் சிறுவனின் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

தம்மிடம் தகவல் தெரிவிக்காது நாவலப்பிட்டியில் உள்ள தனது பேர்த்தியாரின் வீட்டுக்கு இந்தச் சிறுவன் சென்ற போது கண்டிப் பொலிஸார் இந்தச் சிறுவனைக் கைது செய்து சிறுவர் இல்லத்தில் தங்க வைத்திருப்பதாகவும் சிறுவனின் தந்தை மேலும் தெரிவித்தார். (க-18)

# அரைகுறையான நிலையில் துணுக்காய் வீதி வேலைகள்

துணுக்காய் பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட சில வீதிகளின் புனரமைப்புப் பணிகள் பூர்த்தி செய்யப்படாது அரைகுறையான நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துணுக்காய்-மாங்குளம் வீதி, துணுக்காய்- வெள்ளாங்குளம் வீதி, ஐயன்கன்குளம் வீதி என்பனவற்றின் வேலைகளே அரைகுறையான நிலையில் காணப்படுகின்றன.

வேலைகளைப் பொறுப்பெடுத்த ஒப்பந்ததாரர்களும், வேலைகளை வழங்கிய அதிகாரிகளுமே இந்த நிலைமை ஏற்படக் காரணமென இங்குள்ள மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த வீதிகளின் வேலைகள் அரைகுறையான நிலையில் காணப்படுவதால் இங்கு வசிக்கும் மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் இந்த வீதிகளின் அவல நிலை தொடர்பாக மக்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)


## புதிய பிரிவு ஆரம்பம்...

பெண்களுக்கான சிகை அலங்காரம்
மற்றும் கேக் ஐசிங் பயிற்சிகள்
பிரபல ஆசிரியரால் 12.03.2013 முதல்
ஆரம்பிக்கப்படவுள்ளன.
தொடர்பு: 021 221 9936,
077 0447 103





(34213) (45,6.7)

## The World Navigators Travels and Tours

உங்கள் விடுமுறையை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்......

- ★ குறைந்த விலை விமான சீட்டுகள்
- ★ உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலா ஒழுங்குகள்
- ★ திருமண நிகழ்வுகளுக்கான அனைத்துஒழுங்குகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

The World Navigators pvt Ltd,
69, Arasady Road, Jaffna
0212219936,0112055499

(34214)(6.7.11)


# மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீடுகளுக்கான பட்டியல் மீளாய்வு

மன்னார்,மார்ச் 7

மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவில் இந்திய வீடுகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பட்டியல் மீளாய்வு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முசலிப் பிரதேச செயலர் செ.கேதீஸ்வரன் தலைமையில் இந்த மீளாய்வுகள் இடம்பெற்றன.

இதன்போது இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் நிகழ்ச்சித் திட்டப் பிரதிப் பணிப்பாளர் மத்காவே விக்கிரமசிங்கவும் உடனிருந்தார்.

இந்த மீள் பரிசீலனையின் போது முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மருதமடு, வேப்பங்குளம், பூனொச்சிக்குளம், மேத்தான்வெளி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்டவர்கள் மற்றும் விடுபட்டவர்களின் பெயர்ப் பட்டியல்கள் மற்றும் ஆவணங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட்டதாகத் தெரிய வந்துள்ளது. (க-12)

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வநாயகி கதிர்காமத் தம்பி
(வட்டுக்கோட்டை)



வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் தற்போது சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமத்தம்பி தெய்வநாயகி (05.03.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமத்தம்பி (இளைப்பாறிய காலால் அதிகாரி)யின் அன்பு மனைவியும் பிறைசூடி, அருந்ததி, பத்மினிதேவி, குணசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் உதயமலர்,விக்கினேஸ்வரன், மகிந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஷோபிகா, ஷொரூபிகா, சௌமியா, வெங்கடேஷ், விபூசிகா, பிரணவன், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தற்போதைய வசிப்பிடமான வட்டு கிழக்கு, சித்தங்கேணி இல்லத்தில் இன்று (07.03.2013) மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கை ஆறு இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வட்டு கிழக்கு,
சித்தன்கேணி.

(34208)(6.7.11)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி இராசதுரை
(ஓய்வுபெற்றஅதிபர் , யா/புங்/கமலாம்பிகை வித்தியாலயம்)



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி இராசதுரை நேற்றுமுன்தினம் (05.03.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம்- நல்லதங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், தர்மலோஜினியின் அன்புக் கணவரும், யசோதினி(உப தபாலதிபர் -ஊரதீவு), கிந்துஜா, வசிதரன்(பிரான்ஸ்), கோபினா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தகுமார்(உரிமையாளர். N.S றேடர்ஸ் மாவத்தகம), சிவகாந்தன்(உரிமையாளர் விசுவல்அன்ட் றைமன்ஸ், கொழும்பு), சுபேசன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெயலட்சுமி(ரெத்தினம் கிளிநொச்சி), காலஞ்சென்ற யோகலட்சுமி மற்றும் ஏரம்பமூர்த்தி(மூர்த்தி-சாவகச்சேரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காராளபிள்ளை(கொழும்பு), மகாலிங்கம்(சுவிஸ்), ரதி(யாழ்ப்பாணம்), பத்மாவதி(லண்டன்), சந்திரா(கனடா) ஆகியோரின் மைத்துனரும், கஸ்வினி, தஷானிக்கா, திலக்ஷன், அக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(34211)(2.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

# பருவம் பிந்திய மழைக்கு காடழிப்பும் முக்கிய காரணம்

## கூறுகிறார் கிளிநொச்சி விவசாயப் பணிப்பாளர்

கிளிநொச்சி,மார்ச் 7

பருவம் பிந்திப் பெய்யும் மழைக்கு காடழிப்பும் ஒரு முக்கியமான காரணமென கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா தெரிவித்துள்ளார்.

பருவம் பிந்திய நிலையில் தற்போது பெய்து வருகின்ற மழை காரணமாக நெற்பயிர் உட்பட ஏனைய பயிர் வகைகளுக்கும் பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. விளைந்த நெல்லை அறுவடை செய்வதிலும் விவசாயிகள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மரக்கறிப் பயிர்கள், தானியப் பயிர்கள் என்பனவும் அழிவடைந்துள்ளன.

தற்போது அழிவுகள் தொடர்பான முழு விவரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

எதிர்காலத்தில் இதுபோன்ற அழிவுகள் ஏற்படாத வகையில் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பாதிக்கப்பட்ட விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

# கவிதை நூல் வெளியீடு

முல்லைத்தீவு,மார்ச் 7

முல்லைத்தீவு மாவட்டம் கற்சிலைமடுவில் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று இடம்பெறவுள்ளது.

பண்டாரவன்னியன் இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் வன்னியூர் செந்தூரனின் 'நிலவைத் தேடும் வானம்' என்னும் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் முல்லைத்தீவு கற்சிலைமடு அ.த.க.பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (க-441)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அன்னை மடியில்
24.12.1955

ஆண்டவன் அடியில்
05.02.2013

### கந்தசாமி நாகரத்தினம் (இந்திரா)

என்றென்றும் நீங்காத நினைவுகளுடன் அன்பின் திருவுருவாய்
பாசத்தின் உறைவிடமாய் பண்பின் இருப்பிடமாய்
இருந்து எம்முடன் வாழ்ந்த இந்திராவே
இன்றுடன் மூன்று பத்து ஒரு நாள் கடந்ததுவோ
உந்தன் இன்னுயிர் இறையடி சேர
பிரார்த்தனை செய்யும் உன் குடும்ப உறவுகளாம்
நாம் என்றென்றும் இறையடி வேண்டுவோம்.

இன்று (07.03.2013) வியாழக்கிழமை நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெரிய புலம் றோட்,
இருபாலை தெற்கு. இருபாலை.

சகோதரர், சகோதரிகள்
மைத்துனர்கள்.

(34203)(6.10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணல் அகழப்படுவதால் அழிவடையும் காட்டுவளம்

துணுக்காய்,மார்ச் 7

*முல்லைத்தீவு மாவட்டம் பழைய முறிகண்டிக் கிராமத்தில் தொடர்ந்து மணல் அகழ்வு இடம்பெறுவதால் காட்டு வளம் அழிவடையும் நிலை காணப்படுவதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.*

பழைய முறிகண்டி ஆற்றுப்பகுதி, பழைய முறிகண்டிக் குளத்தின் வான் பகுதி, அக்கராயன் குளத்தின் பின் பகுதி ஆகிய இடங்களிலிருந்து தினமும் பெருமளவு மணல் அகழப்பட்டு வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றது.

மேலும் நாள்தோறும் பெருமளவு வாகனங்கள் மணலை ஏற்றிக்கொண்டு பயணிப்பதால் ஏற்கனவே சேதமடைந்த பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களிலுள்ள வீதிகள் மோசமாகச் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இதேவேளை பழைய முறிகண்டிக் குளத்தின் கீழ் செய்கை பண்ணப்பட்ட சுமார் 100 ஏக்கர் வரையான நெற்பயிர்கள் மழை வெள்ளம் காரணமாக அழிவடைந்துள்ளதாக கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் 45 குடும்பங்கள் இந்தக் கிராமத்தில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## குளத்தின் வான்பகுதியில் துவாரம்

துணுக்காய், மார்ச் 7

துணுக்காய் அம்பலப் பெருமாள் குளத்தின் வான் பகுதியில் ஏற்பட்ட சிறிய துவாரம் மண்மூடைகளால் சீர் செய்யப்பட்டுள்ளது.

தற்போது பெய்து வரும் மழை காரணமாக பெருவெள்ளம் ஏற்பட்டு அம்பலப் பெருமாள் குளத்தின் வான்பகுதியில் சிறிய துவாரம் ஏற்பட்டது. இதனைச் சீர் செய்யாது விட்டால் பாதகமான விளைவுகள் ஏற்படுமென்பதை உணர்ந்த விவசாய அமைப்பினர் உடனடியாக துவாரம் ஏற்பட்ட இடத்தில் மண் மூடைகளை அடுக்கியதுடன் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர். (க-18)

## மன்னார் கோட்டை இராணுவத்தினரிடம்

*மன்னார், மார்ச் 7*

*மன்னாரிலுள்ள பழைமை வாய்ந்த ஒல்லாந்தர் கோட்டையை இராணுவத்தினர் பொறுப்பேற்க உள்ளதாக அறிய வந்துள்ளது.*

*இந்த ஒல்லாந்தர் கோட்டையின் பராமரிப்பு மற்றும் அதனை நிர்வகிக்கும் பொறுப்பு என்பனவற்றை இராணுவத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக வன்னிப் பிரதேசத்துக்கான கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா தெரிவித்தார்.*

*மேலும் இராணுவத்தினரிடம் இந்தக் கோட்டை ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில் உணவகமொன்று அங்கு அமைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.*

*தற்போது இந்த ஒல்லாந்தர் கோட்டை அதன் புராதனத் தன்மைக்குப் பங்கம் ஏற்படாதவாறு இராணுவத்தினரால் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.* (க-22)

## அரச பஸ் ஒய்வெடுப்பதால் பாதிக்கப்படும் கிராம மக்கள்

### ஓட்டோவுக்கு அதிக பணம் செலவழிக்கும் அவலம்

அக்கராயன், மார்ச் 7

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி, அக்கராயன் பகுதிகளுக்குச் சேவையில் ஈடுபடும் அரசபஸ், சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் ஒழுங்கான சேவையை வழங்காததால் இப் பகுதி மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

மேலும் அக்கராயன், ஸ்கந்தபுரம், முக்கொம்பன் சின்னப்பல்லவராயன் கட்டு, பூநகரி, நல்லூர், ஆலங்கேணி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இதனால் அதிக பாதிப்புக்களை எதிர்கொண்டு வருகின்றனர். அரச பஸ் வருமெனக் காத்திருக்கும் தாம் அவை வராததால் ஓட்டோவுக்கு அதிக பணம் செலுத்தி உரிய இடத்துக்குப் பயணிக்க வேண்டியுள்ளதாகவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6 மணிக்கு பூநகரி வழியாக அக்கராயன் வரை பயணிக்கும் அரசபஸ் அடிக்கடி, பழுதடைந்து சேவையில் ஈடுபடாமை தொடர்பாக அதில் பயணம் மேற்கொள்ளும் ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(க-18)

## அலைகல்லுப்போட்டகுளம் மக்கள் பயணிப்பது இந்த வீதியால் தான்



வவுனியா, மார்ச் 7

மோசமாகச் சேதமடைந்து காணப்படும் வீதியால் போக்குவரத்து மேற்கொள்ள முடியாது திண்டாடுகின்றனர் அலைகல்லுப்போட்டகுளம் கிராம மக்கள்.

நாட்டில் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர் இடர்கள் காரணமாக இடம்பெயர்ந்த அலைகல்லுப்போட்டகுளம் கிராம மக்கள் மீள் குடியமர்வு செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமக்குரிய போக்குவரத்துப் பாதைகள் செப்பனிடப்படவில்லை எனத் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் மழைகாலங்களில் வீதியில் நீர் தேங்கி நின்று போக்குவரத்தை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுவதுடன் அடிக்கடி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன.

இவ் வீதியைச் சுமார் 15 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். பாடசாலை மாணவர்களும், வியாபாரிகளும் இவ்வீதி ஊடாகவே பயணிக்கின்றனர்.

அது மட்டுமல்லாது இவ்வீதியூடாக ஒரு சிறியரக வான் மட்டுமே சேவையில் ஈடுபட்டு வருகின்றது. இதுவும் சீரான சேவையை வழங்காததால் அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலை செல்ல முடியாத நிலை ஏற்படுவதாகவும் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை விற்பனைக்குக் கொண்டு செல்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-400)

## ஆலயங்களின் ஒலிபெருக்கிகளால் வேப்பங்குளத்தில் மக்கள் பாதிப்பு

நெளுக்குளம், மார்ச் 7

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் உள்ள ஆலயங்களில் இருந்து எழும் ஒலிபெருக்கிகளின் ஓசையால் இந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்படுவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

இங்குள்ள ஆலயங்களில் இருந்து நேரவேறுபாடு இல்லாது ஒலிபெருக்கிகளால் பெரும் ஓசை எழுப்பப்படுகின்றது. இதனால் மாணவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள், குழந்தைகள் எனப் பலரும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

இதனால் அதிகாலை வேளைகளில் மாணவர் களின் கற்றல் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன் ஏனையோர் தூக்கத்தை இழந்து தவிக்க நேரிடுகிறது.

எனவே மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு ஒலிபெருக்கிகளின் ஓசையைக் கட்டுப்படுத்துமாறும் ஆலய வளாகத்தில் மட்டும் இவற்றின் ஓசை கேட்கும் விதத்தில் ஏற்பாடுகளை மேற்கொள்ளு மாறும் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ள னர். (க-402)

## வன்னேரிக்குளம் ம.வியில் உயர்தர வகுப்பு உடன் தேவை

### பெற்றோர்கள் அவசர வேண்டுகோள்

அக்கராயன்,மார்ச் 7

கிளிநொச்சி வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்க வேண்டுமென்ற தமது கோரிக்கை புறக்கணிக்கப்படுவதாகப் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

1953 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டத்தின் உயிர் நாடியாக இந்தப் பாடசாலை விளங்குகின்றது.

மாவட்ட மட்டத்தில் கல்வி, விளையாட்டு ஆகிய இரு துறைகளிலும் இந்தப் பாடசாலை சிறந்து விளங்குகின்றது. உயர்தர வகுப்புக்களில் கற்க வேண்டுமாயின் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் அக்கராயன் மகா வித்தியாலயத்துக்கு 13 கிலோ மீற்றர் தூரமும், ஜெயபுரம் மகாவித்தியாலயத்துக்கு 6 கிலோ மீற்றர் தூரமும் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். இவர்கள் போக்குவரத்துச் சிரமங்களுக்கு மத்தியிலேயே சென்று வருகின்றனர்.

60 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகளைத் தாமதமின்றி ஆரம்பித்து தமது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு உதவுமாறு பெற்றோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

## மரண அறிவித்தல்

## முருகுப்பிள்ளை இரத்தினம்



திக்கம் அல்வாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகுப்பிள்ளை இரத்தினம் நேற்று (06.03.2013) புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புஸ்பராணியின் அன்புக் கணவரும் முருகரூபன்(பல நோக்கு கூட்டுறவுச்சங்க கிளை முகாமையாளர் -வல்வெட்டிதுறை), சிவரூபன்(முகாமை உதவியாளர்-பருத்தித்துறை நகரசபை), ஜெயந்தினி, சுகுர்ந்தினி, சுபாசினி ஆகியோரின் அன்புத்தந்தையும் தனபாலச்சந்திரன், தீபா, கிருபாகரன், குணேசன் ஆகியோரின் மாமனும் கீர்த்தனா, ரவிவர்மன், கீதாஞ்சலி, மதுசா, வினோதன், பவித்திரா, அபிசாயினி, ஹம்சா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2013) வியாழக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

திக்கம் அல்வாய் மேற்கு,
அல்வாய்.

(34266)(8.16)

தகவல்:
குடும்பத்தினர்.

## புதுக்குடியிருப்பு கோட்ட மட்ட எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

புதுக்குடியிருப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டிகளில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

**ஆக்கம் - எழுத்து பிரிவு 1 -**
ர.பவித்திரன் (ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலயம்), வி. டல்சிஜா (விசுவநாதன் ஆரம்பப் பாடசாலை), ச. அருள்வாணி (வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயம்).

**கட்டுரை வரைதல் பிரிவு 2 -**
நா.பானுகா (உடையார்கட்டு மகா வித்தியாலயம்), அ.கௌசிகா (இரணைப்பாலை றோ.க. வித்தியாலயம்), சி.கேதா (வேணாவில் ஸ்ரீமுருகானந்தா வித்தியாலயம்).

**கட்டுரை வரைதல் பிரிவு**
3-சி. சிரஞ்சித் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), தி.இமையவன் (விசுவமடு பாரதி வித்தியாலயம்), பா.சுஜாதா (மந்துவில் அரசரத்தினம் வித்தியாலயம்).

**இலக்கிய நயம் பிரிவு 4 -**
ம.டனோயா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), எச்.ஜெனிசியா (இரணைப்பாலை றோ.க. மகாவித்தியாலயம்), பா.பிரவீனா (வள்ளிபுனம் கனிஷ்ட உயர்தரப் பாடசாலை).

**தமிழியற் கட்டுரை பிரிவு 5-**
இ.ஜெகதீஸ்வரி (புதுக்குடியி ருப்பு மத்திய கல்லூரி), பா.லாவண்யா(உடையார்கட்டு மத்திய மகாவித்தியாலயம்).

**இலக்கணப் போட்டி பிரிவு 4 -**
சி. லூசியஸ்தர்சிகா (இரணைப்பாலை றோ.க. மகாவித்தியாலயம்), வி. சிந்துஜா (வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயம்), இ.தனுகோபன் (விசுவமடு மகாவித்தியாலயம்).

**இலக்கணப் போட்டி பிரிவு 6 -**
யோ.யோகதர்சினி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), தே.நினோசியா (இரணைப்பாலை றோ.க. மகாவித்தியாலயம்), இ.சயோசன் (உடையார் கட்டு மகாவித்தியாலயம்).

**திறனாய்வு பிரிவு 5 -**
அ.லூட்ஸ் பியூயினி (விசுவமடு மகாவித்தியாலயம்)

**குறு நாடகம் பிரிவு 4 -** சி.தர்சிகன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), ர.வேணுஜா (வள்ளிபுனம் கனிஷ்ட வித்தியாலயம்), ஜெனார்த்தனி (விசுவமடு மகாவித்தியாலயம்).

**குறுநாடகம் பிரிவு 5 -**
ஜே. ஜமில்ஸ்ரா (இரணைப்பாலை றோ.க. மகா வித்தியாலயம்) ப.வசந்தமாலா (உடையார்கட்டு மகாவித்தியாலயம்) ப.செந்தூரன் (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி)

**கவிதை ஆக்கம் பிரிவு 4 -**
ஆ. ஜெயகிருஷ்ணா (விசுவமடு மகா வித்தியாலயம்), ஸ்ரீஹாஸ்ரிகா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), சி.நிஷாந்தினி (புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம்) .

**கவிதை ஆக்கம் பிரிவு 5-**
சா.ஆண்டிலக்ஷி (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), சி. நிரோசினி (விசுவமடு பாரதி வித்தியாலயம்), சு.பேபிகா (இரணைப்பாலை றோ.க. மகாவித்தியாலயம்).

**சிறுகதையாக்கம் பிரிவு 4-**
த.மகிஷா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி), அ.அஜித் (ஆனந்தபுரம் அ.த.க. பாடசாலை), வே. துசாந்தினி (விசுவமடு மகாவித்தியாலயம்).

**சிறுகதையாக்கம் பிரிவு 5-**
சி.டர்மிகா (விசுவமடு மகா வித்தியாலயம்), ந.பிரியங்கா (புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி) சி.தேனுஜா (உடையார் கட்டு மகாவித்தியாலயம்). (க-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாஹா மருத்துவ நிலையம்**

கொலஸ்ரோல் அடைப்பு, ஆஸ்மா, எலும்பில் அதிக வேதனை தரும் வாதம், கொடிய புண்கள், மாதவிடாய் சார்ந்த பெண்ணியல் நோய்-அதிநவீன மருந்தியல்

கிழமைநாள்:- 3 PM -7 PM
சனி,ஞாயிறு:- 8 AM -2 PM
T.P:-0773212740

வங்கிமுன்லேன், சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவீடு), மானிப்பாய்.

# சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 7

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மஹா சிவராத்திரி உற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளதுடன்; ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நாடகம், வில்லுப்பாட்டு என்பனவும் இடம்பெறவுள்ளது. மற்றும் பொது அறிவுப் போட்டியில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில் வழங்கல் நிகழ்வும். இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (16)

advt@uthayan.com
0215671111

**வெளிவந்துவிட்டது**
**யாழ் பாரதி வெளியீடு (தவணை-01)**
வினாத்தாள்களின் தொகுப்பு தரம்-6,7,8,9
(கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு)
விலை 130/= மட்டுமே.
பூபாலசிங்கம் புத்தகசாலை-யாழ் .நகர்

## கண்ணீர் அஞ்சலி



அனுராதபுரத்தில் இந்துசமய கலாசார வளர்ச்சிக்கு அர்ப்பணிப்புடன் அரும்பணி ஆற்றிய

**இரத்தினசிங்கம்**
**செல்வராஜன் (ஐடியல்)**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அனுராதபுரம் விவேகானந்தா சபை.

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி



39/5, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 43/1, பூநாறி ஒழுங்கை, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் நாகேஸ்வரி அவர்கள் நேற்று (06.03.2013) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

(அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.)

43/1, பூநாறி மரத்தடி ஒழுங்கை,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
தொலைபேசி இல- 0215672024 (34282)(6.18)

தகவல்:
குடும்பத்தினர்.

## புனரமைக்கப்படாத வீதியால் 2000 குடும்பங்களுக்கு பாதிப்பு

அக்கராயன், மார்ச் 7

சுமார் 17 கிலோமீற்றர் நீளமான சேமமடு வீதி நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாமையால் சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் தினமும் இந்த வீதியையே பயன்படுத்தி வருகின்றன. 16 வருடங்களுக்கு மேலாக இந்த வீதியில் புனரமைப்புப் பணிகள் எதுவும் இடம்பெறவில்லை. இதனால் மழைகாலத்தில் இந்த வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் விபத்துக்களைச் சந்தித்து வருகின்றனர்.

மேலும் கல்லை அகழ்ந்தெடுத்துச் செல்வதற்காக இந்த வீதியூடாக தினமும் ஏராளமான கனரக வாகனங்கள் செல்வதால் வீதிக்கு மோசமான சேதங்கள் ஏற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## சர்வதேச மகளிர் தினம்

மட்டக்களப்பு,மார்ச்7

சுவாமி விவேகானந்தரின் 150 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம் நடத்தும் சர்வதேச மகளிர் தினம் நாளை வெள்ளிக்கிழமை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது.

மன்றத்தின் தலைவி திருமதி மனோகரி சீவரெட்ணம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், மட்டக்களப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி சாபாஜினி சக்கரவர்த்தி உட்பட பலர் கலந்து கொள்வர்.

## கண்ணீர் அஞ்சலி



**இரத்தினசிங்கம் செல்வராஜன்**
(ஐடியல்) - செல்வராஜா அவர்கள்
உறவாடிய உத்தமனே

உள்ளம் புகுந்து உறவாடி
உயிராய்க் கலந்து ஊடாடி
தெள்ளத் தெளிந்த உபதேசம்
தெரிவித்து என்னை ஆளாக்கிய
வள்ளலே! செல்வராஜா அண்ணாவே!
வானுலக வாழ்வு விரும்பியோ
மெள்ளக் கடந்து மறைந்தனையோ?
மேதினி வாழ்வைத் துறந்தனையோ?
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

உரிமையாளரும் ஊழியரும்
அக்ஷயா கவறிங்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னலட்சுமி கந்தசாமி



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் சரசாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி கந்தசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியை) நேற்று முன்தினம்(05.03.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் செல்லப்பா-கந்தசாமியின் (ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர்) அன்பு மனைவியும், ஸ்ரீவிட்டுணுபதி(சுவிஸ்லாந்து), சியாமளா (உபதபாலதிபர் சரசாலை) ஆகியோரின் பாசமிகு தாயும், கணேசலிங்கம் (குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதி மன்றம்-யாழ்ப்பாணம்), றோகினி(சுவிஸ்), தர்சிகா(ரூபி-ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், சிவபாக்கியம், கனகமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சுஜித்தா, நிதர்சனா, மதுஷா, சிகானுசன், தயானுகா, வாதுமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(08.03.2013) வெள்ளிக்கிழமை மு.ப.11.00மணியளவில் 403/4, கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியில் (சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில்) உள்ள மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

403/4 கண்டி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் புவனதாஸ்(ராசன்)

(உரிமையாளர், சோமசுந்தரம் சைக்கிள் வேக்ஸ் சங்கானை)



சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சேமசுந்தரம் புவனதாஸ் (ராசன்) நேற்று(06.03.2013) புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், தெட்சனாமூர்த்தி -மங்கையர்க்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், சித்திரா தேவியின்(சித்திரா) பாசமிகு கணவரும், சஞ்சிகா(முதலாம் வருட மாணவி, யாழ். பல்கலைக்கழகம் கலைப்பிரிவு), பிரசாந், யோகசாந் ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகனதாஸ்-(சிங்கப்பூர்), சந்திராதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் சகோதரனும், சந்திரவரதானந்தன், யோகேஸ்வரன், வனிதா(சிங்கப்பூர்), சந்திரகாந்தா, குணசாந்தி(சுவீடன்), தயாபரன்(சுவிஸ்), ஸ்ரீகலா(நவாலி),யோகேஸ்வரன்(கனடா), ஜெகதீஸ்வரன்(சுவீடன்), ஜெகதீஸ்வரி(சுவீடன்) ஆகியோரின் மைத்துனரும், மைதிலி (சிங்கப்பூர்), ஜெயகாந்தன், ஜெயாழினி,ஜெயரூபன், ஜெயழன் ஆகி யோரின் சிறிய தந்தையும, காண்டீபன், கஜேந்தினி(டென்மார்க்), தாளினி (ஆஸ்திரேலியா), மயூரன், கயூபன், கஜனி(சங்கானை), விதுர்சா, வர்நிஷா(சுவிஸ்), விதுசன், கேசிகா(கனடா), சுளக்சிகா, சுளசிகன்(சுவீடன்) ஆகியோரின் அன்பு மாமனும், ஜெனிதா, ஜெனிசன், ஆகியோரின் பெரியப்பாவும், ஜெரனிகா(டென்மார்க்), ஜெனிதா, ஜெயவினி, தாட்சாயினி, சதீஸ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2013) வியாழக்கிழமை மு.ப. 10.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லைத உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
077 4337331

தகவல்:
குடும்பத்தினர்.

## மட்டக்களப்பில் ரயில் மோதி ஒருவர் சாவு

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு சென்ற ரயிலில் மோதுண்டு ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு, மாமங்கம், புன்னச்சோலை எனும் இடத்தை சேர்ந்த வேலாயுதம் பெணடிக்யேசு (வயது - 29)என்பவரே ரயிலில் அடிபட்டு உயிரிழந்துள்ளார்.


ரயில் தண்டவாளத்தில்இந்த நபர்விழுந்து அடிபட்டே உயிரிழந்துள்ளார்.

சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

udhayan.com
0215671111

## சின்னத்தம்பி சிவகுரு



மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிவகுரு நேற்று (06.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற இராசம்மா, பராசக்தி, மகேஸ்வரி, நாகம்மா ஆகியோரின் சகோதரனும் புஸ்பராணி, அமிர்தலிங்கம் (சுவிஸ்), உதயகுமாரி(வவுனியா, காலஞ்சென்ற இராஜகுமாரி மற்றும் இன்பநாதன் (மானிப்பாய்), சிவமலர் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதராசா, அருந்தா(சுவிஸ்), காலஞ்சென்ற சிவஞானம், தர்சிகா(மானிப்பாய்), குணநாதன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், சசிகலா-குணசீலன், சுயந்தன் -சுகிர்தா, சிவதரன்-தர்மிலா, அஜந்தா, அனோஷ், கேசவன், பவித்திரா- சசிகரன், லோபனா, சர்மிளா, கோபிதாஸ், ரேணுகா, பயிசன், கம்சிகன், ஜெயக்கிஷொன், கெவின், அஷ்வீனா ஆகியோரின் பேரனும், பானுஜா, சாமினி, டானுஜன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(07.03.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக மு.ப.10.00மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மீசாலை மேற்கு, மீசாலை.
077 9401614

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி உறுதிகள் பெற்றுத் தருமாறு மறவன்புலோ மக்கள் கோரிக்கை

தென்மராட்சி, மார்ச் 7

தென்மராட்சி தெற்கு மறவன்புலோப் பகுதியில் 1983 ஆம் ஆண்டு குடியமர்த்தப்பட்ட குடும்பங்கள் தமக்கு காணி உறுதி பெற்றுத் தருமாறு பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

1983 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்து கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை கட்டடத்தில் தங்கியிருந்த

**குடியமர்ந்து 30 வருடங்களாகியும் தமக்கு உறுதி வழங்கப்படாததால் அரச வீடமைப்புத் திட்டம் உட்பட்ட நலத்திட்டங்கள் கிடைக்கவில்லை.**

தென்னிலங்கை தமிழ் மக்களுக்கு அறவழி போராட்டக் குழுவால் மறவன்புலோப் பகுதியில் குடும்பத்துக்குத் தலா 2 பரப்புக் காணிகள் வழங்கிக் குடியமர்த்தப்பட்டனர்.

தாங்கள் குடியமர்ந்து 30 வருடங்களாகியும் தமக்கு உறுதி வழங்கப்படாததால் அரச வீடமைப்புத் திட்டம் உட்பட்ட நலத்திட்டங்கள் கிடைக்கவில்லை.

ஆகவே தமக்குரிய காணி உறுதியைப் பெற்றுத் தரு மாறு அவர்கள் பிரதேச செயலரிடம் கோரியுள்ளனர். (வ-9)

# கழிவு நீர் வாய்க்காலுக்கு மூடி இல்லாததால் ஆபத்து



யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ்.நகரில் வின்சர் சந்தியில் அமைந்துள்ள தனியார் எரிபொருள் விற்பனை நிலையத்தின் அருகிலுள்ள கழிவு நீர் ஓடும் வாய்க்காலின் மேல்பக்க மூடி சேதமடைந்துள்ளதால் வீதியால் பயணிப்போர் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

திங்கட்கிழமை குறித்த பகுதியூடாகச் சென்ற வாகனம் அந்த வாய்க்காலில் சேதப்பட்ட மூடியால் விபத்துக்குள்ளாக நேர்ந்தது.

எனவே இதனைக் கருத்தில் கொண்டு வாய்க்காலின் சேதப்பட்ட மூடிகளை புனரமைக்க மாநகர சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

# யாழ்.மாவட்டத்தில் இதுவரை இந்து ஆலயங்கள் 460 பதிவு

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். மாவட்டத்தில் இதுவரை ஆயிரத்து 460 இந்து ஆலயங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் சாந்தி திருநாவுக்கரசு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளாதாவது:-

இந்து சமய கலாசார திணைக்களத்தால் இந்து ஆலயங்கள் பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரத்து 460 இந்து ஆலயங்கள் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்களுக்கு தேவையான புனரமைப்புப் பணிகள் கட்டட அபிவிருத்தி உட்பட ஆலயத்தின் புனர்நிர்மாணம் பணிகளுக்காக இந்து சமய கலாசார திணைக்களம் நிதி உதவியை வழங்கி வருகிறது.

இதனை விட ஆலயங்களின் இடம்பெறக்கூடிய திருட்டுச் சம்பவங்கள் ஏனைய பிணக்குகள் தொடர்பாக பொலிஸ் நிலையங்களில் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார். (வ-14)

# சாவகச்சேரி வைத்தியசாலை நோயாளர் விடுதிக்கு ரி.வி.

தென்மராட்சி,மார்ச் 7

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை 6 ஆம் இலக்க விடுதிக்கு தொலைக்காட்சி சேவை புதிதாக இணைக்கப்பட்டுள்ளது.

விடுதியில் சிகிச்சை பெற்று வெளியேறிய ஒருவர் தொலைக்காட்சிப் பெட்டியை அண்மையில் அன்பளிப்பாக வழங்கியிருந்தார். நோயாளரின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் உள்ள ஏழு விடுதிகளிலும், வெளி நோயாளர் பிரிவு மண்டபத்திலும், பொதுமக்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளும் 'டிஸ்' அன்ரனாவும் பொருத்தப்பட்டுள்ளன. தொலைக்காட்சிப் பெட்டி அன்ரனாக்களுக்கான வருடாந்தக் கட்டணம் சாவகச்சேரி நகர்ப் பகுதி வர்த்தகர்களால் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ-9)



பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றி இளைப்பாறிச் சென்ற 5 பணியாளர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். ந. நித்தியானந்தம், எஸ். சிவகுருநாதன், பொ.நாகரெத்தினம், செ. அன்ரனிநாயகம், பொ. புஷ்பராணி ஆகிய பணியாளர்களே கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் நிகழ்வில் கலந்து கொண்டு பணியாளர்களுக்கு மலர்மாலை அணிவித்துப் பாராட்டினார். (வ-17)

## நாயுடன் மோதி வீதி விபத்துகள்;

# இரண்டு மாதங்களில் 18 பேர் தெல்லிப்பழை வைத்தியசாலையில்

அளவெட்டி, மார்ச் 7

வீதியில் வாகனங்களில் பயணிக்கும் போது நாயுடன் மோதுண்டு விபத்துக்குள்ளான 18 பேர் கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

பலர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று வைத் தியசாலை புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கே.கே.எஸ் வீதி, தெல்லிப்பழை அம்பனை வீதி, அளவெட்டிப் பகுதி வீதிகளிலேயே மேற்படி சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, வீதிகளில் கட்டாக்காலி நாய்களின் அதிகரிப்பே இந்த விபத்துக்களுக்குக் காரணம் எனவும், இதன் காரணமாக வீதிகள் அசிங்கப்படுத்துவதுடன் வழிப்போக்கர்கள் நாய்க்கடிக்கு இலக்காகி வருவதையும் தடுக்க முடியாதுள்ளது.

அண்மையில் தெல்லிப்பழை பகுதியில் வீதியில் நாயுடன் மோதியதால் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் உயிரிழந்த சம்பவமும் இடம் பெற்றது.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக யார் முடிவெடுப்பது என பிரதேச மக்கள் கேள்வி எழுப்புகின்றார்கள். (வ-36)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் பற்சிகிச்சை சேவை விஸ்தரிப்பு

தென்மராட்சி, மார்ச் 7

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் பற்சிகிச்சைப் பிரிவின் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

பிரதி சனிக்கிழமைகளில் பாடசாலை மாணவர்களுக்கும் பிரதி புதன்கிழமைகளில் கர்ப்பிணிகளுக்கும் முன்னுரிமை அடிப்படையில் சிகிச்சை வழங்கப்படவுள்ளது.

வைத்தியசாலை பற்சிகிச்சைப் பிரிவுக்கு மேலும் ஒரு விசேட பயிற்சி பெற்ற பற்சிகிச்சை நிபுணர் கடமையேற்றுள்ளதை அடுத்து சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வளர்பருவத்தில் மாணவர்களுக்கு ஏற்படும் பற்சூத்தை, மிதப்புப் பல், நீக்கல் பல் உட்பட்ட நோய்களுக்கான சிகிச்சையளிக்கப்படுவதுடன் பற்சுகாதார

**தென்மராட்சிப் பிரதேச குடும்ப நல சேவையாளர் களின் ஒத்துழைப் புடன் கர்ப்பிணிகளுக்கும் பற் சிகிச்சை வழங்கப்படவுள்ளது**

மேம்பாடு, பல்லுக்கு கிளிப் போடுதல், பல் அடைத்தல் போன்றவையும் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரசவ வேளையில் பல் தொடர்பான நோய்கள் இருப்பின் கர்ப்பிணிகள் பல்வேறு தாக்கங்களுக்கு இலக்காகலாம் என்பதனால் தென்மராட்சிப் பிரதேச குடும்ப நல சேவையாளர்களின் ஒத்துழைப்புடன் கர்ப்பிணிகளுக்கும் பற்சிகிச்சை வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# கால்நடை வைத்தியர்கள் சேவையாற்றுவதில் சிரமம்

## சாரதிகள் பற்றாக்குறை காரணமாக

அச்சுவேலி, மார்ச் 7

யாழ். பிராந்திய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் நிலவும் வாகனச் சாரதிகளுக்கான பற்றாக்குறையால் கால்நடை வைத்திய அதிகாரிகள் உரிய முறையில் பொதுமக்களுக்கான சேவையை வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பிராந்திய கால்நடை உற்பத்தி சுகாதார பணிப்பாளர் எல்லைப் பரப்பில் உள்ள வாகனங் களைச் செலுத்துவதற்கு சாரதிகள் இருவர் மட்டுமே தற்பொழுது சேவையில் உள்ளனர்.

அவர்கள் சுழற்சி முறையில் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரிகள் அலுவலகங்களுக்குச் சென்று தமது கடமையை மேற்கொள்கின்றனர். இதனால் வாகனங்களை உரிய முறையில் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆறு சாரதிகள் சேவையில் இருக்க வேண்டிய நிலையில் இரண்டு சாரதிகள் மட்டுமே தற்போது சேவையில் உள்ளனர்.

இதனால் வைத்திய அதிகாரிகள் மற்றும் பணிப்பாளர் ஆகியோர் உரியமுறையில் வெளிக்கள வேலைகளை மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

சாரதிகள் பற்றாக்குறை தொடர்பாக மேலிடத்துக்கு உரிய முறையில் தெரியப்படுத்திய போதிலும் ஆளணி உரிய முறையில் நிரப்பப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-11)

# உதயபுரம் பற்றைப் பகுதிக்குள் ஆர்.பி.ஜி. குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 7

கொழும்புத்துறை உதயபுரம், பகுதியில் பற்றைக் காணி ஒன்றில் இருந்து பயன்பாட்டுக்கு உதவாத நிலையில் 16 ஆர்.பீ.ஜீ. குண்டுகள் திங்கட்கிழமை மீட்கப்பட்டு நீதிமன்றின் அனுமதியுடன் அழிக்கப்பட்டதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த காணியில் பற்றைகளை வெட்டித் துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த போதே அவை பொதுமக்களால் கண்டறியப்பட்டன.

அதுகுறித்து யாழ். பொலிஸாருக்கு அறிவிக்கப் பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் இணைந்து அவற்றை மீட்டனர்.

16 குண்டுகளும் பயன்படுத்த முடியாத அளவில் இருந்தன. அவை நீதிமன்றின் அனுமதியுடன் அழிக்கப்பட்டன என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-ரி)

# வீதியின் குறுக்கே ஓடிய நாயால் மோ.சைக்கிளில் பயணித்தவர் காயம்

தென்மராட்சி, மார்ச் 7

வேகமாக ஓடி வந்த நாய் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஹன்டர் வாகனத்துக்கு கீழாக ஓடி வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் அந்த வழியே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது. இதனால் அதில் பயணித்த ஆசிரியை தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை மட்டுவில் பகுதியில் இடம் பெற்றது.

பூநகரி கல்வி வலயப் பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த சிவதாஸ் சிவாஜினி (வயது-25) என்ற ஆசிரியையே காயமடைந்தவராவார்.

இதேவேள்ள, வாகனத்திலிருந்து தவறிவீழ்ந்து குடும்பஸ்தரொருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஏ-9 வீதியில் இடம்பெற்றது. விசுவமடு, புன்னைநீராவியடியைச் சேர்ந்த மார்க்கண்டு ரவீந்திரன் (வயது-40) என்பவரே காயமடைந்தவராவார்.

விசுவமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நெல் மூடைகள் ஏற்றி வந்து பறித்து விட்டு திரும்பிச் செல்கையில் சம்பவம் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்த இருவரும் சாவகச் சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஹைதராபாத் குண்டுவெடிப்பு 10 பேருக்கு பிடி விறாந்து



டில்லி, மார்ச்.7

ஹைதராபாத் இரட்டை குண்டு வெடிப்பு வழக்கில் இந்தியன் முஜாகிதீன் தீவிரவாத இயக்கத் தலைவர் ரியாஸ் பட்கல் உட்பட 10 பேருக்கு நீதிமன்றம் பிடிவிறாந்து பிறப்பித்துள்ளது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி ஹைதராபாத்தில் நடைபெற்ற இரட்டை குண்டு வெடிப்பில் 16 பேர் கொல்லப்பட்டனர்.

இந்தக் குண்டு வெடிப்புக்கு இந்தியன் முஜாகிதீன் தீவிரவாத இயக்கம்தான் காரணம் என்று தேசிய புலனாய்வு நிறுவனம் (என்.ஐ.ஏ.) கூறியுள்ளது. குண்டுகள் வைக்க ஒத்திகை பார்த்ததாகக் கூறப்படும் இந்தியன் முஜாகிதீன் தீவிர வாதிகள் 2 பேர் டில்லி திகார் சிறையில் இருந்தனர்.

அவர்களை 5 நாள் காவலில் எடுத்து என்.ஐ.ஏ. விசாரித்தது. காவல் முடிவடைந்ததால் டில்லி மாவட்ட நீதிமன்றத்தில், இரு தீவிரவாதிகளும் நேற்று முன்தினம் மீண்டும் முன்னிலைப் படுத்தப்பட்டுத் திகார் சிறையில் அடைக்கப்பட்டனர்.

அதன்பின்னர் இடம்பெற்ற இரகசிய விசாரணையைத் தொடர்ந்து, இந்தியன் முஜாகிதீன் தலைவர் ரியாஸ் பட்கல், அவரது சகோதரர் இக்பால் பட்கர் உட்பட 10 தீவிரவாதிகளுக்கு நீதிபதி பிடிவிறாந்து பிறப்பித்தார். (வ)

### இலங்கைக்கு எதிரான பிரேரணை

# இந்தியா ஆதரவளிக்கக்கோரி மார்ச்.12 இல் வேலைநிறுத்தம்

சென்னை, மார்ச்.7

இலங்கை அரசின் இனப் படுகொலையைக் கண்டித்தும் அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை இந்திய அரசு ஆதரிக்க வலியுறுத்தியும் எதிர்வரும் 12 ஆம் திகதி தமிழகம் முழுவதும் பொது வேலைநிறுத்தத்துக்கு 'டெசோ' அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

'டெசோ' அமைப்பு சார்பில் சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக நேற்று முன்தினம் முற்று கைப் போராட்டம் நடை பெற்றது. அதைத்தொடர்ந்து அன்று மாலை அண்ணா அறிவாலயத்தில் டெசோ உறுப்பினர்களின் கலந்துரையாடல் கூட்டம் இடம்பெற்றது. அதில் பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு:-

### 'டெசோ' அமைப்பு அழைப்பு




★இலங்கை அரசின் மனித உரிமை மீறல் மற்றும் இனப் படுகொலையைக் கண்டித்து ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா பிரேரணை கொண்டு வந்துள்ளது. அந்தப் பிரேரணையை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்று வலியுறுத்தி எதிர்வரும் 12ஆம் திகதி காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை தமிழகம் முழுவதும் கடையடைப்பு நடத்தப்படும்.

★இது கட்சி சார்பற்ற வேலை நிறுத்தம் ஆகும். இதற்குத் தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள், வர்த்தக நிறுவனங்கள், தமிழ் உணர்வாளர்கள், மாணவர்கள் என்று அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்று பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

அதேவேளை இலங்கை ஜனாதி பதி ராஜபக்ஷவை போர்க் குற்ற வாளியாக அறிவிக் கக்கோரித் தீக்குளித்து இறந்த கடலூர் மணிக்குக் கூட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி கூட்டத்துக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி தலைமை வகித்தார். தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்ராலின், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத் தலைவர் தொல்.திருமாவளவன், திராவிட இயக்க தமிழர் பேரவைப் பொதுச் செயலாளர் சுப.வீர பாண்டியன், துரை முருகன், சுப்புலட்சுமி ஜெகதீசன், ரவிக்குமார், கலி.பூங்குன்றன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

## இலங்கையில் தமிழீழம் அமைப்பதை ஏற்க முடியாது என்கிறார் ராகுல்



சென்னை, மார்ச் 7

டெசோ மாநாட்டில் காங்கிரஸ் கலந்துகொள்வது குறித்து சோனியா காந்தியே தான் முடிவெடுப்பார் என்று அந்தக்கட்சியின் உதவித் தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

அதேவேளை இலங்கையில் தமிழீழம் அமைக்கப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

நேற்று முன்தினம் காங்கிரஸ் தரப்பு உறுப்பினர்கள் ராகுல் காந்தியைச் சந்தித்து இலங்கைத் தமிழர் விடயம் தொடர்பில் பேச்சு நடத்தியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். சந்திப்பின் போது அவர் மேலும் கூறியதாவது:

இலங்கைத் தமிழர்கள் பக்கமே இந்தியா இருக்கிறது. அவர்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டியது அவசியம். எனினும் அந்தத் தீர்வு தனி ஈழமாக இருக்காது அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை புதுடில்லியில் இன்று நடைபெறவுள்ள 'டெசோ' மாநாட்டில் காங்கிரஸ் கட்சியினர் பங்கேற்பது தொடர்பில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியுடன் பேச்சு நடத்துங்கள்.

அதன் பின்னர் இது குறித்த இறுதித் தீர்மானத்தை மேற்கொள்ளலாம் என்றும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார் என்று 'த இந்து' பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது. (வ)

## சனல் -4 இற்கு கருணாநிதி பாராட்டு

டில்லி, மார்ச் 7

இலங்கையில் ஈழத்தமிழர் இனப்படுகொலை செய்யப்பட்ட கொடூரக் காட்சிகளை சனல்-4 மூல மாகப் படம் பிடித்துக்காட்டிய அதன் தயாரிப்பாளர் கெலும் மக்ரேயுக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி பாராட்டுத் தெரிவித்தார்.

இதுகுறித்து கருணாநிதி சனல் -4 தயாரிப்பாளர் மக்ரேயுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது ஈழத்தமிழர்களுக்காக மக்ரேய் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பாராட்டினார். சனல்-4 வெளியிட்ட துயரக் காட்சிகள் எங்கள் மனதை ரணமாக்கி கண்களைக் குளமாக்கியது. உலக அளவில் இந்தக் காட்சிகளைக் கொண்டு சென்று ஈழத்தமிழருக்குத் தாங்கள் அளித்த ஆதரவுக்கும் பிரசாரத்துக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்- என்று கருணாநிதி பாராட்டியுள்ளார். (வ)

## விஞ்ஞானி ஐன்ஸ்டீனை நுண்ணறிவில் விஞ்சிய இந்தியச் சிறுமி

சென்னை, மார்ச் 7

தனது நுண்ணறிவுத் திறனால் 12 வயது இந்தியச் சிறுமி விஞ்ஞானிகளான ஐன்ஸ்டீன் மற்றும் ஸ்டீபன் ஹாக்கிங் ஆகியோரை விஞ்சியுள்ளார். நுண்ணறிவு எண் என்ற பரீட்சையில் இந்திய மருத்துவத் தம்பதியாரான நேகா ராமுவின் மகள் 162 புள்ளிகள் பெற்றுச் சாதனை படைத்துள்ளார். அவரது வயதுக்கு இது அதிக புள்ளி ஆகும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங், மைக்ரோ சொப்ட் நிறுவுநர் பில் கேட்ஸ், விஞ்ஞானி ஐன்ஸ் டீன் ஆகியோருக்கும் நுண்ணறிவுப் பரீட்சையில் 160 புள்ளிகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (வ)


31ஆம் நாள் நினைவஞ்சலி



சாவகச்சேரி விவசாய போதனாசியர்
சு.விஜயகுமார்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
ஆறுமுகம் சுப்பிரமணியம்
அவர்கள் 05.02.2013
இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
அனைத்து விவசாய சம்மேளனங்களும் பரம்பொருளைப் பிரார்த்திக்கின்றோம்.
கமநல சேவை நிலையம்
சாவகச்சேரி, தென்மராட்சி.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(34188)(ப.ம)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

தவறிவிட்டது
ஐயந்துரை இராசகுமார் என்பவருடைய தே.அ.அட்டை (641700134 V), சாரதி அனுமதிப்பத்திரம் என்பன (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை பாசையூர்க்கும் அரியாலைக்குமிடையில் தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
021 3001 119,

இருகடைகள் வாடகைக்கு
யாழ். முனீஸ்வரன் வீதியில்
அமைந்துள்ள இருகடைகள்
வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 6932 324

குழந்தை வைத்திய நிபுணர்
பார்வையிடும் நேரம்:
தினசரி - காலை 7 மணி
லாவா வைத்தியசாலை
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :021-2224333

பன்னிரண்டாவது பிறந்தநாளில்
மனதிலெழும் மீளாத நினைவுகளுடன்



மண்ணில் மலராக 07.03.2001
விண்ணில் மதியாக 10.04.2009
அமரர் சத்தியநாதன் டக்சாயினி
பன்னிரண்டு வயதில் பூவாய்
மலர்ந்திருக்க வேண்டிய
எங்கள் செல்வமே
மாறாத சோகத்தை
எங்களுக்கு தந்துவிட்டு
மாயமாய் மறைந்தாயே
ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது உன் நினைவு
அம்மா, அக்கா, தம்பி,
மச்சாள்மார்.
A9 சாலை,
(கந்தசாமி கோவில்
முன்பாக),

31ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் - 15.05.1952
மறைவு - 05.02.2013
அமரர்
தம்பன் சிவபாதம்
கடந்த 05.02.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் தம்பன் சிவபாதம் அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று(07.03.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இலந்தைக்காடு,
வல்வெட்டித்துறை.
குடும்பத்தினர்.
(34122)(3.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

**சாரதி தேவை**
ஓட்டோ மற்றும் படி ரக வாகனம் ஓட்டக் கூடியவர்கள்.45 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்
தொடர்பு: 0776544428
(34209)(6.7.11)

# முன்னாள் ஜனாதிபதி நஷீட் மாலைதீவு அரசால் கைது

## இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழிகளையும் மீறி

மாலே, மார்ச் 7

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீட், அந்நாட்டு அரசால் கைது செய்யப்பட்டுள்ளார். நஷீட் கைது செய்யப் படமாட்டார் என்று இந்தியாவுக்கு வழங்கிய உறுதிமொழியையும் மீறி அவரைக் கைது செய்துள்ளது மாலை தீவு அரசு.

இராணுவப் புரட்சியின் மூலம் பதவி விலக்கப்பட்ட நஷீட் மீது, மாலைதீவு தலைமை நீதிபதி அப்துல்லா முகம்மதை கைது செய்ய உத்தரவிட்டமை தொடர்பான வழக்கு தற்போது நடந்து வருகிறது. அந்த வழக்கில் நஷீட்டைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது.

அதையடுத்து மாலைதீவு தலைநகர் மாலேவில் உள்ள இந்தியத் தூதரகத்தில் நஷீட் தஞ்சம் புகுந்தார். இந்தியத் தூதரகத்தில் தஞ்சமடைந்த நஷீட்டைக் காப்பாற்ற மாலை தீவு அரசுடன் இந்திய அரசு மறைமுகப் பேச்சுகளை நடத்தியது. பேச்சுக்களின் பலனாக நஷீட் கைது செய்யப்படமாட்டார், தேர்தலில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார் என்று அறிவித்தது மாலை தீவு அரசு.

அந்த அறிவிப்பை அடுத்து 11 நாள்கள் இந்தியத் தூதரகத்தில் தஞ்சமடைந்திருந்த நஷீட் கடந்த வெள்ளிக்கிழமை அங்கிருந்து வெளியேறினார். இந்தநிலையில் நேற்று முன்தினம் அவர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். கைதை அடுத்து இந்திய-மாலைதீவு அரசியல் வட்டாரங்களில் பரப்பரப்பான நிலைமை தோன்றியுள்ளது என்று கூறப்படுகிறது. (ற)

# புத்த துறவிகள் மூவருக்கு சீனாவில் சிறைத் தண்டனை

பீஜிங், மார்ச் 7

தீக்குளிப்பதை ஊக்குவித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று புத்த துறவிகளுக்கு 15 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது சீன நீதிமன்றம்.

சீன ஆதிக்கத்தில் உள்ள திபெத்துக்கு விடுதலை வேண்டி தலாய் லாமா தலைமையில் போராட்டம் நடைபெற்று வருகிறது. விடுதலை வேண்டி தீக்குளிக்கும் சம்பவங்கள் திபெத்தில் அதிகரித்து வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் இதுவரை 100க்கும் மேற்பட்டவர்கள் தீக்குளித்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் கன்சு மாகாணத்தில் ஒருவர் தீக்குளித்து உயிரிழந்தார். அவரைக் தீக்குளிக்க ஊக்குவித்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 3 புத்த துறவிகள் சீனப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வழக்கு விசாரணைகளின் முடிவில் மூவருக்கும் 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (ற)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற 28 ஆவது பட்டமளிப்பு விழாவில், பட்டம் பெற்ற
**பாலசுந்தரம் புஸ்பாகரன்**
(B.B.A (Hons)F.M.Spl.
அவர்கள் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ மனமார வாழ்த்துகின்றோம்
வாழ்த்துபவர்கள்:
க.பாலசுந்தரம் குடும்பத்தினர்,
சி.சசிகுமார் குடும்பத்தினர்
(அக்கா, அத்தான், மருமக்கள்)
எழுதுமட்டுவாழ் தெற்கு,
எழுது மட்டுவாழ்.
(27784)(7.11)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (சிறப்பு)
B.A(Hons) Econ (1st class)
பட்டம் பெற்ற
செல்வன்
**விஜயநாதன் துவாரகன்**
அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள், பதவிகளைப் பெற்று சிறப்பாக வாழ எல்லாம் வல்ல ஆலடி விநாயகரை வேண்டுவதோடு, பல்கலையும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
பப்பா, சித்தி,
பெரியமாமா குடும்பம்,
சின்னமாமா குடும்பம்.
சாரதா, அல்வாய்.
(34196)(2.6.)

# ஹியூகோ சாவேஸ் சாவு

## கண்ணீரில் மூழ்கியது வெனிசுலா





கராக்கஸ், மார்ச் 7

வெனிசுலா ஜனாதிபதியும், புரட்சி யாளருமான ஹியூகோ சாவேஸ் (வயது-58) நேற்றுமுன்தினம் மாலை உள்ளூர் நேரப்படி 4.25 மணிக்கு உயிரிழந்தார். வெனிசுலாவின் துணை ஜனாதிபதி நிக்கோலஸ் மடுரோ, சாவேஸ் உயிரிழந்ததை உத்தியோக பூர்வமாக மக்களுக்கு அறிவித்தார். அந்தத் தகவல் வெளியானதும் வெனிசுலா நாடு பெரும் சோகத்தில் மூழ்கியது.

வெனிசுலா மக்களின் பெரும் அன்பைப் பெற்ற ஜனாதிபதியாகத் திகழ்ந்த சாவேஸ் புற்று நோயால் பாதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்தார்.

கடந்த இரண்டு மாதங்களாகக் கியூபாவில் தங்கி சிகிச்சை பெற்றுவந்த சாவேஸ் கடந்த மாதம் 19ஆம் திகதி நாடு திரும்பியிருந்தார்.

அதன்பின்னர் வைத்தியர்களின் பராமரிப்பில் தமது வீட்டில் தங்கி யிருந்த சாவேஸுக்கு கடந்த வாரம் சுவாசக் கோளாறு ஏற்பட்டதை அடுத்து இராணுவமருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

புற்றுநோய்க்கான அறுவைச் சிகிச்சைகள் மூலம் பலவீனமடைந்திருந்த சாவேஸின் உடல்நிலை, சுவாசத் தொற்றுக் காரணமாக மேலும் மோசமான நிலையை அடைந்தது. நேற்றுமுன்தினம் மாலை சிகிச்சை பெற்றுவந்த இராணுவ மருத்துவமனையில் சிகிச்சைகள் பலனின்றி சாவேஸின் உயிர் பிரிந்தது.

சாவேஸின் மறைவால் வெனி சுலா பெரும் சோகத்தில் மூழ்கியுள்ளது. மக்கள் வீதிகள் எங்கும் கண்ணீர் விட்டு அழுதவாறு திரண்டிருப்பதைக் காணமுடிகின்றது என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன. (ற)

சேவைநலன் பாராட்டு

கிருஷ்ணபிள்ளை சிவராஜா
(பிரதி பிரதம பாதுகாப்பு உத்தியோகத்தர்,வடபிராந்திய காரியாலயம்,இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.)
கடந்த மூன்று சகாப்தங்களாக இலங்கை வங்கியில் எம்மோடு பணி புரிந்து இன்று 07.03.2013 இல் ஓய்வு பெறும் கிருஷ்ணபிள்ளை சிவராஜா அவர்கள் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.
Best Wishes
பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்,
இலங்கை வங்கி,
வடபிராந்தியம்.
(34206)(5.6.7)

**பஸ் விற்பனைக்கு**
கிளிநொச்சி, யாழ்ப்பாணம் சேவையில் ஈடுபட்டு வரும் நல்ல நிலையில் உள்ள அசோக் லேலண்ட் 42 சீற்-HD XXXX இலக்கமுடைய பஸ் வண்டி விற்பனைக்கு ISUZU JOURNEY m-மொடல் பஸ்ஸுக்கு மாற்றுவது பற்றியும் கவனத்திற் கு எடுக்கப்படும்.
தொடர்பு: 0773648163
(24283)(6.7.11)

**லொறி விற்பனைக்கு**
தற்பொழுது சேவையிலுள்ள அசோக் லேடண்ட் 1613 அரை பொடி லொறி விற்பனைக்கு (இல:LA XXXX) பொடி புதுப்பிக்கப்பட்டுள்ளது.
தொடர்பு. 0773648163

# குற்றங்களில் ஈடுபட்டோருக்கு சவூதியில் கொடூரமான தண்டனைகள்

டோஹா, மார்ச் 7

சவூதி அரேபியாவில் குற்றச்செயல்களில் ஈடு பட்ட 7 பேருக்கு, சிலுவையில் அறைந்தும் சுட்டுக்கொன்றும் தண்டனை நிறைவேற் றப்பட்டுள்ளது.

2004 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் கொள்ளை, வழிப்பறி, திருட்டு ஆகிய குற்றங்களில் ஈடுபட்டமைக்காகவே தற்போது தண் டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர்கள் மீது விசாரணைகள் இடம்பெற்று வந்தன. விசாரணைகளின் முடிவில் கொள்ளை யில் ஈடுபட்டவர் களை வழி நடத்தியவரைச் சிலுவையில் அறைந்து மூன்று நாள்கள் தொங்கவிடுமாறும், மற் றைய 6 பேரைச் சுட்டுக் கொல்லுமாறும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**2004 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் கொள்ளை, வழிப்பறி, திருட்டு ஆகிய குற்றங்களில் ஈடுபட்டமைக்காகவே தற்போது தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.**

அவர்களுக்கான தண்டனை நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தக் குற்றச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களில் அரைவாசிப் பேர் கைது செய்யப்படும் போது சிறுவர்களாக இருந்தார்கள் என்று கூறியுள்ள மனித உரிமை அமைப்புகள், இவ்வாறு கொடூரமான முறையில் தண் டனை நிறைவேற்றப்பட்டமைக்குக் கடும் கண்டனங்களை வெளியிட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தின்
28 ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதுகல்விமாணி பட்டத்தைப் பெற்ற
**திருமதி**
**நந்தினி தணிகாசலம்**
(B.A.(Hons), PGDE, M.Ed.
(உபஅதிபர், யா/கைதடி விக்கினேஸ்வரா
வித்தியாலயம்)
அவர்கள் மேலும் பல பட்டங்கள்,
பதவியுயர்வுகள் பெற்று வளமாக வாழ
வாழ்த்துகின்றோம்.

Best wishes

ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம்.

(34187)(5.6)


# விளையாட்டிலும் அரசியல் தலையீடுகள் இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் முறையீடு

## அதன் இணையத்தில் 15 பதிவுகள் என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல



கொழும்பு,மார்ச்7

இலங்கை விளையாட்டுச் சங்கங்களில் அரசியல் தலையீடுகள் இருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் இணையதளத்தில் 15 முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு ஐக்கிய தேசியக்கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற விளையாட்டுகள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விளையாட்டுத் தெரிவுக் குழுவை எடுத்துக்கொண்டால், விளையாட்டிலிருந்து ஓய்வு பெற்று 15 அல்லது 20 வருடங்களின் பின்னரே விளையாட்டு வீரரொருவர் அதில் இடம்பெற முடியும். உலக நாடுகளில் இந்த நடைமுறைதான் இருக்கின்றது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைவராக இருப்பவர் 1970 ஆம் ஆண்டுகளில் விளையாடியவராவார். ஆனால், எமது நாட்டைப் பொறுத்தமட்டில் நிலைமை அவ்வாறில்லை.

தற்போது விளையாட்டுத்துறையிலுள்ள விளையாட்டு வீரர்களுடன் விளையாடியவர்களே தெரிவுக்குழுவில் இருக்கின்றனர். சங்கக்கார, மஹேல போன்ற வீரர்களுடன் சனத் ஜயசூரிய விளையாடியுள்ளார். எனவே, இவ்வாறான தெரிவுகளின் மூலம் பிரச்சினைகள் உருவாகலாம்.

அதேவேளை, இலங்கை விளையாட்டுச் சங்கங்களில் அரசியல் தலையீடு இருப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் சபை இணையதளத்தில் 15 முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அன்று 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையைப் பாதுகாக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆலோசனை வழங்கியது. ஆனால், அரசு அதைப் பாதுகாக்கவில்லை. 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை இழப்பால் அரசுக்கு 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.-என்றார். (ச-சி)


# பகிரங்க ஏல விற்பனை

**வடபிராந்திய பார ஊர்திகள் உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ/து), கிளிநொச்சி**
**பதிவு இல:- K/177 (21.07.1995)**

வடபிராந்திய பார ஊர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான பழைய வாகனங்களை திருமுறிகண்டியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து 13.03.2013 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

விற்பனை செய்யப்படவுள்ள வாகனங்களைக் கடமை நாள்களில் 9 மணி தொடக்கம் 4.00 மணிவரை பார்வை இடலாம். இது தொடர்பான விவரங்களையும் நிபந்தனைகளையும் "தலைமைச் செயலகம்" உலக உணவுத் திட்டம் அருகில் 155 ஆம் கட்டை, கிளிநொச்சியில் கேள்விப் பத்திரத்தினைப் பெற்றுப் பூர்த்தி செய்து 12.03.2013 மாலை 4.00 மணிக்கு முன்னதாக ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**தலைவர்,**
வடபிராந்திய பார ஊர்திகள் உரிமையாளர்
கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி.

(சி/6906)(2.25.7)


## ரூ.30 மில்லியன் பெறுமதியான சிகரெட்டுக்கள் மீட்பு

கொழும்பு,மார்ச்7

டுபாயிலிருந்து கொண்டுவரப்பட்ட 30 மில்லியன் ரூபா பெறுமதியான சிகரெட்டுக்களைப் பேலியாகொடை சங்கக் களஞ்சியசாலையிலிருந்து சுங்க அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். அதன்போது, சுமார் 8 பெட்டிகளிலிருந்து 1.2 மில்லியன் சிகரெட்டுக்களை சுங்கப் பிரிவினர் மீட்டுள்ளனர்.

4 பெட்டிகளில் காணப்பட்ட சிகரெட்டுக்களை உரிய ஆவணங்களை பயன்படுத்தியும், எஞ்சிய 4 பெட்டிகளில் காணப்பட்ட சிகரெட்டுக்களை போலி ஆவணங்களை பயன்படுத்தியும் இறக்குமதியாளர்கள் கொண்டுவந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. அதனால் அரசுக்கு 27 மில்லியன் ரூபா வரை வரி இழப்பு ஏற்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச)


**காணி விற்பனைக்கு**

நல்லூர் சூழலில் வீட்டுடன்
மூன்று பரப்பும் தனியாக
இரண்டு பரப்பும் உடன்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 8323526, 075 5109327

(33957)(5.6)



உடற் பருமனா ?
ஆலோசனையும் சிகிச்சையும்.

(T/4988)

**லாவா வைத்தியசாலை**
இல 75,கோவில் வீதி,யாழ்ப்பாணம்.
தொலைபேசி :021-2224333



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 12.05.1925 மறைவு 05.02.2013



**அமரர் ஆறுமுகம் சுப்பிரமணியம்**

அன்பின் திருவுருவே அஞ்சாத நெஞ்சமே- அப்பா
பாரினில் எமை தவழவிட்டீர்
பார் போற்றும் பண்பு தனில் வளர்தெடுத்தீர்
பஸ் வண்டி இல்லா கால மதில் தலை சுமந்து
பொருள் கொணர்ந்து எம்மை வாழ வைத்த தெய்வம் நீர்
கல்வி தனில் வித்தகராய் உத்தமராய் நாம் வாழ வழி சமைத்தீர்
நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும் ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும் ஆறிடுமா எம் துயரம் கலங்குகிறோம்
"யாவும் சதம் அல்ல என்று இறைவன் பதம் சென்றீரோ"

கடந்த 05.02.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (07.03.2013) வியாழக்கிழமை வவுனியா, கோவில் குளம், 5 ஆம் ஒழுங்கை தற்காலிக வதிவிடத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.திருமதி சந்திரகுமார்
"நீர்த்தனம்" கோவில் குளம்,
வவுனியா 0242223728 (34157) (6.11)

குடும்பத்தினர்.
சு. விஜயகுமார்
விவசாய போதனாசிரியர்,
சாவகச்சேரி/அடம்பன்



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

கடந்த 06.02.2013 புதன்கிழமை சிவபதமடைந்த

**அமரர் சபாரத்தினம் காயாரோகணம்**



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (06.03.2013) புதன்கிழமை காலை 8.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (08.03.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.)

58, நாயன்மார் வீதி,
நல்லூர். (34158)(6.11)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஓய்வு நிலை உப அதிபர்
செல்வி ஜெயந்திராதேவி சோமசுந்தரம்
அவர்களின் பாசமிகு தாயார்
திருமதி ஞானம்மா சோமசுந்தரம்
அவர்களின் மறைவால்
துயருற்றிருக்கும் அவரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கழகம்.
யா/ஊரெழு கணேச வித்தியாசாலை.

(சி/6919)(2.6)

## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி சுப்பிரமணியம்
(புங்குடுதீவு, 7 ம் வட்டாரம்)



புங்குடுதீவு, 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும், தற்போது கனடா ஸ்காபரோவை வதிவிடமாகவும் கொண்ட விநாசித்தம்பி சுப்பிரமணியம் கடந்த (02-03-2013) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, தில்லைவனம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மீனாட்சியின் ஆருயிர்க் கணவரும், பத்மநாதன்(கனடா), தனபாலன் (கனடா), காலஞ்சென்றவர்களான, கமலேஸ்வரி, அகிலேஸ்வரி மற்றும் குணராணி(நெதர்லாந்து), இந்திரன்(சுவிஸ்), சிவகுமார் (நோர்வே), திரிபுவனன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, இராமநாதன் (V.R.M) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான அ.வே. இளையதம்பி(மனோன்மணி விலாஸ் - மன்னார்), புஸ்பமணி, சபாபதிப் பிள்ளை, நடராசா, சொர்ணம்மா, இளையதம்பி(CTB), சுப்பிரமணியம்(P.M) மற்றும் திருநாவுக்கரசு(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், இந்திரா(கனடா), ஞானசக்தி(கனடா), கனகரெத்தினம் (சுண்டுக்குளி), கலைச்செல்வன்(நெதர்லாந்து), இரஞ்சனாதேவி (சுவிஸ்), விஜயபாரதி(நோர்வே), ரஞ்சினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2013) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

பத்மநாதன் (கனடா)
+ 14 16 7553 714 ,+ 14 163036 526

(34202) (45.6)

## அனுமதியின்றி கடற்கரையோரங்களில் அமைக்கப்பட்ட கட்டடங்கள் அகற்றப்படும்

**பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவிப்பு**

கொழும்பு,மார்ச் 7

இலங்கையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை வீதத்தை அதிகரிப்பதற்காக கடற்கரையோரங்களில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் அகற்றப்படும் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சு அறிவித்துள்ளது.

வியாபார நோக்கில் உள்ளூர்வாசிகளால் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள், சுற்றுச்சூழலுக்குப் பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளன. அந்தக் கட்டடங்கள் பிரபல சுற்றுலாத் தலங்களுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன என்று அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை ஹிக்கடுவை கடற்கரை, சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையாலும், கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தாலும் சுத்தம் செய்யப்பட்டது.

அதற்கமைவாக இந்தப் பகுதியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட 8 கட்டடங்கள் இடித்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளன.

கரையோரப் பகுதிகளில் வாழ்வோரில் 80 வீதமானோர் சுற்றுலாத்துறையை நம்பியே தமது வாழ்வாதாரத்தை கொண்டுள்ளனர். சுற்றுலாப் பணிகளுக்கான படகு சேவைகள், போக்குவரத்து வழிகாட்டல், கைப்பணி பொருள்கள் என்பவற்றை வழங்குவதால் அவர்கள் வருமானத்தை ஈட்டிக்கொள்கின்றனர்.



பெந்தோட்ட, ஹிக்கடுவ, உணவத்துன, மிரிஸ்ஸ, தங்காலை, கிரிண்ட போன்ற கரையோர பகுதிகளிலேதான் சுற்றுலாத்துறை வணிகம் அதிகரித்துக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தென்னமரவாடி செல்லும் வீதிகள் புனரமைப்பில்லை

திருகோணமலை, மார்ச் 7

திருகோணமலை நகரின் எல்லைக் கிராமமான தென்ன மரவாடிக்குச் செல்லும் பிரதான வீதிகள் உரிய முறையில் புனரமைக்கப்படாததால், பஸ் போக்குவரத்தைச் சீராக மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை போக்குவரத்துச் சபையால் இந்தக் கிராமத்துக்கு நீண்ட காலத்துக்குப் பின்னர் பஸ்

**2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தென்ன மரவாடி கிராமத்தின் பல்வேறு அடிப்படை வசதிகள் இன்றுவரை பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன**

சேவை ஆரம்பிக்கப்பட்டபோதும், சீரான சேவையை வழங்க முடியாதுள்ளது என்று கூறப்படுகிறது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் தற்காலிமாக புனரமைக்கப்பட்டிருந்த வீதி முற்றாக சேதமடைந்துள்ளது.

அதனால் திருகோணமலை நகரில் இருந்து தென்ன மரவாடிக்கு வரும் பஸ்கள் இடையிலேயே திரும்பிச் செல்வதனால், அந்தப் பகுதி பொது மக்கள் பாதிக்கப்படுகின்றனர்.

2011 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட தென்ன மரவாடி கிராமத்தின் பல்வேறு அடிப்படை வசதிகள் இன்றுவரை பூர்த்தி செய்யப்படாமல் உள்ளன என்று தமிழ் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (ச-40)

## மரண அறிவித்தல்

### திருமதி தெய்வானை சுப்பிரமணியம்



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தெய்வானை சுப்பிரமணியம் (05.03.2013) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - பாக்கியம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (யாழ்.சின்னக்கடை புகையிலை வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும், கந்தசாமி, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பூமணி, கண்மணி, காலஞ்சென்றவர்களான நவரத்தினம், துரைராசா ஆகியோரின் மைத்துனியும், வனஜா (UK), காலஞ் சென்ற விஜிதா மற்றும் வரதா (U.S.A), சுஜாதா (Canada), சுகுணா (UK), சரசா (Swiss), Dr. முருகதாஸ் (Colombo South Teaching Hospital) ஆகியோரின் அன்புத் தாயும், நவசோதி, வன்மீகலிங்கம், கிருஷ்ணதாசன், சோமசுந்தரம், இமயபுரன், தேவானந்தம், துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியும், நிசாந்தினி, நவீன், நிரோஸ், கீர்த்தனா, சகானா, கோபன், லாவன்யா, தரணியா, அபிநயா, தரனியா, சங்கர், சாகீசன், சாரஜன், சரண்யன், ஆராதனா, ஆரத்யா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்மை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"கீர்த்தனா பவனம்",
ஏழாலை [illegible]

தகவல்: குடும்பத்தினர்
T.P.0772619160

[illegible](2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடியாதவை...!

★ பன்றிகளால் வானத்தை அண்ணாந்து பார்க்க முடியாது

★ யானையால் குதிக்கவும் தாண்டவும் முடியாது

★ முதலைகளால் நாக்கை வெளியே நீட்ட முடியாது

★ முதலை, திமிங்கிலம் ஆகியவற்றால் மீன்களைப் போல நீருக்குள் மூச்சுவிட முடியாது.

★ கிவி பறவையால் இரண்டடி தூரம் கூடப் பறக்க முடியாது

சிந்து சிவதாஸ்
சுதுமலை தெற்கு, மானிப்பாய்



# நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே......!

இன்றைய சமுதாயத்தில் நவநாகரிக மோகத்தில் நாட்டம் செலுத்துவதும், அதற்காக நேரத்தை வீண்விரயமாக்குவதும் அதிகமாக பெண்களே. முன்னைய காலத்தில் சாந்தம், அமைதி, பணிவு, என்பவற்றிற்கு உதாரணம் பெண்கள்தான். ஆனால் இந்தக்காலத்தில் பெண்கள் சாந்தம், அமைதி, பணிவு என்பவை இல்லாமல் மிகவும் மோசமான நவநாகரிகத்தில் மூழ்கியுள்ளனர்.

நவீன காலத்தில் தாய்க்கும், மகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய் விட்டது. ஏன் என்று தெரியுமா? தாய் தனக்குப் பிள்ளைகள் இருக்கின்றனர் என்பதை மறந்து தன்னுடைய முகத்துக்கு, பூச்சு நவீன ஆடை அலங்காரம் என்பவற்றில் ஈடுபடுகிறாள். இறந்தபின் மண்ணாய்ப் போகும் வெற்று உடலுக்கு தேவையற்ற நேரத்தையும் அதிகளவான பணத்தினையும் செலவும் செய்கின்றாள். எவ்வளவுதான் படித்து முடித்து பல பட்டங்களைப் பெற்று பட்டதாரிகள் ஆனாலும், கலாசாரம் மறந்தவர்களாய் தங்களுடைய மதிப்பை இந்த நவநாகரிக மோகத்தில் தம்மை இழக்கின்றனர். இவ்வாறு இருப்பதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் சிறு வயதில் பழகிய பழக்க வழக்கம் தான். ஏனென்றால் " தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்று கூறினார்கள் அந்தக்காலத்து பெரியார்கள். அது உண்மைதான். சிறு வயதில் இதேதாய்மார் தங்களை பண்பாடற்ற ஆடை அலங்காரங்களினால் அழகுபடுத்திச் சென்றதனால்தான், தற்போது அவர்களது பிள்ளைகள் தாய், தந்தையருக்குப் பயமில்லாமல், மரியாதையில்லாமல் தாமும் நவநாகரிகமாக உடுத்திச் செல்கிறார்கள். முன்னைய காலத்தில் தந்தைக்கு பின்னால்தான் பெண்பிள்ளைகள் மிகவும் பணிவாக தலை குனிந்து செல்வார்கள். தற்பொழுது அத்தகைய நிலை கேள்விக்குறியாகியுள்ளது.

இன்று தனது தந்தைக்கு முன்னால் பெண்பிள்ளை நவநாகரிக உடையுடன், ஒரு சிறு பணிவுகூட இல்லாமல், தலைநிமிர்ந்து தந்தைக்கான மதிப்புக்கூட வழங்காது செல்வதைக் காண்கிறோம். அந்தக்காலத்து பெண்கள் தலைமுடிக்கு பூ வைத்து, மிகவும் அடக்கமான உடையுடன் தங்களது வழிபாடு.செய்யும் தலங்களுக்கு செல்வர். அதுதான் கலாசாரமான முறை. ஆனால் தற்போதைய பெண்கள் அவ்வாறா செல்கின்றனர்? எமது கலாசாரத்துக்கு மாறுபட்ட விதத்தில் ஒரு சிறு மாற்றமாவது செய்துதான் வழிபாட்டுத் தலங்களுக்கு செல்கின்றனர். தலையில் பூ இப்பொழுது வைக்கிறார்களா? அடக்கமான உடை அணிகிறார்களா? நெற்றியில் பொட்டொன்று வைத்து செல்கிறார்களா? தலைமுடியை அழகாக பின்னிச் செல்கிறார்களா? தங்களுடைய பாதங்களுக்கு ஏற்ற, உடல் நலத்தை கெடுக்காத பாதணிகளை அணிகிறார்களா? இல்லையே? அவ்வாறான ஒரு பெண்களை இன்று காணமுடிவதில்லை!

என்னடா! இவளும் ஒரு பெண்ணாக இருந்து இவ்வளவு பெண்களை விமர்சிக்கிறாளே என்று வாசகர்கள் நினைப்பீர்கள். நானும் இந்த சமுதாய நவநாகரிகத்தில் ஈடுபடுகிறேன்தான். எமது கலாசாரத்துக்கு அமைந்த நவநாகரிகத்தில் ஈடுபடுகின்ற பெண்களையும் பார்க்கிறேன். கலாசாரக் கட்டுக்கோப்புக்கு மாறாக தம்மை அலங்கரிப்போரைக் கண்டு வெட்கமடைந்து தலைகுனிகின்றேன். எனது உள்ளார்ந்த கருத்தின் படி நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்கள் தான்.


**பி.ரோஸி செலின்**, பெரியகடை, மன்னார்.

"நவீன காலத்தில் தாய்க்கும், மகளுக்கும் வித்தியாசம் தெரியாமல் போய் விட்டது. ஏன் என்று தெரியுமா? தாய், தனக்குப் பிள்ளைகள் இருக்கின்றனர் என்பதை மறந்து தன்னுடைய முகத்துக்குப் பூச்சு, நாகரிக ஆடை அலங்காரங்களிலும் ஈடுபடுகிறாள்.

## கவலை

உணர்வோடு சேர்ந்த
உள்ளத்து அழுகுரல் இது
சிரம் வெடிக்க வைக்கும்
சிக்கலான சிந்தனை இது
கண்மணிகளை
கலங்க வைக்கும்
இடிமேகமிது
அலைந்து வாழ்வு தேடும்
அனாதைகளின் பிறப்பிடம் இது
தற்கொலை தாரிகளின்
கடைசி இருப்பிடமிது
இன்றைய வாழ்க்கையின்
இன்றி அமையாச் சொத்து இது
அளவற்ற பேராசைக்கு
அடுத்த படிநிலை இது.

பி.ஜதீஸ்குமார்
கள்ளப்பாடு, முல்லைத்தீவு.



## பொன்மொழிகள்

அன்பினால் செய்யப்படும் ஒவ்வொரு காரியமும் ஆனந்தத்தைக் கொடுத்தே தீரும்.


அமைதியின் ஆழத்தில் மாத்திரமே இறைவனின் குரலைக் கேட்க முடியும்.

அவசர புத்தியும், அடங்கா முன் கோபமும் அன்பின் பலனைக் கெடுக்கும். சாந்தமும், சற்குணமும் சதா பயனைக் கொடுக்கும்.

அரைகுறை நண்பரானாலும், அப்போது தான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாகப் பேசிக் கொள்ளுங்கள்.

உலகத்தையோ, மற்றவர்களையோ திருத்துவதற்கு உன்னால் முடியாது. உன்னையே நீ திருத்து.

உண்மையானாலும், பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளி விடாதீர்கள்.



ம.சிந்துஜா, நீர்வேலி.

## பிரிவு...

உன்னைப்
பிரிந்திருக்கும்
ஒவ்வொரு
நொடியும்
உன்னையே
நினைக்கிறது என்
இதயம்
எப்போதாவது
என்னைக்காண
வருவாயா
என ஏங்குகிறது
இரு விழிகள்
அன்பைக்
காட்டிய உனது
அன்பிற்கு
தவித்தவளாய்
ஏங்கி நிற்கிறேன்
எப்போது
என்முன் தோன்றி
எனதுயிரை
என்னிடம்
தருவாய்
அன்பே!

சாரு, மீசாலை

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது

**ஆண்களா? பெண்களா?**

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

## இளைஞர், யுவதிகளே!

உ[illegible]ளின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் [illegible]ற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்[illegible]டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள் ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..............................................

முகவரி :- ..............................................

..............................................

......................... திகதி

......................... கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி வலைச்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571.

# எதிர்க்கடை தேவைதானா?

அந்த ஊரில் கீரைக்குப் பெரும் மவுசு. ஒரேயொரு கீரை விற்பவள் மட்டும் அயல் ஊரில் இருந்து கீரை கொண்டு வருவாள். அவள் வரும்வரை காத்திருந்து அடிபட்டு வாங்க ஒரு கூட்டமே இருந்தது. இதனால் தனக்கு விரும்பிய விலைகளில் அவள் கீரையை விற்றுப் பெரும் இலாபம் ஈட்டிக்கொண்டிருந்தாள்.

அந்தச் சமயத்தில் திடீரென ஒரு நாள் இன்னொரு கீரை வியாபாரி அந்த ஊருக்குள் வந்தான். கீரைக்காரி சொன்னதை விடவும் அரை விலையில் அவனிடம் கீரை கிடைத்தது. இதனால் தமக்கு வழக்கமான கீரை விற்பவளை விட்டுவிட்டு வியாபாரியின் பக்கம் பாய்ந்தனர் மக்கள். கீரைக்காரியால் தனது வியாபாரத்தில் இப்படியொரு திருப்புமுனை ஏற்பட்டதைத் தாங்கமுடியவில்லை. அதனால் அடுத்த நாள் அதிகாலையே ஊருக்குள் வந்து முதல் நாள் அந்த வியாபாரி விற்றதை விடவும், மலிவான விலையில் கீரையை விற்றுக்கொண்டிருந்தாள். அப்போது ஊருக்குள் வந்த வியாபாரி, அவள் விற்பதை விட மீண்டும் அரைவிலையில் தன்னுடைய கீரைகளை விற்றான். பதிலுக்கு கீரைக்காரி "ஒரு பிடி கீரை இலவசம்" என்று தான் கொண்டு வந்த கீரைகளை காசேதும் வாங்காமலே ஆளுக்கு ஒருபிடி வீதம் கொடுக்கத் தொடங்கினாள். விடுவானா வியாபாரி? "ஆளுக்கு மூன்று பிடி கீரை இலவசம்" என்று கூவத் தொடங்கினான். மக்கள் பாடு ஒரே கொண்டாட்டம். வியாபாரிகளுக்குத் தான் திண்டாட்டம்.

இந்த கீரைக்கடைக்கு எதிர்க்கடை விடயம் பற்றிய நினைப்பு எல்லோருக்குமே அடிக்கடி வரும். பொதுவாக எப்போதெல்லாம் ஒரு குறித்த அமைப்பால் பாதிப்பு ஏற்படுகின்றதோ அல்லது அந்த அமைப்பால் எதுவித பயனும் இல்லை என்ற நினைப்பு தோன்றுகின்றதோ அப்போதெல்லாம் 'கீரைக் கடைக்கு எதிர்க்கடை வந்தால் தான் சரி' என்று முணுமுணுக்கவே செய்கிறார்கள்.

ஏற்கனவே தமிழ் மொழி பேசும் ஆசிரியர்களுக்கு என்று இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. இந்த இரு சங்கங்களும் கீரியும் பாம்பும் போன்றே ஒன்றுக்கொன்று ஏட்டிக்குப்போட்டியாக நடந்துகொள்வதாக உள்வீட்டுத் தகவல்கள் சொல்கின்றன. இந்த நிலையில் இந்த இரு கீரைக்கடைகளுக்கும் போட்டியாக மூன்றாவது எதிர்க்கடை முளைக்க இருப்பதாக அறிவிப்பு ஒன்று வெளியாகி உள்ளது. அரசின் ஆதரவுடன் உருவாகவுள்ள இந்த மூன்றாவது ஆசிரிய அமைப்பில் இணையுமாறு பகிரங்க அறிவித்தலும் விடுக்கப்பட்டிருக்கிறது.

தற்போது ஆசிரியர்களின் இடமாற்றம், பதவி உயர்வு என்பவற்றை தமது அரசியலுக்காக பயன்படுத்தவே இத்தகைய புதிய அமைப்புகளின் உருவாக்கத்தை சிலர் மேற்கொள்கிறார்கள். இது போன்றே கடந்த காலங்களில் எரியும் பிரச்சினையாக இருந்த வேலையற்ற பட்டதாரிகள் பிரச்சினைக்காகவும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் தாம் சார்ந்த தனித்தனி பட்டதாரி அமைப்புகளை நிறுவி, அவர்களின் பிரச்சினைகளைக் கேலிக் கூத்தாக்கி இருந்தன. இப்போது பட்டதாரிகளின் வேலையில்லாப் பிரச்சினைகள் பயிலுநர் நியமனத்தால் தணியத் தொடங்கியிருப்பதால், ஆசிரியர் பிரச்சினையை கையிலெடுக்க சிலர் முனைகிறார்கள். இந்த நிலையில் எல்லாவற்றுக்கும் எதிர்க்கடை வேண்டுமா அல்லது ஒற்றுமையே பலம் என்று ஓரணியில் நின்று தம் பிரச்சினைகளுக்காகப் போராடுவதா என்பதை ஆசிரியர்களே தீர்மானிக்க வேண்டும்.

# தடுத்துத்தான் பார்ப்போமே...

மணிவாசகன் நிமலன் (M.A.)
புள்ளிவிவர உதவியாளர்,
யாழ். மாவட்டச் செயலகம்.

இன்று உலகம் பூராகவும் பேசப்படும் விடயமாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் காணப்படுகின்றது. பல மேற்குலகுகள் இவ்வாறானதோர் ஆபத்தமான சூழலுக்கு ஏற்கனவே தள்ளப்பட்டு அதனைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் எம் சமூக அமைப்பிணைப் பொறுத்தவரை சமீப காலமாகவே சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பது பேசாப் பொருளாக இருந்து இன்று பேச வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளது.

யாழ். குடாநாடு தற்போது ஒரே நேரத்தில் பல்வேறு அழுத்தங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. இதனால் ஒரு சரியான சமூக ஓட்டத்துக்கு செல்ல முடியாது திண்டாடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. ஒரு பக்கம் உலகமயமாக்கலின் விளைவாக உலக போக்கோடு தன்னை மாற்ற வேண்டிய நிலை, மறு பக்கம் போரின் வடுக்களை சுமந்துகொண்டு நிற்கின்ற மக்கள், இளவயது விதவைகள், பெற்றோர் அற்ற பிள்ளைகள், செலவுக்கேற்ப வரவின்மை, பொருளாதாரமைய சமூக அமைப்பு, கூட்டுக் குடும்ப உடைவும் தனிக் குடும்ப உருவாக்கமும், கணவன், மனைவி இருவரும் வேலைக்கு செல்லும் நிலைமை, அபிவிருத்திச் செயற்பாடுகள், அரசியல் அழுத்தங்கள் என பல்வேறு நெருக்கீடுகளை ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டிய நிலைமையுள்ளது. இவற்றின் சங்கிலித் தொடர்ச்சியின் பக்கவிளைவுகளாக சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, விலைமாதர், வறுமை எனப் பல சமூகப் பிரச்சினைகள் விரிவடைந்து செல் லும்

முதலில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன என நோக்கின் ஏதாவது ஒரு பாலியல் நடவடிக்கை வயது வந்த ஒருவருக்கும் சிறுவர்களுக்கும் இடையில் நடத்தல், அல்லது இரு சிறுவர்களுக்கிடையில் அதில் ஒருவர் மேலாதிக்கம் செலுத்துதல் ஆகும்.

சிறுவர் துஷ்பிரயோகம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு விடயமாக இருந்தாலும் இந்தச் செய்திகள் வெளி உலகுக்கு வருதலை ஓர் ஆரோக்கியமான சமிக்ஞையாகவே கருதவேண்டும். ஏனெனில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் முன்னைய காலங்களில் நடைபெறவில்லை என கூறமுடியாது. அந்த விடங்கள் பெரியளவில் இடம்பெறாததனாலும், அவை சார் விழிப்புணர்வு இன்மை மற்றும் எமது பண்பாட்டு கட்டுப்பாடுகளினாலும் இவை பேசாப்பொருளாக மறைக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால் தற்போது நாம் இந்தச் சவாலினை நேரடியாக சந்திக்க வேண்டிய காலத்தின் கட்டாயத்துக்கு தள்ளப்பட்டுள்ளோம். பாலியல் துஷ்பிரயோகம் நடந்த பின்னர் ஒவ்வொருவரையும் குற்றம் கூறுவதிலும் பார்க்க அதனை நடைபெறாமல் தடுக்க பெற்றோர்கள் மற்றும் பெரியவர்கள் என்ன செய்யலாம் எனச் சிந்திப்பதே சாலச்சிறந்தது.

நாம் எமது பிள்ளைகளுக்கு பல பாதுகாப்பு விடயங்களை சிறு வயதிலேயே சொல்லிக் கொடுக்கின்றோம். வீதிகளை எவ்வாறு கடக்க வேண்டும், நச்சுப் பொருள்களை தொடக்கூடாது. உயரமான இடங்களில் இருந்து பாயக் கூடாது என்றெல்லாம் எச்சரிக்கிறோம். ஆனால் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பதை எமது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க தவறிவிடுகின்றோம். பலரிடம் இந்தவிடயங்களை பிள்ளைகளுக்கு எவ்வாறு விளங்கப்படுத்துவது, விளங்கப்படுத்தத் தேவையா? விளங்கப்படுத்தினால் விளங்குமா? என்ற வினா காணப்படுகின்றது. ஆனால் இதில் பிள்ளைக்கு முழுமையான பாலியல் அறிவினைப் புகட்டத் தேவையில்லை. அமெரிக்கா போன்ற மேலைத்தேச நாடுகளில் பாடசாலைகளில் சிறுபிள்ளைகளுக்கு பாலியல் கல்வி புகட்டப்படுகின்றது.

**சிறுவர்களை எப்படிப் பாதுகாக்கலாம்**

தரவுகளை கற்றலும் ஆபத்தினை புரிந்து கொள்ளலும்

உலக ரீதியாக நான்கு பெண் பிள்ளைகளில் ஒரு பெண் பிள்ளையும், ஆறு ஆண் பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளையும் 18 வயதினுள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக இந்தத் துறை சார்ந்தவர்கள் கூறுகின்றனர். ஐந்து சிறுவர்களில் ஒரு சிறுவர், இணையம் மூலம் பாதிப்படைகின்றனர். பாலியல் ரீதியான உடற்பாதிப்பிற்குட்பட்டவர்களில் 70வீதமானவர்கள் 17 வயதுக்குட்பட்டவர்களாவர்.

பாலியல் ரீதியாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பலர் இந்த விடயத்தினை பிறருக்கு தெரிவிக்காது இரகசியமாக வைத்திருக்கின்றனர். சிறுவர்கள் வெளி நபர்களால் பாதிப்படைவதிலும் பார்க்க குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களாலேயே கூடுதலாக பாதிப்படைகின்றனர். 30 - 40 வீதத்தினர் குடும்ப உறுப்பினர்களாலும் 60 வீதத்தினர் பெற்றோரால் நம்பப்படும் நபர்களாலும் மேற்கொள் ளப்படுகிறது. போதைப்பொருள் மற்றும் மதுபானம் பாவிப்பவர்களாலேயே 70-80 வீதமான பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சந்தர்ப்பங்களைக் குறைத்தல்

கூடியவரை சிறுவர்கள் தனியாக இருக்கும் சந்தர்ப்பத்தினை குறைத்தல் நன்று. பாடசாலையிலும் சரி வீட்டிலும் சரி தனிமையான சந்தர்ப்பங்களை தவிர்த்தலே சிறந்ததாகும். தற்போது பெற்றோர் இருவருமே வேலைக் குச் செல்வதனால் பிள்ளைகள் தனிமையாக இருக்கும் சந்தர்ப்பம் அதிகரித்துச் செல் கின்றது. வயது வந்தவர்களுடன் சிறுவர்களை அனுப்பும் போது அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது பெற்றோரின் கடமையாகும்.

பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பாக பிள்ளையுடன் கதைத்தல்

பிள்ளைகள் துஷ்பிரயோகம் நடந்தால் அதனை இரகசியமாகவே பேணுவர். பெற்றோர் பிள்ளைக்கு இடையிலான தொடர்பாடல் தடையினை நீக்கும்போதே பிள்ளை பெற்றோருடன் இதுசார் தகவல்களை சாதாரணமாக கூறும் நிலை உருவாகும். பிள்ளைகளுடனான நட்பு ரீதியான அணுகுமுறையே இதற்கு சிறந்ததாகும். இவ்விடயத்தினை கூறினால் பெற்றோர் தன்னை தண்டிப்பர் என கருதினால் பிள்ளை நாளடைவில் பாரதூரமாக பாலியல் சார் பிரச்சினைக்கு தள்ளப்பட்டு விடும். அதே நேரம் துஷ்பிரயோகம் செய்யும் நபர் இது தான் சரி இது தான் பிழை எனப் பிள்ளையை குழப்பும் நிலை, வேறு யாரிடமும் தெரிவித்தால் கொலை செய்வேன், தற்கொலை செய்வேன் என மிரட்டும் தன்மையும் காணப்படுகின்றது. இதனால் திறந்த தன்மையான தொடர்பாடலே இத்தகைய பிரச்சினையை தீர்ப்பதற்கு உகந்தது.

பாலியல் சார் பிரச்சினைகளை ஒரு பிள்ளை தனது பெற்றோரை விட நம்பிக்கையுள்ள வேறு ஒருவரிடமே கூறுவதை விரும்பும். எனவே இதில் பாடசாலை ஆசிரியர்கள் கூடிய பங்கினை எடுக்கலாம். இதற்குரிய சந்தர்ப்பங்களை பாடசாலையில் ஏற்படுத்தல் நன்று.

பிள்ளைகளிடம் உடல் உறுப்புக்கள், பருவமாற்றங்கள், துஷ்பிரயோகம் என்றால் என்ன, என்ன உறுப்புக்களை பிறர் தொட அனுமதிக்கக் கூடாது மற்றும் வயது பொருத்தமாக இருந்தால் பாலியல் தொடர்பாக கதைக்கலாம். அத்தோடு பாலியல் உறுப்புக்களின் பெயர்களை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்தலே அந்தப் பிள்ளை இலகுவாக இவ்வாறான பிரச்சன்னைகளை வெளிப்படுத்த உதவியாக அமையும். கை, காது போன்ற மனித உடலின் ஓர் உறுப்பாகவே பாலியல் உறுப்பும் உள்ளது. அதனை சொல்ல பெற்றோர் ஆகிய நாம் பின்னிற்பதோடு புதுப்புது சொற்களை கண்டுபிடித்து அதனை பயன்படுத்துகின்றோம். இதனால் இவை பேசக்கூடாதவிடயமாகவே சிறுபிள்ளைகளின் மனதில் விதைக்கப்படுகின்றது.

**பிள்ளைகளின் நடத்தைகளில் விழிப்பாக இருத்தல்**

பாலியல் ரீதியாக பாதிப்படைந்த பிள்ளைகளின் நடத்தைகளில் வெளித்தெரியக்கூடிய பெரியளவிலான மாற்றத்தினை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், உடலியல் ரீதியான சில மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாக இருக்கும். பாலியல் உறுப்புக்களில் கீறல் காயங்கள், பதட்டமான தன்மை, கூடுதலான கோபம், வயிற்று நோ, தலைச் சுற்றல் போன்ற வெளிப்பாடுகளை அசாதாரணமாக பிள்ளைகள் வெளிப்படுத்தும் போது அது தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்படல் வேண்டும். ஆனால் சில பிள்ளைகள் எவ்விதமான வெளிப்படுத்தல்களையும் காட்டாது இருப்பர். பிள்ளை பாலியல் ரீதியாக பாதிப்படைந்திருக்கலாம் என நீங்கள் சந்தேகித்தால் அது தொடர்பாக உடனடியாக அத்துறை நிபுணர்களிடம் காண்பித்தல் வேண்டும்.

திட்டத்தினை உருவாக்கல்

பிள்ளை எங்கு செல்கின்றது. யார் யாருடன் தொலைபேசியில் உரையாடுகின்றது என பாதிப்படைந்த பிள்ளைகளில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். பிள்ளைகள் சிலவற்றை கூற முனையும்போது, நீங்கள் கோபப்பட்டு உணர்ச்சி வசப்படுவீர்களாயின் பிள்ளை கூற வந்ததை மறைக்கலாம் அல்லது திரிபுபடுத்தித் தகவலை வழங்கலாம். பாதிப்படைந்த பிள்ளைக்கு உளவியல் ரீதியாக ஆதரவுகள் தேவைப்படலாம்.

யாழ்.குடாநாட்டினை பொறுத்தவரை பாலியல் ரீதியாக பாதிப்படைந்த பிள்ளைகளை பண்பாட்டோடு தொடர்புபடுத்தி பிள்ளையின் எதிர்காலம் கேள்விக்குறியாகி விட்டதாக கருதி பிள்ளையும் பெற்றோரும் பெரும் உளரீதியான பாதிப்பிற்கு உட்படுவதுடன் பிள்ளையின் பாடசாலையை மாற்றல், வாழ்விடத்தினை மாற்றல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

சந்தேகம் ஏற்படின் அவை தொடர்பாக செயற்படல்

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் சில இடங்களில் நடைபெறுவதாக நீங்கள் சந்தேகப்பட்டால் அவை தொடர்பாக உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு செயற்படல் வேண்டும். இதனால் பல சிறுவர்களின் எதிர்காலத்தினை பாதுகாக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

பங்குபற்றல்

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் சார் விழிப்புணர்வு மற்றும் தடுப்பதற்கான வழிமுறைகள் என்பவற்றை சமூகத்துக்கு அறிவூட்டலுக்கான நிகழ்வுகளில் பங்குபற்றலாம். உங்கள் பிரதேசத்திலுள்ள பாடசாலைகள், உள்ளூர் சங்கங்கள்,ளள அமைப்புக்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றில் பாலியல் துஷ்பிரயோகம்சார் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு உதவலாம்.

இவ்வாறாக பெரியவர்கள் தம் பொறுப்பினை உணர்ந்து விழிப்படைந்து செயற்படும் பட்சத்தில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தினை இயன்றவரை குறைக்கக் கூடியதாக அமையும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். உறவினர்களால் மன நிம்மதி கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். அரச கரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வியாபாரத்தில் பரபரப்பான சூழல் ஏற்படும்.

**இடபம்:** சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். யாரை நம்புவது என்கிற மனக்குழப்பத்துக்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது.

**மிதுனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**கடகம்:** நட்பு வட்டாரம் விரிவடையும். உறவினர்களின் வருகையுண்டு. பணவரவு திருப்தி தரும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**சிங்கம்:** நீண்ட நாள்களாகத் தடைபட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். வியாபாரத்தில் மறைமுகமான போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**கன்னி:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். உடன் பிறந்தவர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். முன் கோபம் குறையும்.

**நாளை**

மாசி- 23 வெள்ளிக்கிழமை 08.03.2013
திதி: துவாதசி 05.48 வரை
நட்சத்திரம்: உத்தராடம் பி.ப 03.08 வரை
சுபநேரம்: 06.24- 07.54 வரை
இராகுகாலம்: 10.54- 12.24 வரை

**துலாம்:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

**தனுசு:** சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப்பேச்சுக்கும் ஆளாவீர்கள். யாரையும் நம்பி உறுதிமொழி வழங்க வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்களின் தொந்தரவுகளுக்கு விட்டுக் கொடுப்பது நல்லது. உத்தியோகத்தில் சக ஊழியர்களைப் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**மகரம்:** சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டி வரும். உங்கள் வாயை கிளறி சிலர் வேடிக்கைப் பார்ப்பார்கள். அதிகம் பேச வேண்டாம். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**கும்பம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிட்டும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும்.

**மீனம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றி அடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் டென்ஷன், அலைச்சல் நீங்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 6 | 7 | | 2 | |
| 8 | | | | | 9 | 5 | | 7 |
| | | | 2 | | 5 | | 4 | |
| | 3 | | | 9 | | | 8 | 5 |
| 6 | 4 | 5 | | 2 | | 3 | 1 | 9 |
| 9 | 8 | | | 3 | | | 7 | |
| | 6 | | 8 | | 3 | | | |
| 4 | | 1 | 9 | | | | | 3 |
| | 7 | | 6 | 5 | | | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 5 | 8 | 9 | 1 | 7 | 6 | 2 | 3 |
| 7 | 6 | 2 | 4 | 3 | 8 | 5 | 1 | 9 |
| 3 | 1 | 9 | 6 | 2 | 5 | 4 | 8 | 7 |
| 6 | 9 | 3 | 1 | 4 | 2 | 7 | 5 | 8 |
| 5 | 2 | 4 | 8 | 7 | 3 | 9 | 6 | 1 |
| 1 | 8 | 7 | 5 | 6 | 9 | 3 | 4 | 2 |
| 9 | 4 | 1 | 3 | 8 | 6 | 2 | 7 | 5 |
| 2 | 3 | 6 | 7 | 5 | 1 | 8 | 9 | 4 |
| 8 | 7 | 5 | 2 | 9 | 4 | 1 | 3 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# 29 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
03.07.1949

உதிர்வு
07.02.2013

திருமதி
**சற்குணலிங்கம் றோஸ் மாக்கிறேற்**

(இளைப்பாறிய தொலைபேசி இயக்குநர் - ஸ்ரீலங்கா ரெலிகொம்- யாழ்ப்பாணம்)



எமது இல்லத் தலைவி **திருமதி சற்குணலிங்கம் றோஸ் மாக்கிறேற்** அவர்களின் இறுதிக் கிரியைகளில் நேரில் கலந்துகொண்டும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டும், மலர் வளையங்கள் வைத்தும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (07.03.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
கொக்குவில்.

சற்குணலிங்கம் (கணவர்)
மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

(34125)(45-6)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நகர்ந்தது தாழமுக்கம்; மழை வீழ்ச்சி குறையும்

கொழும்பு,மார்ச்7

இலங்கைக்குத் தென்கிழக்கே வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருந்த தாழமுக்கம், நாட்டிலிருந்து அப்பால் விலகிச் செல்வதால் நீடித்து வந்த காலநிலை மாற்றம் படிப்படியாக வழமைக்குத் திரும்பும் என்று வானிலை அவதான நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

எனினும் கரையோரப் பிரதேசங்களான மேற்கு, தெற்கு, கிழக்கு, தென்கிழக்குக் கரையோரங்களில் மழை பெய்யக் கூடும் என்று வானிலை அவதான நிலையத்தின் கடமை நேர அதிகாரி கூறினார். மழை பெய்யக்கூடியதாகக் கருதப்படும் கரையோரங்களில் அவ்வப்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்பதால் கடற்றொழிலாளர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று வானிலை அவதான நிலையம் கேட்டுக் கொண்டுள்ளது. இதேவேளை தொடரும் வடக்கு ,கிழக்கு பருவப் பெயர்ச்சி காரணமாக, நாட்டின் எந்தவொரு பகுதியிலும் நண்பகல் அல்லது மாலை வேளைகளில் இடைக்கிடை மழை பெய்யக்கூடும். அதன்போது சற்று வேகமாகக் காற்று வீசுவதுடன் மின்னல் தாக்கங்கள் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ச)

# இலங்கைக்கு எதிரான பிரேரணை உத்தியோகபூர்வ அறிவிப்பில்லை

## இதுவரை எதுவும் தெரியாது என்கிறார் மஹிந்த சமரசிங்க



கொழும்பு,மார்ச்7

இலங்கைக்கு எதிரான பிரேரணை தொடர்பில் இதுவரை உத்தியோகபூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் இலங்கைக்கு எதிராக பிரேரணையை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளன.

எனினும், இந்தப் பிரேரணையில் என்ன விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறித்து அறிவிக்கப்படவில்லை.

பிரேரணையில் உள்ளடக்கத்தை அறிந்து ஆராய்ந்த பின்னரே எமது நிலைப்பாட்டை வெளியிட முடியும்.

நாட்டின் நிலைமைகள் குறித்து சர்வதேச சமூகத்துக்குத் தெளிவுபடுத்தி வருகின்றோம். மனித உரிமைகள் சபை மாநாட்டில் யார் பங்கேற்பது என்பது தொடர்பில் எனக்குத் தெரியாது.

எனினும், மாநாட்டில் இறுதி வாரத்தில் நான் பங்கேற்கப் போவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் மனித உரிமை விவகார அமைச்சு எனக்கு இல்லாமல் செய்யப்பட்டது. அதனால் நான் பெருந்தோட்டத்துறை அமைச்சராகவே கடமையாற்றுகின்றேன்.

மனித உரிமை விவகார அமைச்சு என்னிடம் இல்லாமல் செய்யப்பட்டமையாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனினும் ஜனாதிபதியின் மனித உரிமை விவகார விசேட பிரதிநிதியாக என்னை நியமித்துள்ளபோதிலும், மனித உரிமை தொடர்பான பொறுப்புக்கள் இதுவரையில் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படவில்லை.

எனவே மனித உரிமைகள் சபை அமர்வுகளில் கலந்து கொள்வதா ? இல்லையா என்பதனை நான் தீர்மானிக்க முடியாது.

மேலிடத்து உத்தரவின் அடிப்படையிலேயே செயற்பட வேண்டியுள்ளது.

இந்தியாவுடனான ராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் பொறுப்பு வெளிவிவகார அமைச்சுக்கே உள்ளது.-என்றார். (ச)

# அடுத்த பிரதமருக்கே உயிராபத்தெனின் சாதாரண மக்களின் நிலைமை என்ன?

## ஐ.தே.க வின் எம்.பி கேள்வி

கொழும்பு,மார்ச்7

அடுத்த பிரதமராக வருவதற்கு எதிர்பார்க்கும் அரசின் முக்கியஸ்தருக்கே உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றால் சாதாரண மக்களின் நிலைஎன்ன?

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி.பெரேரா கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசுக்கு எதிராக மற்றும் அரசின் கொள்கைகளுக்கு எதிராகச் செயற்படும் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் ஆகியோருக்கு மாத்திரமே கொலை மிரட்டல் விடுக்கப்படுகின்றது என்று நாம் நினைத்தோம். ஆனால், அடுத்த பிரதமராக வருவதற்கு எதிர்பார்த்திருக்கும் அரசின் முக்கியஸ்தர் ஒருவருக்கும் உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

இன்று புலிகள் இல்லை. அவர்களை முற்றாக அழித்து விட்டோம் என்கின்றீர்கள். அப்படியென்றால் யாரிடமிருந்து அவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது ?

ஐக்கிய தேசியக் கட்சி இவரைக்கொல்லாது. ஜே.வி.பிக்கும் அதற்கான சக்தி தற்போது இல்லை. எனவே, இதுதொடர்பில் நீதி அமைச்சு எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன ?

குற்றம் இழைத்த ஒருவர் நாடு திரும்பியுள்ளார். அவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்தே கைது செய்திருக்கவேண்டும்.

ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. சட்டம் அனைவருக்கும் சமம் என்ற போதிலும் அது அரசியல்வாதிகள் விடயத்தில் வேறுவிதமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

குற்றச்செயல் தொடர்பில் கைதுசெய்யப்படும் அரசியல்வாதி சிறையில் அடைக்கப்படுவதில்லை. அவர் சொகுசான தனியார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.-என்றார். (ச-சி)


# மரண அறிவித்தல்



## திருமதி இராசரட்ணம் யோகேஸ்வரி

புங்குடுதீவு, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பாண்டியன் தாழ்வு, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் யோகேஸ்வரி (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா (கிளாக்கர்) - சின்னம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசரட்ணத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், ராமேஸ்வரன், சச்சிதானந்தம், சாம்பசிவம், கேதாரகௌரி மற்றும் தனபாலதேவி (ஹொலண்ட்), சாரதாதேவி, சுகந்தமலர் (பிரான்ஸ்), சந்திரவதனா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திராவதி, கணேசராசா (லண்டன்), காலஞ்சென்ற இரத்தினலீலா, கமலசோதி, வரதராஜா (Luxetioils), ஜோக ராஜா (ஜேர்மனி), ஜீவராசா (பிரான்ஸ்), இந்திராதேவி, கலாதேவி (கனடா), மாலினிதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற வரதராஜா (இளைப்பாறிய சுங்கத்திணைக்கள அதிகாரி), சாரதா (லண்டன்), நல்லூர் நடராஜா (பொறியியலாளர் - லண்டன்), சிவநாதன் (evergreen), நவராஜினி, றீடாவேஜினி (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), வரதராஜா (இளைப்பாறிய நிறைவேற்று அதிகாரி - இலங்கை வங்கி), சோதிலிங்கம் (கனடா), நாதன் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் ஒரு மணியளவில் துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


17/2, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
பாண்டியந்தாழ்வு, சுண்டுக்குளி. 077 3940 997

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(34105) (45.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
1963.04.09

உதிர்வு
2012.02.17

## அமரர் கந்தையா ஜெயவீரசிங்கம் (பொறியியலாளர்)

எங்கள் ஆருயிரே!
விதி செய்த சதியோ உயிரே
விதி எல்லாம் நீயே உயிரே
மதி தன்னை இழந்தோம் உயிரே
கதி யிழந்து வாழ உயிரே
சதி வந்த தேனோ உயிரே
உதி மதியாய் விளங்கு முயிரே
திதி யாவும் வணங்குவோ முயிரே

(2616)(2.8.7)

அன்பு மனைவி,
தாய், சகோதரர்கள்

49, வில்லந்தெரு, கொழும்புத்துறை மேற்கு,
யாழ்ப்பாணம்.

### சடலங்களை பொறுப்பேற்குமாறு கோரிக்கை

## "கடவுளின் அருள் என்னும் செல்வத்தின் மறை பொருளே சிலுவைதான்

சீடன் அல்லது மாணவன் குருவின் கட்டளைகள் வார்த்தைகளை மதித்து நடக்கும் பொழுது அவன் குருவைப்போல திறமையாளனாக சிறப்புப் பெறுகின்றான். மதியாதவர்கள் கற்பதுமில்லை திறமைசாலிகளாவதும் இல்லை. அவர்களின் செயற்பாடுகள் அழிவை நோக்கிய தாகவே இருக்கும். எமது வாழ்வு ஒளியுள்ளதாக அமைகின்ற போது தந்தையாம் இறைவனை மக்கள் போற்றிப் புகழ்வார்கள். எனவேதான் இயேசு மக்களுக்கு கூறினார். ''திருச்சட்டத்தையோ, இறைவாக்குகளையோ அழிக்க அல்ல..... அவற்றை நிறைவேற்றவே இவ்வுலகிற்கு வந்தேன்'' (மத் 5:17) தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதே எனது பணியென்று வேறு ஓர் இடத்தில் இயேசு கூறுகின்றார்.

''கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்ற வள்ளுவரின் வாக்கைப் போல கற்று, கற்றதை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுவது சிறப்பாகும். கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்ட நாம், அப்பணியின் மூலம் சமுதாயத்துக்கு சேவை செய்வதே மேலான தாகும். நாம் வாங்கும் கூலி, அல்லது ஊதியத்துக்கு துரோகமிழைக்கக் கூடாது. கற்றானை பெற்றானைக் கனம் பண்ணும் உலகம், கல்லானை, இல் லானை மிகவே ஒதுக்கி விடும்.




ஒதுக்கப்பட்டவர்களுக்கு உரிமை வாழ்வு வழங்குவதும், புறக்கணிக்கப்பட்டவரை முன்னிலைக்கு அழைப்பதும் இயேசுவின் பணியாக இருந்தது. கட்டுவோர் விலக்கிய கல்லே மூலைக்கல்லானது. கடவுளின் செயல் இதுவே. உலகம் பழிப்பதையே இறைவன் தேர்ந்து கொண்டார். துன்பத்தின் வழியாகவே இயேசு மீட்பை உலகிற்கு தந்தார். எம் பாவங்கள் இயேசுவின் தோள்களில் சிலுவையாக அழுத்தியது. எமக்காகவே அவர் காயப்பட்டார். நொறுக்கப்பட்டார். சிலுவையில் அறையப்பட்டார் மரணித்தார். உயிர்த்தார். மண்ணில் வீழ்ந்தழியும் விதையாலே மலர்வதே புதிய பயிர். என்னில் இருக்கின்ற நான் அழிந்தாலே ஏற்புடைய வாழ்வு மலரும்.

இறைவார்த்தை (விவிலியம்) ஆற்றலுள்ளது. எதை ஆக்கவும், அழிக்கவும்வல்லது. திருச்சபையின் வழிகாட்டலிலே இறை வார்த்தையைப் போதிக்கவும், விளக்கம் கூறவும் உரிமைப்பாடு உண்டு. எதனையும்கூட்டியோ, குறைத்தோ இறை வார்த்தையை மதிப்பிட முடியாது. அதற்கான சன்மானத்தை நாம் பெற்றே ஆகவேண்டும். வாழ்வு தரும்வார்த்தை, உயிரளிக்கும் வார்த்தை நானே என்று இயேசுதாமே கூறியுள்ளபடி இறைவார்த்தையின் வல்லமையை, புனிதத் தன்மையை உணர்ந்தவர்களாக நல்வாழ்வுப் பாதை வழியிலே எம் பயணத்தைத் தொடர்ந்திட தபசின் காலத்தைப் பயனுள்ள தாக்குவோம்.

**அன்ரனி பீற்றர், ஆசிரிய ஆலோசகர் (RC)**

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு



## பிரம்மஸ்ரீ
# ச. சதாசிவக்குருக்கள்

கடந்த (24.02.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது தந்தையார் ச.சதாசிவக்குருக்கள் (திருநெல்வேலி சிவன் கோயில் பிரதம குருக்கள்) அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையும் சமாராதனையும் (மதிய போசனம்) நாளை (08.03.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கல்வியங்காட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் அனைத்து அன்பு நெஞ்சங்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கைநாயகி
அம்மன் கோயிலடி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

(34207)(10.6.7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தொடரும் குளவித் தாக்குதலால் 40 மாணவர்கள் வைத்தியசாலையில்



நுவரெலியா,மார்ச்7

புளத்கொஹுபிட்டிய, வேகெல்ல கனிஷ்ட வித்தியாலயத்தின் 40 மாணவர்கள் குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குளவித் தாக்குதலுக்கு உள்ளான மாணவர்கள் கரனெல்ல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறி னர்.

பாடசாலைக்கு வருகைத் தந்த போதே மாணவர்கள் குளவித்தாக்குதலுக்கு இலக்கானதாக பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலை அதிபரும் குளவித் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# 'தேசத்துக்கு மகுடம்' வேலைத்திட்டம் தமிழ், முஸ்லிம் பகுதிகள் புறக்கணிப்பு

## தம்பலகாமம் பிரதேச சபைத் தலைவர் குற்றச்சாட்டு

திருகோணமலை,மார்ச்7

'தேசத்துக்கு மகுடம்' வேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் திருகோணமலை, தம்பலகாமம் பிரதேசத்திலுள்ள தமிழ், முஸ்லிம் பகுதிகள் உள்வாங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு தம்பலகமம் பிரதேச சபைத் தலைவர் எஸ்.எம்.சுபியான் குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து அவர் வெளிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தம்பலகாமம் பிரதேச சபைப் பகுதி மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் இடமாகும். கடந்த காலம் நடைபெற்ற போரால் மூன்று சமூகங்களும் இழப்புகளைச் சந்தித்ததோடு, முழுப் பிரதேசமும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுடையவையாகக் காணப்படுகின்றன.

மஹிந்த சிந்தனை வேலைத் திட்டத்தினூடாக நாட்டு மக்கள் அனைவருக்கும் இன, மத, கட்சி பேதங்களில்லாமல் சேவைகள் இடம்பெற்றுவருகின்றன.

தம்பலகாமம் பிரதேசத்தில் மாத்திரம் இனங்களுக்கிடையே துவேசத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் பாகுபாடான முறையில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

2012 ஆம் ஆண்டில் தம்பலகாமம் பிரதேசத்தின் வீதி அபிவிருத்திப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட 6,090,000 ரூபாவும், குளங்கள் புனரமைக்கும் வேலைத்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியும் சிங்களக் கிராமங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டன.

2013 ஆம் ஆண்டு தேசத்துக்கு மகுடம் வேலைத்திட்டத்தின் கீழ் தம்பலகாமம் பிரதேசத்தின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 123 மில்லியன் ரூபாவில் 80 மில்லியன் ரூபா சிங்களப் பிரதேசத்துக்கும், 25 மில்லியன் ரூபா முஸ்லிம் பிரதேசத்துக்கும் 18 மில்லியன் ரூபா தமிழ் பிரதேசத்துக்கும் என பங்கீடு செய்யப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட வேலைத் திட்டங்களின் ஒப்பந்தங்களை அந்தக் கிராமங்களில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கு வழங்குமாறு விடுக்



கப்பட்ட வேண்டுகோளும் புறக்கணிக்கப்பட்டு, வெவ்வேறு கிராம சேவையாளர் பிரிவுகளில் பதிவு செய்யப்பட்ட பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த சங்கங்களுக்கே வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு இன ரீதியான துவேசத்தை வலுப்படுத்தும் நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் முகமாக, பிரதேச சபையின் உறுப்பினர்கள் மற்றும் சங்கங்களின் தலைவர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் ஒன்றுகூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளோம்.

தேசத்துக்கு மகுடம் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான அடிக்கல் நடும் நிகழ்வை பகிஷ்கரித்தல், இந்தப் பிரதேசத்துக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளை இன விகிதாசார அடிப்படையில் பங்கீடு செய்ய வலியுறுத்தல், அபிவிருத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் ஒப்பந்தங்களை குறிப்பிட்ட பகுதியிலுள்ள பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கே வழங்க நடவடிக்கை எடுத்தல்,பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு முஸ்லிம், தமிழ் பிரதேசங்களிலுள்ள பதிவு செய்யப்பட்ட சங்கங்களுக்கும் அழைப்பு விடுத்தல் ஆகிய தீர்மானங்களே நிறைவேற்றப்பட்டுள்ளன.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-40)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதி

**கல்வியியல் முதுமாணி - 2013/14(அணி X)**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

1. அனுமதிக்குரிய தகைமைகள்:

* "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவும்"

அத்துடன்

* ஒரு பாடசாலையில் அல்லது யாதேனும் கல்வி நிறுவனத்தில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு கற்பித்தல் அனுபவம் அல்லது மேற்படி கற்கைநெறிக்குப் பொருத்தமான கல்விசார் பணிகளில் குறைந்த பட்சம் ஐந்து ஆண்டு அனுபவம்.

2. தெரிவு முறைமை:

எழுத்துத் தேர்வும், நேர்முகத் தேர்வும்
(எழுத்துத் தேர்வு - 02 மணித்தியாலம் இது கல்விசார் பொதுத் தகைமையை பரீட்சிப்பதாக அமையும்).

| | |
|---|---|
| கற்கைக் காலம் | : ஒருவருடம் |
| மொழி மூலம் | : தமிழ் |
| கற்கைநெறிக் கட்டணம் | : 75000/= |
| விண்ணப்பமுடிவு திகதி | : 11.04.2013 |

***விண்ணப்ப படிவக் கட்டணம்: 1000/=***

விண்ணப்பப் படிவம் பெறும் முறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் **உயர் பட்டப்படிப்புகள் பீட** அலுவலகத்தில் பணம் வைப்பிலிடும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக் கிளையில் விண்ணப்பப்படிவக் கட்டணத்தை (1000/=) செலுத்தி உயர் பட்டப்படிப்புகள் பீட அலுவலகத்தில் பற்றுச்சீட்டைச் சமர்ப்பிப்பதன் மூலம் விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயருக்கு விண்ணப்பப் படிவத்திற்குரிய பெறுமதியான காசுக்கட்டளையுடன் 15/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23 × 10 செ.மீ அளவுள்ள கடித உறையையும் இணைத்து **உதவிப்பதிவாளர், உயர் பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கல்வியியல் முதுமாணி 2013/14 விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் 11.04.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உதவிப் பதிவாளர், உயர்பட்டப் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

உரிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்காத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்.**

(சி/6927)(2.6.7.45)


# மேல்கொத்மலை ஓயா ஆற்று நீரை தேவைக்குப் பயன்படுத்த முடியாது

## தலவாக்கலை பிரதேச மக்கள் விசனம்

நுவரெலியா,மார்ச்7

மேல்கொத்மலை நீர்மின் அணைத் திட்டத்தால் மேல்கொதமலை ஓயா ஆற்றின் நீரைத் தமது அன்றாட தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தலவாக்கலைப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேல்கொத்மலை நீரணையில் நீரைத் தேக்குவதற்காக மேல்கொத்மலை ஓயா ஆற்றின் இருமருங்கிலும் கொங்கிறீட் மூலம் தடுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அதன்காரணமாக தலவாக்கலை பிரதேச மக்கள் மேல்கொத்மலை ஓயா ஆற்று நீரைத் தமது அன்றாட தேவைகளுக்குப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தமது தேவைகளுக்காக குழாய் நீரைப் பயன்படுத்த வேண்டியுள்ளதால், குழாய் நீர் பாவனைக்கு மாதாந்தம் பெருந்தொகை கட்டணத்தைச் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேல்கொத்மலை ஓயா ஆற்று நீரைப் பயன்படுத்தும் வகையில் பாதுகாப்புடன் கூடிய இடங்கள் ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளபோதிலும், இவ்வாறான பாதுகாப்பான இடங்கள் இதுவரை ஏற்படுத்தப்படவில்லை என்று தலவாக்கலைப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர். (ச)

# இரத்தினக்கல் அகழும் இடம் சுற்றி வளைப்பு

இரத்தினபுரி,மார்ச்7

இரத்தினபுரி, திரிவானாகெட்டிய பிரதேசத்தில் சட்டவிரோதமாக இரத்தினக்கல் அகழும் இடமொன்றை, பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர், உடவலவ இராணுவ அதிகாரிகள் மற்றும் இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபை அதிகாரிகள் உள்ளிட்ட குழுவினருடன் இணைந்து இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். குறித்த இடத்தில் இருந்து மாணிக்கக்கல் அகழ்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன. எனினும் இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பொருள்கள் மேலதிக விசாரணைகளுக்காக இரத்தினபுரி இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (ச)


## தேவை

எமது நிறுவனத்துக்குச் சொந்தமான ராச பாதை கோப்பாயில் உள்ள தோட்டக் காணிக்கு முள்ளுக்கம்பி அடிப்பதற்கு கொந் தறத்துக்காரர் தேவை. விபரங்களுக்கு 545, Sri Sangaraiah Mawatha, கொழும்பு 10 அல்லது [illegible] உடன் தொடர்பு கொள்ளவும்.

(சி/6837)(2.6)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தின் 28 ஆவது பட்டமளிப்பு விழாவில் B.A(Hons) (Sociolog) பட்டம் பெற்ற

செல்வி சுஜீத்தா ஜெகநாதன்

அவர்களை மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று உயர் பதவிகள் வகித்து வாழ்க வளமுடன் எனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பப்பா, சித்தப்பாமார், சித்திமார், பிள்ளைகள்.



(27874)(2.6.7)



## கண்ணீர் அஞ்சலி

யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபர் திருமதி வ.செல்லம்மா அவர்களின் அன்புக் கணவர் **வ.வடிவேல்** அவர்களின் திடீர் மறைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வாலாம்பிகை அம்மன் அருளை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.**
யா/கைதடி சேதுகாவலர், வித்தியாலயம்.
கைதடி மத்தி, கைதடி.

(34315)(2.6.7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





காணாமல் போனவர்களின் உறவுகள் வவுனியா செயலகத்துக்கு முன்பாக ஏ–9 வீதியை வழிமறித்து நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட உறவினர் காணாமல் போனவர்களின் புகைப்படங்களை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதைப் படங்களில் காணலாம்.











பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# 60 வயது கடந்த விவசாயிகளுக்கு ஓய்வூதியக் கொடுப்பனவு இல்லை

## அநியாயம் என்கிறது முஸ்லிம் மக்கள் கட்சி

மட்டக்களப்பு,மார்ச்7

60 வயதைக் கடந்த விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு கடந்த ஒரு வருடமாக வழங்கப்படாமல் இழுத்தடிப்பது விவசாயிகளுக்குச்செய்யும் அநியாயமாகும்.

இவ்வாறு முஸ்லிம் மக்கள் கட்சி தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

விவசாய ஓய்வூதியத் திட்டத்துக்கமைய 20, 22 வருடங்களாக ஒழுங்காக தவணைப் பணம் கட்டி வந்த விவசாயிகள் 60 வயதை கடந்த பின் தமக்கு ஓய்வூதியம் கிடைக்கும் என நம்பினர். ஆனால் கடந்த ஒரு வருடமாக ஓய்வூதியம் வழங்கப் படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகளுக்கான ஓய்வூதியப் பணமாக அவர்களின் வயதுக்கேற்ப ஆயிரம் ரூபா முதல் ஆயிரத்து நானூறு ரூபா வரை தபால் நிலையங்கள் மூலமாக ஒவ்வொரு மாதமும் 25ஆம் திகதிகளில் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த 2012 ஜனவரி முதல் இந்தப் பணம் வழங்கப்படவில்லை.

இந்த அநியாயம் பற்றி விவசாய அமைச்சர் உட்பட நாட்டின் ஜனாதிபதிக்கும் அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக அதிக விவசாயிகள் வாழும் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேச விவசாயிகள் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

சம்மாந்துறை பிரதேச சபை என்பது ஆளும் சுதந்திரக்கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது. அதன் தலைவர் ஜனாதிபதியின் இணைப்பாளராகவும் இருக்கின்றார்.

அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு சம்மாந்துறையில் அமைச்சர் ஒருவரும் இருக்கின்றார். மு.கா வை சேர்ந்தவரே கிழக்கு மாகாண விவசாய அமைச்சராகவும் இருக்கின்றார். அதே போல் அமைச்சர் அதாவுல்லாவின் கட்சிக்கு சம்மாந்துறையை சேர்ந்த உறுப்பினர் கிழக்கு மாகாண சபை உறுப்பினராக உள்ளனர்.

இவ்வாறு அரசுக்கு முட்டுக்கொடுக்கும் இத்தனை பரிவாரங்கள் இருந்தும் கிழக்கு மாகாண ஏழை விவசாயிகளுக்கு ஓய்வூதிய பணத்தை வழங்க நடவடிக்கை எடுக்காமல் அதனையும் அரசு சுருட்டி வைத்துக் கொண்டிருப்பது அநியாயமாகும் - என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. (ச)

## பிண்ட- தானம் என்றால் என்ன?

சாதாரணமாக எண்ணிக் கொள்வதுபோன்று பிண்டம் என்றால் அரிசிமாவினால் ஆன உருண்டை அல்ல. அது மனித உடம்பைச் சுட்டி நிற்கின்றது.

எமது உடல் பௌதிக, சிந்தனைத் துறைகள், இறைவனுக்குச் சேவை செய்யும் திறன்கள், அனைத்தையும், இப் பிரபஞ்சமாகப் பரிணமித்து நிற்கும் இறைவனுக்கு அர்ப்பணித்தல் என்பதுதான் உண்மையான பிண்டதானம்.

தெய்வீகம் மலரும் பொழுது



சாயி சிந்தனை

## மின் தடை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்7

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் மின்மார்க்கங்களின் புனரமைப்புப் பணிகளுக்காகவும் சில பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளைமறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரையும் மருதனார்மடம், இணுவில், கோண்டாவில், கொக்குவில், பூநாறிமரத்தடி, நாச்சிமார் கோயிலடி, தட்டார் தெரு, கோம்பையன் மணல் பிரதேசம், மந்திகைப் பிர தேசம், புலோலி, சாரையடி, ஓராம்கட்டை, தம்பசிட்டி, பருத்தித்துறைப் பிரதேசம், அல்வாய்ப் பிரதேசம், நெல்லி யடிப் பிரதேசம், கரவெட்டிப் பிரதேசம், கரணவாய்ப் பிரதேசம், குஞ்சர் கடைப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மல்லாகம், ஏழாலை, மயிலங்காடு, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப் பகுதி, மாவிட்டபுரம், கீரிமலை, தெல்லிப்பழை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (3)

## கண்ணீர்அஞ்சலி



புங்குடுதீவு பாணாவிடைச்சிவன் கோயில் பரிபாலன சபையின் முன்னாள் பொருளாளரும், ஓய்வுநிலை அதிபரும்,சிறந்த சமய, சமூக ஆர்வலருமான ஆசிரியமணி

**நல்லதம்பி இராசதுரை**

அவர்கள் 05.03.2013 இல் இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது சபையின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், இத்துயரில் நாமும் பங்கு கொண்டு அன்னாரின் ஆத்மா பாணாவிடைச் சிவனின் பாதங்களில் நித்திய இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர்,**
**பாணாவிடைச் சிவன்தேவஸ்தானம்**
**புங்குடுதீவு - 07**

## தென்மராட்சி வலய மட்ட மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி, மார்ச் 7

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

வலயப் பாடசாலைகளில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளதால் வலய மட்டப்போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகவும் பாடசாலை அணிகளுக்கிடையிலான குழு நிலைப் போட்டிகளும் முடிவுறும் நிலையில் உள்ளதால் அன்றைய தினம் பரிசளிப்பும் இடம்பெறுமெனவும் அவர் தெரிவித்தார். (ம-9)

## பனை வெல்லம் விற்பனைக்கு

தென்மராட்சி, மார்ச் 7

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் உற்பத்தி செய்யப்பட்ட பனை வெல்லம் விற்பனைக்கு விடப்பட்டுள்ளது.

ஒரு கிலோ பனை வெல்லம் 450 ரூபாவாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தேவைப்படுவோர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சங்கத் [illegible] மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பனை வெல்லம் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீச்சலில் சாதனை நிகழ்த்தவுள்ள போலியாவால் பாதித்த தமிழர்



மும்பை, மார்ச்.7

போலியோவால் பாதிக்கப்பட்டவர் அரபிக் கடலில் 42 கிலோ மீற்றர் தூரம் நீந்தி சாதனை செய்யவுள்ளார்.


மும்பையின் ஒர்லி குடிசைப் பகுதியில் வசித்து வரும் எம். பிரகாஷ் (வயது 35) என்ற தமிழர் நாளை வெள்ளிக்கிழமை அரபிக் கடலில் 42 கிலோ மீற்றர் தூரத்தை நீந்திக் கடந்து உலக சாதனை நிகழ்த்த உள்ளார்.

கேட் வே ஒப் இந்தியாவில் இருந்து ராய்கட் மாவட்டம் ரேவாஸ் வரையிலான 21 கிலோ மீற்றர் தூரம் நீந்தி பின்னர் அங்கிருந்து திரும்புவார். 42 கிலோ மீற்றர் தூரத்தை 15 மணி நேரத்தில் கடக்க அவர் திட்டமிட்டுள்ளார். பிரகாஷ் போலியோ நோயால் பாதிக்கப்பட்டு இரு கால்களும் பாதிக்கப்பட்டவர்.

எனினும் தனது அயராத முயற்சியால் பல சாதனைகளைச் செய்துள்ளார். நீச்சல் உள்ளிட்ட பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு 81 தங்கம், 29 வெள்ளி என்பவற்றைப் பெற்றுள்ளார்.

தற்போது, மும்பை-ரேவாஸ்-மும்பை ஸ்விம்மதான் போட்டியில் கலந்து கொண்டு இந்த உலக சாதனையை நிகழ்த்தவுள்ளார். ஒர்லி, மோதிலால் நகரில் உள்ள மதராஸ்வாடியில் பிறந்த பிரகாஷ், அங்கேயே வசித்து வருகிறார். அந்தப் பகுதியில் அரபிக் கடலில் கடக்கும் ஒரு சாக்கடை நீரில்தான் 20 ஆண்டுகளுக்கு முன்பு முதன் முதலில் நீச்சலை அவர் கற்றுக் கொண்டார். (வ)

# மேகாலயா, நாகாலாந்து மாநில முதல்வர்கள் நேற்று பதவியேற்பு



கொஹிமா, மார்ச்.7

மேகாலயா, நாகாலாந்து ஆகிய மாநிலங்களில் அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற முதல்வர்கள் நேற்று முன்தினம் பதவியேற்றனர்.

அண்மையில் நடைபெற்ற தேர்தலில் ஆளுங்கட்சியாக உள்ள காங்கிரஸ் மற்றும் நாகாலாந்து மக்கள் முன்னணியே மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றன. அதையடுத்து புதிய அமைச்சரவை பதவி ஏற்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. மேகாலயா முதல்வராக முகுல் சங்மாவும் நாகாலாந்து முதல்வராக தொடர்ந்து மூன்றாவது முறையாக நெபியூ ரியோவும் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

மேகாலயாவில், மொத்தமுள்ள, 60 தொகுதிகளில், 29 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றது பெரும்பான்மைக்கு இரண்டு இடங்கள் மட்டுமே தேவை என்ற நிலை இருந்தபோதிலும், எட்டு சுயேச்சைகள் நிபந்தனையற்ற ஆதரவு அளிப்பதாக உறுதியளித்தனர். அத்துடன் இரண்டு உறுப்பினர்களைக் கொண்ட தேசியவாத காங்கிரஸ் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது. அதையடுத்து புதிய அமைச்சரவை பதவி ஏற்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (வ)

## சீனாவின் இராணுவத்துக்கு கூடுதல் நிதி

பீஜிங், மார்ச் 7

இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை அதிகரித்துள்ளது சீனா.

இராணுவச் செலவுகளுக்காக 11 ஆயிரத்து 570 கோடி அமெரிக்க டொலர் இராணுவத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று சீன ஜனாதிபதி வென் ஜியாபோ அறிவித்துள்ளார்.

இந்தத் தொகை கடந்த வருடத்தை விட 3 மடங்கு அதிகமாகும்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

சீன இராணுவத்தை நவீனப்படுத்தி, மிகவும் பலமுள்ளதாக ஆக்க வேண்டிய கட்டாயம் சீனாவுக்கு ஏற்பட்டுள்ளது. அதையடுத்தே அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது- என்று தெரிவித்தார். (ற)

# ராக்காஹின் நகரம் சிரிய புரட்சியாளர் வசம்



டமஸ்கஸ், மார்ச் 7

சிரியாவின் முக்கிய நகரான ராக்காஹின் வடபகுதி உட்பட பெரும்பாலான பகுதிகளைத் கைப்பற்றியுள்ளதாக சிரியப் புரட்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

ரக்காஹ் நகரைக் கைப்பற்றிய புரட்சியாளர்கள், அங்கிருந்த சிரிய ஜனாதிபதி அசாத்தின் மிகப் பெரிய படத்தை உடைத்ததுடன், அவரின் தந்தையின் சிலையையும் உடைத்து சேதமாக்கியுள்ளனர்.

நகரைக் கைப்பற்றிய புரட்சியாளர்கள் அங்கு சிறை வைக்கப்பட்டிருந்த மாகாண ஆளுநர் மற்றும் முக்கிய கைதிகளை விடுவித்துள்ளனர்.

முக்கிய நகரான ராக்காஹின்னைப் புரட்சியாளர்கள் கைப்பற்றியமை அரச படைகளுக்குப் பெரும் பின்னடைவாக அமையும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். (ற)

## சாவேஸ் மறைவுக்கு ஒபாமா இரங்கல்

வெனிசுலா ஜனாதிபதி சாவேஸின் மறைவு அந்த நாட்டு மக்களுக்குப் பெரும் இழப்பாகும் என்று தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமா.

சாவேஸின் மறைவு குறித்து வெளியிட்ட அறிக்கையிலேயே ஒபாமா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வெனிசுவேலா மக்களுடன் நாமும் சோகத்தைப் பகிர்த்து கொள்கின்றோம். வெனிசுலாவுடன் அமெரிக்காவின் ஆக்க பூர்வமான உறவு மேம்படும் என்று மேலும் அவர் தெரிவித் தார். (ற)

# பாக். பிரதமர் அஸ்ரப் இந்தியா செல்கின்றார்



இஸ்லாமாபாத், மார்ச் 7

பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஸ்ரப் எதிர்வரும் சனிக்கிழமை இந்தியாவுக்கு பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள மதத் தலமொன்றுக்கு தனிப்பட்ட பயணம் ஒன்றை அவர் மேற்கொள்ளவுள்ளார் என்று பாகிஸ்தான் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தான் பிரதமரின் இந்தப் பயணம் முழுமையாக ஆன்மீகம் சார்ந்ததாக அமையும் என்று குறிப்பிட்டுள்ள அதிகாரிகள் பயணத்தின்போது எந்தவொரு அரசியல் தலைவரையும் அவர் சந்திக்க மாட்டார் என்றும் தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி, இவ்வாறான பயணம் ஒன்றை மேற்கொண்டு கடந்த ஆண்டு இந்தியா சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)





எம் அன்புத் தெய்வமே
எமது குடும்ப விளக்கே
ஐயிரண்டு திங்கள் எமை சுமந்து காத்த அம்மாவே
ஓராண்டு ஓடி மறைந்தாலும்
உங்களை மறவாமல் ஏங்கித் தவிக்கின்றோம்
நீங்கள் காட்டிய நல்வாழ்வை நினைத்து
கண்ணீர் வடிக்கின்றோம்
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
என்றும் உங்களை நாம் மறவோம்
கண்ணன் காலடியில் உங்கள் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
*நீங்காத நினைவுகளுடனும், ஈரவிழிகளுடனும்*
*உங்களை நினைவில் சுமந்திருக்கின்றோம்.*
பொன்னாலை, சுழிபுரம்.
குடும்பத்தினர்.
(34251)(உ.6.7)


# கால்நடைகளை கட்டி வளர்க்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 7

தற்போது பெரும்போக நெற்செய்கையின் அறுவடைப் பணிகள் முடிவுறாத நிலையில் மக்கள் தமது வளர்ப்புக் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு விவசாய சம்மேளனத்தினர் தெரிவித்துள்ளனர். குறிப்பாக வலி. கிழக்குப் பிரதேசத்தில் நெல் வயல்களை அண்டியுள்ள மக்கள் தமது வளர்ப்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட்டுள்ளனர்.

இந்தக் கால்நடைகள் வயல்களுக்குச் சென்று நெற்கதிர்களை மேய்ந்து செல்கின்றன. கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி மற்றும் அரியாலை பிரதேச வயல்களில் இவ்வாறு கால்நடைகள் புகுந்து நெற்கதிர்களை சேதப்படுத்தியும் மேய்ந்தும் செல்கின்றன என்று விவசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் அறுவடை முடியும்வரை கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-17)

## மெய்வன்மைப் போட்டி பிற்போடப்பட்டது

தென்மராட்சி,மார்ச் 7

மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாலயத்தில் இன்று நடைபெறவிருந்த இல்லமெய்வன்மைப் போட்டிகள் காலநிலை சீரற்ற காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக [illegible] (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளைக் காணாத புளியங்குளம் இராமனூர் மக்கள்

வவுனியா,மார்ச் 7

மீளக் குடியமர்ந்து மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் அடிப்படை வசதிகள் எவையும் செய்து கொடுக்கப் படாமையால் பெரும் அசெளகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் புளியங்குளம் இராமனூர் மக்கள்.


இறுதிக்கட்ட போர் அனர்த்தங்களால் இடம் பெயர்ந்து நலன்புரி நிலையத்தில் இருந்து, முதல் முதலில் மீள்குடியமர்வு செய்யப்பட்ட தமக்கு இதுவரை எவ்வித அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை என இவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் சுமார் 64 குடும்பங்கள் இந்தப் பகுதியில் மீள்குடியமர்த்தப்பட்டன. ஆனால் இதுவரை போதிய குடிதண்ணீர் வசதிகளோ, மின்சார வசதிகளோ செய்து கொடுக்கப்படாத நிலையில் வீடமைப்புத் திட்டத்திலும் 15 குடும்பங்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டுள்ளதாக இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதே வேளை தாம் குடியிருக்கும் காணிகளுக்கு நீண்ட காலமாக அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படாததால் அதனைப் பெற்றுத் தருமாறு தாம் அரசாங்க அதிகாரிகளைக் கோரிய போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பிரதேசம் காடுகளால் சூழப்பட்டுள்ளதால் இரவு நேரங்களில் காட்டு விலங்குகளின் அச்சம் காணப்படுவதால் நடமாட முடியாத சூழ்நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

வடக்கின் வசந்தத்தின் மூலமாக மின்சாரம் இந்தப் பகுதியூடாகச் செல்கின்ற போதும் அதனை அனுபவிக்க முடியாத சூழ்நிலையில் அந்தப் பகுதி மக்கள் உள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க- 400)



கதிர்காமக் கந்தன் ஆலயத்துக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சென்ற ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ பூசை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

# நீதிமன்ற பெண் ஊழியரிடம் சங்கிலி அபகரிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 7

மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் யாழ்.சிறுவர் நீதிமன்ற பெண் ஊழியரிடமிருந்து சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுமார் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியே இவ்வாறு அபகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் யாழ். கொழும்புத்துறை ஏ.வி. வீதியில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

நீதிமன்றில் பணி முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பெண்ணை இடைவழியில் மறித்து அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றுவிட்டனர்.மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவரே சங்கிலியை அபகரித்துள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4-5)

# வான் பாய்ந்தன வவுனியா குளங்கள்

வவுனியாவில் கடந்த இரண்டு நாள்களாகப் பெய்த மழை காரணமாக பல குளங்களில் வான் பாய்ந்துள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வவுனியாக்குளம், தாணிக்குளம், சாம்பல் தோட்டக் குளம், கல்மடுக் குளம், மருதமடுக் குளம், ஆர்த்தி மோட்டைக் குளம், பூவரசங்குளம் ஆகிய குளங்களே வான் பாய்ந்துள்ளன.

மேலும் பல குளங்களின் நீர் மட்டம் உயர்வடைந்து காணப்படுகிறது.

கடந்த 4 ஆம் திகதி 2.5 மி.மீற்றர் மழை வீழ்ச்சி வவுனியாவில் பதிவாகியுள்ளது. தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் பெருமளவான குடும்பங்கள் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்படலாம் என்பதால் வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் முன்னெச்சரிக்கைக் குழுவினை தயார் நிலையில் உள்ளனர். மக்கள் இடம்பெயரும் பட்சத்தில் அவர்களைத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளதாக வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ சேவை உதவிப் பணிப்பாளர் என். சூரியராஜ் தெரிவித்துள்ளார். (க-402)

# மண்கும்பான் கொள்ளைச் சம்பவ சந்தேகநபர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 7

மண்கும்பானில் இடம் பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நகை மற்றும் பணத்தைப் பறிகொடுத்தவர்கள் சந்தேக நபரை அடையாளம் காட்டியுள்ளனர்.

பொலிஸ் விசாரணையின் போது மோப்பநாய் கூட சந்தேகநபரை அடையாளம் காட்டியது. எனினும் பொலிஸார் விசாரணையை துரிதமாக முன்னெடுக்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அரசியல் தலையீடு காரணமாகவே பொலிஸார் உரிய விசாரணையை முன்னெடுக்காது உள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சந்தேக நபரைப் பிணையில் விடுவிக்கக்கோரி ஊர்காவற்றுறை நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்ட போது பொலிஸார் வழமை போன்று சாதாரணமாகவே எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நீதிமன்றத்துக்குச் சமுகமளித்து உரிய காரணங்களை முன்வைக்கவில்லை என்றும் கூறப்பட்டது.

கடந்த மாதம் 14 ஆம் திகதி இரவு வேலணை மண்கும்பானில் உள்ள வயோதிபர்களது வீட்டிலேயே கொள்ளை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் 8 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும், 10 ஆயிரத்து900 ரூபா பணமும், கடவுச்சீட்டும் கொள்ளையடிக்கப்பட்டன.

சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. நள்ளிரவு 12 மணியளவில் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கொள்ளை இடம்பெற்ற வீட்டுக்கு அருகில் வசிக்கும் சீவரத்தினம் திலக்ஷன் என்பவரையே பாதிக்கப்பட்ட குடும்பத்தவர் சந்தேகநபராகப் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார்.

அவரது வீட்டுக்குச் சென்ற பொலிஸார் சந்தேகநபரை வெளியே வருமாறு அழைத்த போது, தனக்குக் காய்ச்சல் என்று கூறிவிட்டு சந்தேகநபர் வெளியே வரவில்லை. பொலிஸார் அவரை உடனடியாக அழைத்து விசாரணை செய்யவில்லை.

மறுநாள் காலை பொலிஸார் சம்பவ இடத்துக்கு மோப்பநாய் சகிதம் சென்றனர். அதன்போது சந்தேகநபர் தனது வாயை மறைத்துக் கட்டிச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் துணி ஒன்றை மோப்பநாய் அடையாளம் காட்டியுள்ளது.

பின்னர் குறித்த சந்தேகநபரது வீட்டுக்குச் சென்ற நாய் சந்தேகநபரை அடையாளம் காட்டியது என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இவற்றைப் பொலிஸாரும் உறுதிப்படுத்தினர்.

சந்தேகநபர் அரசியல் கட்சி ஒன்றுடன் தொடர்புபட்டவர் என்றும் அதனால் அரசியல் தலையீடு காரணமாகவே பொலிஸார் வழக்கை துரிதமாக முன்னெடுக்கவில்லை என்றும் பாதிக்கப்பட்டவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனினும் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலைய பிரதம பொறுப்பதிகாரி வீரசிங்க இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

தாம் அது தொடர்பில் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஓர் இலட்சம் ரூபா பெறுமதியான தலா இரண்டு ஆள் பிணையிலும் 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் விடுவித்ததோடு வாராந்தம் ஞாயிறு மற்றும் புதன் கிழமைகளில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் கையொப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனை விதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# சுன்னாகம் பொதுச் சந்தையில் டிஜிற்றல் தராசு பாவனைக்கு

யாழ்ப்பாணம், மார்ச் 7

சுன்னாகம் பொதுச் சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்வோர் தற்போது டிஜிற்றல் நிறுத்தல், அளவைகளையே பயன்படுத்த வேண்டும். இந்த முறை நடைமுறைக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த டிஜிற்றல் நிறுத்தல், அளவை கருவிகளை பயன்படுத்துவதன் மூலம் நுகர்வோரிடம் இருந்து முறைப்பாடுகள் மிகவும் குறைந்திருப்பதாக வலி தெற்கு பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் தெரிவித்தார்.

அதனை விட வாழைக் குலை மொத்த விற்பனை நிலையத்திலும் வாழைக் குலைகள் தற்போது டிஜிற்றல் நிறுத்தல் கருவி மூலமும் நிறுக்கப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே இந்த வாழைக் குலைகள் மேடை தராசு மூலமே நிறுக்கப்பட்டு வந்தன.

வாழைக் குலைச் செய்கையாளரின் முறைப்பாடுகளை அடுத்தே தற்போது மேடைத் தராசு நிறுத்தப்பட்டு டிஜிற்றல் தராசு மூலம் அவை நிறுக்கப்பட்டு வருகின்றன. (ம-17)

# கைப்பை திருட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 7

கோயில் மண்டபத்தில் இருந்த பெண்ணின் பணம், கைத்தொலைபேசி என்பன கைப்பையுடன் திருட்டுப் போயுள்ளன.

சம்பவம் தொடர்பில் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நல்லூர் கந்த சுவாமி கோயிலுக்குள் சென்று வழிபட்ட பின்னர் முன்மண்டபத்தில் தனக்கருகில் கைப்பையை வைத்து விட்டு அப் பெண் இருந்துள்ளார்.

கைப்பையில் 30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் 14 ஆயிரம் ரூபா பெறுமதியான கைத்தொலைபேசி என்பன [illegible] இருந்துள்ளன. சிறிது நேரத்தில் கைப்பையைப் பார்த்த போது அது அங்கு இருக்கவில்லை.

இதுகுறித்து கோப்பாயைச் சேர்ந்த அப் பெண்ணால் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. (ம-4)

# கோப்பாய் தரவைக் கடலில் முதலைகளின் நடமாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

கோப்பாய் தரவை கடல் பகுதியில் முதலைகளின் நடமாட்டம் தற்போது அதிகரித்துள்ளது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

இங்க கடல் பகுதியில் சிறு மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்களின் வ[illegible]யில் முதலைகள் சிக்குவது அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக் கப்படுகிறது. கடந்த வாரம் மீனவர் ஒருவரின் வலையில் முதலை ஒன்று சிக்கியதால் அந்த முதலையை மீனவர்கள் சிரமப்பட்டு கரைக்கு கொண்டு வந்து சேர்ந்தனர்.

இதேவேளை கடந்த மாதம் செம்மணி கடல் நீர் ஏரியில் முதலை ஒன்று மீனவர் ஒருவரின் வலையில் மாட்டிக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமை குறித்து மீனவர்கள் அச்சம் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)



திருகோ[illegible]மலை, மொறவெவ பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்ட [illegible]க் கட்டடத்தொகுதி பிரதேசசபைத் தலை[illegible] [illegible]பிள்யு. [illegible]ண்டாவால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்[illegible]து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏல விற்பனை
## பனை அபிவிருத்திச் சபை

எமது சபைக்குச் சொந்தமான பழைய இரும்புப் பொருள்கள், அலுமினியப் பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் தளபாடங்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி பழைய பொருள்களை இன்று 07.03.2013 முதல் 20.03.2013 வரை பின்வரும் இடங்களில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பார்வையிடலாம்.

01. **சந்தைப்படுத்தும் பகுதி**
பனை அபிவிருத்திச் சபை, 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
02. **மாதிரிப்பண்ணை**
பனை அபிவிருத்திச் சபை, புளியங்குளம், வவுனியா.
03. **பிராந்திய அலுவலகம்**
பனை அபிவிருத்திச் சபை, பாலமீன்மடு, முகத்துவாரம், மட்டக்களப்பு.
04. **பிராந்திய அலுவலகம்**
பனை அபிவிருத்திச் சபை, உட்துறைமுகவீதி, திருகோணமலை.

மேலும் தங்களால் பெற்றுக்கொள்ளப்படும் பழைய பொருள்களுக்காக செலுத்தப்படக்கூடிய ஆகக்கூடிய விலை தொடர்பான விவரத்தினை எதிர்வரும் 20.03.2013 இற்கு முன் எமது சபையின் தலைமைக் காரியாலயத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கவும்.

**பசுபதி சீவரத்தினம்** தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம், கண்டி வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி இல:- 021 222 2034

(இ/6930)(2.6.7)

# போட்டி பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 7

கோப்பாய் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டி மழைகாரணமாகப் பிற்போடப்பட்டுள்ளதாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

இந்தப் போட்டிகள் நாளை வெள்ளிக்கிழமை நடத்துவதற்கு ஏற்பாடாகியிருந்தது. எனினும் மாற்றுத் திகதி பின்னர் அறிவிக்கப்படவுள்ளதாகவும்,

போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள், நடுவர்கள் இதுதொடர்பில் கருத்தில் கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (16)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111

## விற்பனைக்கு/ மாற்றத்துக்கு

ISUZU 250 வான்
(Full Body) G.E xxxx
விற்பனைக்கு அல்லது
செல்மொடல் வான்
மாற்றத்துக்கு
தொடர்பு: 0773655257

## கலைஞர்கள் தேவை

நடிக நடிகையர், மொடலிங் துறையில் ஆர்வமுள்ளோர் (வயதுக் கட்டுப்பாடு இல்லை), உதவி இயக்குனர் (ஆர்வமுள்ளோர்), பின்னணிக் குரல் பேசுவோர், ஒப்பனைக் கலைஞர்கள் (சினிமா), படப்பிடிப்பாளர் (நவீன கமரா) யாழில் படப்பிடிப்புத் தேவைக்காக அழகிய வீட்டின் ஒருபகுதி எமக்குத் தேவைப்படுகிறது.

ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

Nalluranpictures (Pvt) Ltd.
+94772850490
nalluranpictures@gmail.com
www.nalluranpictures.com

## PC MATE SYSTEMS

**Computer Sales & Repair**
உங்களது கணினியில் ஏற்படும்
*Software/Hardware/Virus*
பிரச்சினைகளுக்கு சிறப்பாகவும் மிக விரைவாகவும் தீர்வைப்பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்.

478 Mother Board
LGA DDR2 Board
DDR/DDR2 Rams
IDE/SATA HDD
LCD Monitors
Computers

மலிவு விலையில்
Core 2 duo, Dual Core, LGA HT
Branded Computers 0779689043

எமது புதிய கிளை
746B பருத்தித்துறை வீதி
நல்லூர்
யாழ் மாநகரசபை முன்பாக

# DANISH REFUGEE COUNCIL

DRC's Sri Lanka program was initiated in 1998 and aims to support durable solutions for Internally Displaced Persons (IDP's) in the north and east of the country. The program includes activities in the sectors of emergency relief, durable solutions, and assisting IDP's as well as returning populations. DRC's Head Office is located in Vavuniya, with district offices in Trincomalee, Jaffna, Killinochchi and a liaison office in Colombo.

## Field Officer-Mullaitivu

The Field Officer will work as a member of the Mullaitivu district team under the leadership of the Head of Office/District Coordinator/Program/Project Manager with the support from the country team. He/ She will play a proactive role in community development activities.

The position is based in Mullaitivu with daily travel within the district and occasionally to other districts.

**Qualifications:**
- University Degree in law, political science, economics or related fields, previous experience with DRC in a similar capacity or 5+ years relevant experience in NGO or INGO with participatory community development.
- Strong background in community development or related fields
- Experience in designing/organizing training programs for rural communities.
- Knowledge of Government structure.
- Confidence and ability to liaise with government authorities, UN agencies, NGO's and communities.
- Written and spoken English & Tamil.
- Flexibility, enthusiasm and a creative approach.
- Good knowledge of international humanitarian standards, including guiding principles on internal, sphere standards, etc.
- Computer skills in MS office, reporting and representation skills.
- Women are strongly encouraged to apply.

## Legal Officer-Mullaitivu

The Legal Field Officer will work as a member of the Mullitivu district team under the leadership of the Head of Office with the support from the country Project Team. He/ She will play a proactive role in awareness raising/training, social mobilization, and support to vulnerable groups.


The position is in Mullaitivu with frequent travel within the district and occasionally to other districts.

**Requirements/Qualifications:**
- Law degree and ability to represent clients in court proceedings in Sri Lanka
- Experience in legal representation in courts & dealing with clients
- Familiarity with the legal system of Sri Lanka
- Experience working in the legal field, e.g. in a law office or legal aid capacity.
- Experience in Knowledge of IDP context and that of vulnerable groups
- Fluency in English, Singhalese and Tamil & Very good writing skills in English, Singhalese and Tamil.
- Willingness to reside, work and travel in Mullaithivu District
- Ability to creatively overcome infrastructural limitations.
- Liaise with local authorities when needed and in accordance with DRC guidelines and regulations

**Applicants:**
- Interested candidates with required experience/qualifications are invited to submit their CV along with two non-related referees, at least one of which should be a current or former supervisor, electronically to recruitment@drc-lk.org or via hardcopy to DRC, No. No.77, 1st Cross Street, Vavuniya in Word or PDF format no later than March of 14 2013 indicating your name and the title of the position in the subject line of the e-mail. Applications will be considered on a rolling basis and the position may be filled prior to the closing date
- Please note that DRC is not to be held responsible for late transmission or non timely receipt of the application.
- Only short listed candidates will be contacted.
- Successful applicants should be able to start work on short notice.
- The recruitment process will consist of written tests and interviews to be held in Mullitivu/Vavuniya.
- Individuals of all ethnic backgrounds are encouraged to apply.
- Canvassing in any form will be a disqualification.

(C/6931-8)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் **பா.இளங்கோ** அவர்களது தந்தையும் எமது ஆசிரியை **திருமதி.சந்திரா இளங்கோ** அவர்களின் மாமனும் ஆகிய

புலவர்
## ம.பார்வதிநாதசிவம்

அவர்களது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
யா/ வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்கள்

## சண்முகசுந்தரம் நீலாம்பிகை
(நயினாதீவு - வண்ணார்பண்ணை)



நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகசுந்தரம் நீலாம்பிகை நேற்று (06.03.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதம்-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சண்முகசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, மதியாபரணம், சரஸ்வதி, கனகம்மா, தருமலிங்கம், இராசரத்தினம் மற்றும் கிருஸ்ணபிள்ளை ஆகியோரின் அன்பு சகோதரியும் மங்கயற்கரசி, காலஞ்சென்ற நடராசா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.03.2013) வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(34261) (8.16)

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தையா குலசிங்கம்
(முன்னாள் உரிமையாளர் அரிசி ஆலை (நிக்கரொட்டியா), சங்கர் ஸ்ரோர்ஸ் (சின்னக்கடை - யாழ்ப்பாணம்))



வேலணை மேற்கு 8ஆம் வட்டாரம் பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளை (முடிப்பிள்ளையார்) கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குலசிங்கம் கடந்த (04.03.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (சிறகடியார்)- காமாட்சியம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை-கஜவல்லியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சறோஜினி தேவியின் ஆருயிர்க் கணவரும் சதீஸ்குமார் (பிரான்ஸ்), சைலஜா (ஜேர்மனி), சங்கரகுமார் (இங்கிலாந்து), சத்தியபாலினி (கனடா), சுரேஸ்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மாவதி (கனடா), இராசலிங்கம், உலகநாயகி, தனலட்சுமி, பேபிராணி, யோகலிங்கம், மகேந்திரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் சொரூபராணி, தற்பரன், ஸ்ரீபதிகந்தராசா, சபாநாயகம், நந்தினி, நாகேஸ்வரி, மகேஸ்வரி, பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் மஞ்சுளா, சசிகுமார் (ரஞ்சன்), கிரிபரா, தேவபிரதாபன் ஆகியோரின் அன்பு மாமனும் ரேஷ்மிகா, ராகுல், ரணுஷா, அபிலாஷ், ஆகாஸ், அபினாஸ், அஜிஸ், சர்வின், அஜய், அபிக்ஷா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (07.03.2013) வியாழக்கிழமை மு.ப. 11.45 மணிக்கு பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

#95, Rue Marcel Sembat,
93430 Villetaneuse, France.

தகவல்:
சகோதர சகோதரிகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசியமட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டி நேற்று யாழில் கோலாகல ஆரம்பம்


விருந்தினருக்கு வீரர்கள் அறிமுகம் செய்யப்பட்ட போது....


பாண்ட் வாத்திய குழுவினரின் அணிவகுப்பின் போது


வீரர்கள் சார்பில் தேனுகா சத்தியப்பிரமாணம் செய்தபோது



நேற்று இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் காட்சிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 7

பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இரு பாலாருக்குமான தேசியமட்ட ஹொக்கிச் சுற்றுப்போட்டி வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்றுக் காலை 9 மணி யளவில் ஆரம்பமானது.

இலங்கைப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் ஏற் பாட்டில் பாடசாலை அணிக ளுக்கு இடையேயான இந்தப் போட்டிகள், யாழ்ப்பாணப் பாடசாலைகள் ஹொக்கிச் சங்கத்தின் தலைவர் நோயல் விமலேந்திரன் தலைமையில் நடைபெற்றன.

இந்த ஆரம்ப நிகழ்வுக்கு 513 படை அணியைச் சேர்ந்த பிரிகேடியர் பிரதிப் டீ சில்வா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னல் விளையாட்டு மைதானத்தின் நுழைவாயிலில் இருந்து ஆரம்ப நிகழ்வு இடம்பெறும் இடம்வரை விருந்தினர்கள் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்தியக் குழுவினரால் அழைத்துவரப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து தேசியக்கொடியினை பிரிகேடியர் பிரதிப் டீ சில்வா ஏற்றிவைத்தார். யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் ஹொக்கிச் சங்கத்தின் கொடியினை சங்கத்தின் தலைவரும் வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியின் அதிபரு மான நோயல் விமலேந்திரன் ஏற்றிவைத்தார்.

இலங்கைப் பாடசாலை ஹொக்கிச் சங்கத்தின் கொடியினை செயலாளர் இந்திரவன்ஸ ஹேரத் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து போட்டியில் பங்குபற்றும் வீரர்கள், வீராங் கனைகள் சார்பாக- யாழ்ப் பாணக் கல்லூரி வீராங்கனை தேனுகா சத்தியப்பிரமாணம் எடுத்தார்.

பின்னர் சுற்றுப்போட் டியில் பங்குபற்றும் அணிக ளின் தலைவர்கள் விருந்தி னர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து முதல்நாள் ஆட்டங்கள் ஆரம்பமாகி நடைபெற்றன.

தேசிய மட்டக் கோட்ட மட்ட ஹொக்கிப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை வரை இடம்பெறவுள்ளன.

(ந-23)



## ஹொக்கியில் கோல் மழை விஜயாக் கல்லூரி வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச் 7

பாடசாலை அணிகளுக்கு இடையேயான 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலா ருக்குமான தேசியமட்ட ஹொக்கிச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று இடம்பெற்ற லீக் முறையிலான ஆட்ட மொன்றில் மாத்தளை விஜயாக் கல்லூரி 12 கோல்களை அடித்து வெற் றியீட்டியது.

மாத்தளை விஜயாக் கல்லூரி அணிக்கும் காலி வித்தியலோகா அணிக்கும் இடையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பாதி ஆட்டத்தில் மாத்தளை விஜயாக் கல்லூரி அணி 10 கோல்களை அடித்து அனை வரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தது.

இரண்டாம் பாதி ஆட் டத்தில் மேலும் இரு கோல்களை அடித்த மாத்தளை விஜயாக் கல்லூரி அணி ஆட்ட நேர நிறைவில் 12:0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது

(ந-23)

## வடமராட்சி வலய வலைப்பந்து வட இந்து மகளிர் வெற்றி வாகை

யாழ்ப்பாணம்,மார்ச் 7



வடமராட்சி வலய வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 17 வயதுப் பிரி வினருக்கான இறுதி யாட்டத்தில் வட இந்து மகளிர் கல்லூரி அணி வாகை சூடிக் கொண்டது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத் தில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் பருத்தித் துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையும் வட இந்து மகளிர் கல்லூரி அணியும் மோதிக் கொண்டன.

ஆரம்பம் முதல் இறுதி வரை விறுவிறுப்பாகவும் பரபரப்பாகவும் இடம்பெற்ற இந்த ஆட்டத்தின், முதல் பாதி ஆட்டத்தில் வட இந்து மகளிர் கல்லூரி அணி வீராங்கனைகள் தமக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்தி 10 புள்ளிகளைப் பெற்றனர்.

அவர்களுக்கு எந்தவிதத் திலும் தாமும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை நிரூபிப்பது போன்று மெதடிஸ்த பெண்கள் அணி வீராங்கனைகளும் புள்ளிகளை குவிக்கத் தொடங் கினர்.

இதனால் முதல் பாதி ஆட்டத்தில் 10:8 என்ற புள் ளிகள் அடிப்படையில் வட இந்து மகளிர் கல்லூரி அணி முன்னணியில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானதும் இரு அணி யினரதும் ஆட்டத்திலும் பர பரப்பு வேகம் ஏற்பட்டது.

மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை அணி யினர் முதற்பாதி ஆட்டத்தில் விட்ட தவறுகளை ஈடுசெய் யும் வகையில் இரண்டாம்பாதி ஆட்டத்தில் விளையாடினர்.

இரண்டாபாதி அட்டத்தில் மெதடிஸ்த பெண்கள் கல் லூரி அணி12:10 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னணி பெற்றது.

ஆட்ட நேர முடிவில் இரு அணியினரும் தலா 20 புள்ளிகளை பெற்றதனால் மேலதிகமாக 5 நிமிடங்கள் வழங்கப்பட்டன.

இதில் வட இந்து மகளிர் கல்லூரி அணியினர் விவே கத்தோடும் வேகத்தோடும் விளையாடி 6 புள்ளிகளைப் பெற, மெதடிஸ்த பெண்கள் அணியினர் 2 புள்ளிகளையே பெறமுடிந்தது.

இறுதியில் 26:20 என்ற புள்ளிகள் கணக்கில் வட இந்து மகளிர் கல்லூரி அணி [illegible] 17 வயதுப் பெண்களுக்கான வலைப்பந்தாட்டத்தில் சம்பியனாகியது. (ந-400)

## இன்றைய ஆட்டங்கள்

கைதடி விநாயகர் சன சமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படும் வலிகாமம் பிரிவுக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையி லான தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை மின்னொளியில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு பற்ற வுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

இரவு 7 மணி

சங்குவேலி ஐக்கிய வி.க. எதிர் கோண்டாவில் அறிவாளி வி.க

* * *

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்தினால் வடமராட்சிப் பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்று வருகிறது.

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதா னத்தில் நடைபெறவுள்ள இன்றைய ஆட்டங்களில் மோத வுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.ப 3 மணி

தொண்டமனாறு கலைவாணி வி.க. எதிர் உடுப்பிட்டி யுத் வி.க

பி.ப 4 மணி

கரவெட்டி சுடர் ஒளி வி.க எதிர் ஸ்ரீ அம்பாள் வி.க.

(ந- 23 -400-422)

## பருத்தித்துறை பெருவிளையாட்டுக்கள் நாளை ஆரம்பம்

கரணவாய், மார்ச் 7

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள் நாளை வெள்ளிக்கிழமை முதல் இடம்பெறவுள்ளன.

பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் வல்வெட் டித்துறை நெடியகாடு இந்து இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நாளை யும்

ஆண், பெண் இருபாலாருக் குமான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் 9ஆம், 10ஆம் திகதிகளிலும்,

இருபாலாருக்குமான கபடிச் சுற்றுப் போட்டி மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் எதிர்வரும் 12ஆம் திகதியும் இடம்பெற வுள்ளதாக பருத்தித்துறை பிரதேச விளையாட்டு அலு வலர் அ.வசந்தன் தெரிவித் துள்ளார். (ந-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலிங்க மீது விசாரணை



இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க ஊடகங்களை அணுகிய முறை தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள இலங்கை கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழு முடிவு செய்துள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபைக்கும், இலங்கைக் கிரிக்கெட் வீரர்களுக்கும் இடையிலான கடந்த வருட ஒப்பந்தம் இந்த மாதம் 3ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

இதனடிப்படையில் புதிய ஒப்பந்தம் ஒன்றை 3 ஆம் திகதியிலிருந்து செயற்படுத்த வேண்டும். ஆயினும் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் புதிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுப்பு தெரிவித்து வந்தனர்.

இதனையடுத்து இந்த ஒப்பந்தத்தில் கையழுத்திடுவது தொடர்பில் முக்கிய கிரிக்கெட் வீரர்களை இலங்கைக் கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவர் சனத் ஜெயசூரியா சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடல் முடிவுற்ற பின்னர் வெளியே வந்த வீரர்களில் சிலர் ஊடகங்களுக்கு சரியான முறையில் பதிலளித்தனர். இதன் போது வந்த லசித் மலிங்கவிடம் ''ஒப்பந்தத்தில் நீங்களும் கையெழுத்து இட்டீர்களா?'' என்று ஊடகவியலாளர்கள் கேட்டனர். இந்தக் கேள்விக்கு ''நான் ஒப்பந்தத்தில் கையெழுத்திடவரவில்லை. நான் விருந்துபசாரத்துக்கே வந்தேன். ஒப்பந்தத்தில் கையெழுத்திட வந்தவர்களிடம் சென்று இதனைக் கேளுங்கள்'' என்று அநாகரிகமான முறையில் பதிலளித்துச் சென்றார் மலிங்க.அதன் பின்னர் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் 22 பேர் குறித்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னரும் ஊடகவியலாளர்கள் மலிங்கவிடம் கேள்விகளைத் தொடுத்தனர். இதனால் கோபமுற்ற மலிங்கா ''இதற்கு முன்னர் நீங்கள் என்னைப் பார்த்தது இல்லையா? உங்களுடைய வேலையைப் பாருங்கள்'' என்று ஊடகவியலாளர்களிடம் கடுமையாக பேசி விட்டுச் சென் றார்.

இதனையடுத்து ஊடகங்களில் கடும் விமர்சனங்களுக்கு உள்ளான லசித்மலிங்க தொடர்பில் மிக விரைவாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு இலங்கைக் கிரிக்கெட் சபையின் நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

(ங)

# மாற்றம்

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி 2 போட்டிகளிலும் ஆஸ்திரேலிய அணியின் துடுப்பாட்ட வரிசையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.


இந்தத்தொடரில் சென்னையிலும், ஹைதராபாத்திலும் இடம் பெற்ற போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி மிக மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தி மிகப்பெரிய தோல்விகளைச் சந்தித்திருந்தது. இந்த நிலையிலேயே துடுப்பாட்ட வரிசையை மாற்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, அடுத்த 2 போட்டிகளிலும், ஆஸ்திரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் முன் வரிசையில் துடுப்பெடுத்தாடவுள்ளார். தற்போது 5 ஆம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாடிவரும் அவர், அடுத்த 2 போட்டிகளிலும் 3 ஆம் அல்லது 4ஆம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாடுவார்.

இந்தத் தொடரில் ஆஸ்திரேலிய அணி சார்பாக சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வரும் மைக்கல் கிளார்க், 5 ஆம் இலக்கத்தில் துடுப்பெடுத்தாடுவதால் அணிக்குப் போதிய பங்களிப்பை வழங்க முடியாதுள்ளது. இதனாலேயே அவர் முன்வரிசையில் துடுப்பெடுத்தாடவுள்ளார்.

இந்த முடிவு காரணமாக, 3 ஆம் இலக்கத்தில் இதுவரை துடுப்பெடுத்தாடி வந்த பிலிப் ஹியூஸ் அடுத்த போட்டிக்கான அணியிலிருந்து நீக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ங)

# ரியல் மட்ரிட் வெற்றி



ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரின் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் ரியல் மட்ரிட் மற்றும் பொருஸியா டோர்ட்மன்ட் அணிகள் வெற்றிபெற்றன.

ரியல் மட்ரிட் அணிக்கும் மன்செஸ்டர் யுனைட்டட் அணிக்குமிடையில் இடம்பெற்ற போட்டியில் ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கணக்கில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

மிக முக்கியமான போட்டியாகக் கருதப்பட்ட இப்போட்டியில் முதற்பாதியில் இரு அணிகளாலும் கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

இரண்டாவது பாதியில், போட்டியின் 48 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டட் அணியைச் சேர்ந்த ராமோஸ் ஒவ்ண் கோல்ஒன்றை அடிக்க, மன்செஸ்டர் யுனைட்டட் அணி 1:0 என்ற முன்னிலையைப் பெற்றுக் கொண்டது.

ஆனால் 56 ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டட் அணியின் நானி சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட, அந்த அணி 10வீரர்களுடன் விளையாடப் பணிக்கப்பட்டது.

இதன் பின்னர் 66ஆவது நிமிடத்தில் மோட்ரிக்கும் 69ஆவது நிமிடத்தில் ரொனால்டோவும் ரியல் மட்ரிட் சார்பாக கோல்களைப் பெற்றுக் கொடுக்க, ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

மற்றொரு போட்டியில் பொருஸியா டோர்ட்மன்ட் அணி, ஷக்தர் டோன்ற்ஸ்க் அணியை 3:0 என்ற கணக்கில் தோற்கடித்திருந்தது. (ங)

# மீண்டும் எழுவார்கள்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆஸ்திரேலிய வீரர்கள் தடுமாறிவருகின்றனர். முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் படு தோல்வி அடைந்துள்ளனர். எனினும் அவர்களுக்கு தனது ஆதரவை ஆஸ்திரேலியாவின் முன்னாள் துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசி தெரிவித்துள்ளார்.

இது குறித்து மைக்கல் ஹசி மேலும் தெரிவித்துள்ளதாவது:-

"இந்தியாவில் இடம்பெறும் டெஸ்ட் தொடர்கள் கடினமானவை.முதன் முறையாக அங்கு போட்டிகளில் பங்குபற்றும் இளையவீரர்களுக்கு இந்திய டெஸ்ட் தொடர்கள் இன்னமும்



கடினமானவையாக அமையும்.

ஆஸ்திரேலிய அணியின் தோல்விகளைப் பார்ப்பதற்குக் கஷ்டமாக இருந்தது. இந்தத் தோல்விகளால் வீரர்களும் மிகுந்த கவலையுடன் காணப்படுவார்கள் எனக் கருதுகிறேன். எனினும் அடுத்த போட்டியில் ஆஸி அணி வீரர்கள் எழுச்சி பெற்று இந்தியாவுக்கு சவாலை வழங்கி, அடுத்த இரு போட்டிகளையும் தம் வசப்படுத்தி தொடரை சமப்படுத்துவார்கள் என நம்புகிறேன். இதேவேளை ஆஸி. அணியைப் பலப்படுத்துவதற்காக எனது ஓய்வு முடிவை உதறிவிட்டு மீண்டும் அணிக்குள் வரும் எண்ணம் எனக்கு இல்லை"- என்றார். [ங]

# தொடர் மேற்கிந்தியத் தீவுகள் வசம்

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணிக்கும், இலங்கை மகளிர் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட '20/20' தொடரின் மூன்றாவது போட்டியிலும் வெற்றிபெற்று மேற்கிந்திந்தியத் தீவுகள் அணி 3-0 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை மகளிர் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணியின் முதலாவது இலக்கு 15 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்ட போதிலும், தொடர்ந்து வந்த வீராங்கனைகள் சிறப்பாக ஆடினர்.

துடுப்பாட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஸ்டீபானி டெய்லர் 46 பந்துகளில் 75 ஓட்டங்களையும், மெரிஸா அகுய்லெய்ரா 25 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணியின் முதலாவது இலக்கு 15 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்ட போதிலும், தொடர்ந்து வந்த வீராங்கனைகள் சிறப்பாக ஆடினர்

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக ஷஷிகலா சிரிவர்தன, இஷானி கௌஷல்யா ஆகியோர் தலா 2 இலக்குகளையும், சாமனி செனவிரத்ன ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

145 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 19.2 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 111 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 34 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக அணித்தலைவி ஷஷிகலா சிரிவர்தன 38 பந்துகளில் 46 ஓட்டங்களையும், பிரசாதினி வீரக்கொடி 23 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பெற்றார். ஏனைய வீராங்கனைகள் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெறத் தவறியிருந்தனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக ஷெனெல் டேலி 5 இலக்குகளையும், ஷெகரா செல்மன் 2 இலக்குகளையும், ட்ரெமெய்ன் ஸ்மார்ட், சுப்ரினா முன்ரோ, ஸ்டீபானி டெய்லர் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக்கையும் கைப்பற்றினர். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாகனம் விற்பனைக்கு**

NP-PR- XXXX தொடர் இலக்கமுடைய TATA 207 மொடல் பிக்கப் Body உடன் (27,000 Km தூரம் ஓடிய) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0788924390, 0718474535

(செ.சத்தியா) (28610)(6.7.11)

**1 ஆம் தவணைப்பரீட்சை (நாவலர் வெளியீடு)**

தரம் 1 முதல் O/L வரை (சகல பாடங்களுக்குமானது)

★ விவரத்தாள்கள் தேவைப்படும் கல்வி நிலையங்கள், பிரத்தியேக வகுப்புக்கள், பெற்றோர்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

**புதிய நாவலர் கல்வி நிலையம்**
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.Phone No-0774598440

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு—**
advt@uthayan.com
0215671111

**SKY Computers (Pvt) Ltd.**

புதிய பிரிவுகள் ஆரம்பம் } 08.03.2013

| | |
|---|---|
| * Dip.in MS office | 2 Months |
| * Dip.in Video Mixing | 2 Months |
| * Dip.in Hardware | 2 Months |
| * Dip.in DTP | 2 Months |
| * Dip.in Web Design | 2 Months |
| * Certificate in Internet and E-mail | 1 Months |

சிங்களம் திங், வெள் - 4.00 P.M
Spoken English with Grammar
திங், புதன் - 11.00 A.M
T.P: 021-222-1417
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மாலை நேர விசேட பிரிவுகள் ஆரம்பம்

13-03-2013 மாலை 4.00மணி
**வங்கியியல் கற்கைநெறிகள்- CBF
**Chartered- CAB 1
**aat (SriLanka) - FOUNDATION
Medium:- Tamil
**A/L – 2015 English & Tamil medium

Further Details: **JAFFNA COLLEGE**
UNDERGRADUATE Dept,
464, Hospital Road, Jaffna.
0212223382

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(முக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

**வெளிவந்து விட்டது யாழ் பாரதி வெளியீடு**

தவணை-1இன் தரம் 6,7,8,9 இற்கான கணிதம், தமிழ், விஞ்ஞானம், வரலாறு, ஆங்கிலம் ஆகிய பாடங்களின், பயிற்சி வினாத்தாள்களின் தொகுப்பு.

பிரதிகளுக்கு முந்துங்கள் 130/= மட்டுமே

அன்னை புத்தகசாலை

**பொருளியற் கல்லூரி**
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
எமது மாணவர்களுக்கான அறிவித்தல்
சனிக்கிழமை 09-03-2013 வழமை போல் சகல வகுப்புகளும் நடைபெறும்.
(சி/6926)(8.6) நிர்வாகி.

**FRENCH LANGUAGE CENTRE**
**FRENCH CLASSES**

Canada, French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட, சர்வதேச சான்றிதழ்களை (International Certificates)பெற்றுக் கொள்ளலாம்.
ஆசிரியர்:- Mr. V. Jegan (Teaching Training in France - 2007, University பகுதி நேர French விரிவுரைகளை மேற்கொள்பவரும்)

Batch 1 - 16.03.13 Sat 11am
Batch 2 - 18.03.13 Mon 3pm
No. 23, Palaly Road, ஆரியகுளம். (அப்பலோ முன்பாக)

Batch 1 - 19.03.13 Tue 11am
No.181, 1st Floor, Main Street, Nelliady. [சோதி வீதி முன்பாக]

இணைவு:- BCLL English Coures....
Deutsch, Sinhala வகுப்புக்களும்.....

0779 789 456

**அறிவித்தல்**

**NEC** ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
**NEW ECONOMICS COLLEGE**
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை 09.03.2013 கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகளுக்கான அனைத்து வகுப்புக்களும் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும்.

**A/L 2015, A/L 2014, A/L 2013, Day Class**
பிரிவுகளுக்கான புதிய அலகுகள் ஆரம்பம்
09.03.2013 சனி 8.00 மணி
நிர்வாகம்

**அறிவித்தல்**

09.03.2013 சனிக்கிழமை வழமையான நேர அட்டவணைப்படி அனைத்து பிரிவு வகுப்புக்களும் நடைபெறும்.

நிர்வாகி

**NEW SCIENCE HALL, JAFFNA.**

(சி/6928)(8.6)

**SUMANS ENTERPRISE**
இல.291, பிறவுண் வீதி,கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்.

மலிவு விற்பனை 31.03.2013 வரை

★நவீன வகையான Wall Tiles, Floor Tiles, Bathroom Tiles, Commede Sets Plastic, Glass Doors,Mirror Sets.

★PVC Pipes & Fittings நீர்த்தாங்கிகள் Pet.Arpico 350L, 500L, 750L,1000L,1500L,2000L,5000L,10000L மேற்படி அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம்.

★தரமான கல்சியம் நீக்கி Air Freshner, Glass Cleaner, Toilet Cleaner, Floor Mopper, Dish Washer என்பவற்றை மொத்த கொள்ளளவில் பெற்றிடலாம்.

★உங்கள் வீட்டின் Tile Electrical மற்றும் நீர்க்குழாய் பொருத்தும் வேலைகள் எம்மால் பொறுப்பேற்று மிகச்சிறந்த முறையில் செய்து தரப்படும்.

Sumansenterprise@gmail.com. தொடர்பு: 021 5100700

தற்போது யாழ் நகரில்...

கட்டிட நிர்மாணத் துறையில் மாத வருமானம் ரூபா 150,000/= இனை உறுதி செய்யும் 18 மாத பாட நெறி



**BTEC HND in**
**- Quantity Surveying**
**- Civil Engineering**
Leading to **BSc (Hons)** From **UK**

**Why Choose BCAS for QS & Civil Engineering ?**

- × நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS, Civil Engineering கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி
- × பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS, Civil Engineering நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- × முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்
- × RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்
- × £4500 வரை பிரித்தானிய Top-Up கற்கைநெறிகளிற்கான புலமைப்பரிசில்
- × தற்போது இலங்கையிலேயே பட்டப் படிப்பை (Top-Up) பூர்த்தி செய்யும் அரிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது
- × கட்டாரில் தொழில் புரிந்துகொண்டே BCAS Qatar Centre இல் Top-Up கற்கைநெறியை பூர்த்தி செய்யும் வாய்ப்பு
- × 14 வருட நம்பகமும் சிறப்பும் மிக்க உயர் கல்விச்சேவை

Macro Ads


**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4737
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 16 - 10 - 1925



மறைவு 17 - 02 - 2012

அமரர்
## இராமலிங்கம்-இளையதம்பி

திதி: 07.03.2013

ஓர் ஆண்டு ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த
பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம்
உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
0776290918.
தற்காலிக முகவரி:
மாப்பியன் லேன்
(மாவத்தை லேன்)
சுதுமலை, மானிப்பாய்.

உங்கள் நினைவுகளுடன்
மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(34147) (10.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.